Registered as a News Paper in Sri Lanka | பக்கம் 24 ரூபா | பெப்.26 – மார்ச் 04, 2015 | 30.00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 1107



## ஐ.நா அறிக்கை


கூட்டமைப்பு – அரசு




## பலப்பரீட்சை!!

வன்முறைகளால் சீரழியும்

## இளம் தலைமுறை



## ஐ.எஸ்.ஐ.எஸ் அட்டூழியம்



மடத்தடியான் எழுதும்

## பலதும் பத்தும்

புதிய பகுதி

சூடு - சுவை - சுவாரசியம் - அதுதான் தினமுரசு

ஆன்மீகம்

## வில்வத்தில் அதிர்வை உணரலாம்

சிவாலயங்களில் உள்ள லிங்கத்தில் இருந்து, இந்த பிரபஞ்சத்தில் நிறைந்துள்ள சக்தி வெளிப்பட்டுக் கொண்டே இருக்கிறது. அந்த சக்தி அதிர்வுகளை ஏற்படுத்தும் ஆற்றல் கொண்டது.

இதனால்தான் பழமை சிறப்புமிக்க ஆலயங்களுக்குள் நாம் செல்லும்போது அதிர்வை உணரமுடியும். சிவன் உறைந்துள்ள லிங்கம்மீது நாம் வில்வ இலைகளைப் போட்டு பூஜை செய்யும்போது, லிங்கத்தில் இருந்து வெளியாகும் அதிர்வு வில்வ இலைகள்மீது பதியும். இதையடுத்து அந்த அதிர்வுகளை வில்வ இலைகள் முழுமையாக ஈர்த்து தக்க வைத்துக் கொள்ளும்.

அந்த ஆற்றல் வில்வ இலைகளுக்கு இருக்கிறது. லிங்கமூர்த்திமீது வைத்து எடுக்கப்படும் வில்வ இலைகளை, நீங்கள் அர்ச்சகரிடம் இருந்து கையில் வாங்கியதுமே, அந்த அதிர்வை உணர்வீர்கள். அந்த அதிர்வு உங்கள் உடல், மனம், ஆரோக்கியத்தில் மாற்றங்களை ஏற்படுத்தும் மகிமைகொண்டது.

இதனால்தான் வில்வ இலையை புனிதமாக கருதுகிறார்கள். அடுத்த தடவை சிவனை வழிபட்டு முடிந்ததும், மறக்காமல் வில்வ இலையை கேட்டுப்பெறுங்கள்.

## தவக்காலம்

தவக்காலம் என்பது சோதனையின் காலம். சோதனை எல்லாம் வல்லவருக்கு மட்டுமல்ல நாம் ஒவ்வொருவரும் அதனை எதிர்கொண்டே ஆகவேண்டும். பட்டினி கிடப்பதனால், வழிபாடுகளில் தவறாது கலந்து கொள்வதினால் மட்டும் நாம் தவக் காலத்தினை சிறப்பித்திட முடியாது. ஒவ்வொரு ஆண்டும் தவக்காலம் நம்மைக் கடந்து செல்லும்போது நமது உள்ளத்தில் ஏதாவது மாற்றத்தை விட்டுச் செல்லவேண்டும். பட்டினி கிடப்பதாலோ தியானம் செய்வதாலோ தவக்காலத்தை சிறப்பித்திடலாம் என்று எண்ணி விட முடியாது.

நாம் செய்கிற தியாகமெல்லாம் அந்த இறைவனுக்கு மட்டுமே தெரியவேண்டும். மற்றவர்களுக்குத் தெரியவேண்டும் என்று செய்கின்ற தியாகமெல்லாம் தியாகமாகாது.

புனிதர்களின் வாழ்வைப் புரட்டிப் பார்த்து மட்டும் அல்ல, படித்துப் பார்த்து அதனைப் பின்பற்றுதல் வேண்டும். அன்னை மரியாளின் தாழ்மை, இந்த பூமியிலே அவளுக்கு கடவுளின் அன்னை என்ற மணிமகுடத்தை பெற்றுத் தந்தது. விண்ணக, மண்ணக அரசியாக அவளை உயர்த்தியது. அவளது பிள்ளைகள்தான் நாம் என்பதை நமது வாழ்வில் அவளது வாழ்வைப் பிரதிபலிப்பதன்மூலம் உறுதிப்படுத்தலாம். இப்படி நடந்தால் அது இறைவனுக்கு மிக உகந்ததாக இருக்கும்.

## அல்லாஹ்வின் அருள்பெற்ற வீடு

நாம் நமது வீட்டை அதன் உள்ளும் புறமும் சுத்தமாகவும் அழகாகவும் நேர்த்தியாகவும் இதமாகவும் வைத்துக் கொள்ளவேண்டும்.

அல்குர்ஆன் கூற்றை அவதானியுங்கள். இங்கே உங்கள் வீடுகளை அல்லாஹ் உங்களுக்கு அமைதியளிக்குமிடமாக அமைத்தான்.

அல்குர்ஆன் 16:80

ஆம். நாம் நமது வீட்டில் அல்லாஹ்வின் ஏவல்களை ஏற்று அவனது விலக்கல்களை தவிர்த்து எமது வீட்டின் இயக்கம் நாளும் இஸ்லாம் மயப்படுத்தப் பட்டதாக இருக்கிறதா என்பதை பார்த்துக் கொள்ளவேண்டும்.

மேலும் நம் வீட்டில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் இடங்கள் ஒதுக்கப்பட்டு அங்கு திரைச்சீலைகள் போடப்படவேண்டும். தொழுவதற்கெனவும் ஓரிடம் எமது இல்லத்தில் இருந்தால் அந்த வீடு அல்லாஹ்வின் அருள் பெற்ற வீடு.

**எம்.சி.கலீல், கல்முனை - 05**

## கவிதைப்போட்டி 1104



● பாராட்டுக்குரியது ●

### பாசத்தின் பிணைப்பு

தன் தங்கை தனக்கே - என
தரைபார்த்து சுமக்கும் அண்ணன்.
தன் அண்ணன் எனக்கே - என
தமயன் அவன் முதுகிலே - தன்
தலைசாய்த்துப் பார்க்கும் - தங்கை
அனைத்தையும் பார்க்கும் போதோ
பாசத்தின் பிணைப்பு இதுதான்
என பிரதிபலிக்கின்றதோ
இங்கு நமக்கு!

யோகன்,
புத்தளம்.

## கவிதைப் போட்டி இல 1107



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல்,
தபாலட்டையில் மட்டும் பதிவுசெய்து அனுப்பிவையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 08. 03. 2015
கவிதைப் போட்டி இல. 1107 தினமுரசு வாரமலர்,
த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### உறவுகளின் கலவை

அண்ணனின் முதுகிலே
தங்கையின் சுகமும்
தங்கையின் சுமையிலே
அண்ணனின் சுகமும்
பார்க்கின்ற போதோ
பாசத்தின் சுவையும்
கலந்துவிட்ட - இந்த
சகோதர உறவுகளின்
கலவைதான் இதுவோ.

இளம்பிறை, புத்தளம்.

### வலி நிறைந்த தேசத்தின் பாசமிது

வலிகளின் வரிகளை
எழுதிய தேசத்தில்
சோகமும் சேர்ந்த
பாசத்தின் வரிகளை
எழுத வார்த்தையில்லை
நெஞ்சம் நிறைந்த
நேசமான பாசமலர்கள்
நிஜத்தின் அடையாளம்
எங்கள் தேசத்தில் நீங்கள்!

மண்டைதீவு மகிழ்நன்.

### சுமை

தந்தை சுமப்பது
குடும்பச் சுமை
தாய் சுமப்பதோ
அன்புச் சுமை
இவன் தன் முதுகில்
சுமந்து செல்வதோ
பாசச் சுமை.

அ.சந்தியாகோ, கண்டி.

### கல்வி

ஊனமுற்ற கால்களோடு
உலாவ முடியாத தங்கையே!
தோள் மீது சுமந்து நான்
செல்கிறேன் உன்னை
கால்கள் ஊனமுற்றாலும்
கல்வியைக் கற்றுக் கொள்!

எம்.சி.கலீல். கல்முனை - 05

## உங்கள் பக்கம்

### வீதிகள் விரைவில் புனரமைக்கப்படுமா?

A-9 வீதி மாங்குளம் நகரப் பகுதி மற்றும் பனிக்கன் குளம் ஆகிய நிழற்குடை இல்லாமையால் சிரமப்படுவதாக பயணிகள் குற்றஞ் சாட்டுகின்றனர்.

மாங்குளத்திலிருந்து முல்லைத் தீவிற்கும் மற்றும் வவுனியா, யாழ்ப்பாணம் மன்னார் போன்ற மாகாணங்களுக்குச் செல்லும் முக்கிய இடமாக மாங்குளம் இருக்கின்றது.

பயணிகள் வெயிலில் வாடி வதங்கி பிரயாணங்களை மேற் கொள்ளவேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது. மழை காலங்களில் மழையில் நனைந்து கொண்டு பஸ் ஏறவேண்டிய நிலை ஏற்படுகின்றது.

அதாவது மாணவர்கள், கர்ப்பிணிப் பெண்கள், வயோதிர்கள் என்போர் பெரிதும் பாதிப்படைகின்றனர்.

மாங்குளத்திலிருந்து மன்னார் மற்றும் முல்லைத்தீவிலிருந்து செல்லும் வீதிகளில் புனரமைக்கப் பட்டு வரும் பேருந்து தரிப்பிடங்கள் விரைவில் புனரமைக்கப்பட வேண்டும்.

எனவே பயணிகளின் நன்மை கருதி விரைவில் நிழற்குடை ஒன்றை அமைப்பதற்கு உரிய அதிகாரிகள் கவனமெடுத்து செயற்படவேண்டுமென உங்கள் பக்கமூடாகக் கேட்டுக்கொள்கிறோம்.

பாதிக்கப்படும் பயணிகள்

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212223628
தொலைநகல்
(Fax): 0212221811
ஈமெயில்:
(E-mail):-
thinamurasu@live.com




## வாசகர்சாலை

### என்னைக் கவர்ந்தவை

முரசு இப்போதுதான் ஜொலிக்கத் தொடங்கியுள்ளது. எல்லா பக்கங்களும் எனக்குப் பிடித்துள்ளது. லேடீஸ் தொடங்கி பாப்பா முரசு வரை சிறப்பாகவே உள்ளது. அதேபோன்று விளையாட்டு பக்கம், 24ஆம் பக்கம், என்பவை என்னைக் கவர்ந்தவை.

24 ஆம் பக்கத்தில் உள்ளூர் விளையாட்டு வீரர்களின் சாதனைகளை முரசை பிரசுரிக்கவேண்டும். அரசியல் கட்டுரைகளும் பிரமாதமாகத்தான் இருக்கின்றது. எல்லா விடயங்களும் என்னைக் கவர்ந்துள்ளது. தினமுரசுக்கு எனது வாழ்த்துக்கள்.

**என்.கவிதா, புற்றளை**

### உழைப்பு தேவை!

வணக்கம்.

தினமுரசில் ஒரே கட்டுரைமயமாகத் தான் இருக்கின்றது. தகவல்கள் அடங்கிய பக்கங்களைக் கொண்டுவரலாம். சிறுசிறு மாற்றங்களாக கொண்டுவரலாம். உடனடியாக மாற்றத்தை எதிர்பார்க்க முடியாதுதான். அதனால் கொஞ்சம் கொஞ்சமாகக் கொண்டுவரலாம். அதை நான் வெகுவிரைவில் எதிர்பார்க்கின்றேன்.

முரசு அவர்களின் வாசகர்களுக்காக நிறையவே உழைக்கவேண்டும்.

ம.சௌவிதன், கிளிநொச்சி.

### ஆசிரியரின் கவனத்திற்கு...

முரசின் சூடு, சுவை, சுவாரசியம் முரசின் அண்மைய காலங்களாகக் காணமுடியவில்லை. அற்புதராஜா காலத்தில் இருந்த சுவாரசியம் இப்போது இல்லை என்றே கூறவேண்டும். முன்னர் இருந்த நிலை வேறு. இப்போது தொழில்நுட்ப ரீதியான மாற்றங்கள் வந்துவிட்டது. அதனால் முரசில் முன்பைவிட மாற்றம் தேவை. முரசு இதை கவனத்தில் கொள்ளவேண்டும். சிலநேரங்களில் சில சில பிழைகளை முரசுவிடுகின்றது. அதையும் ஆசிரியரின் சிறப்புக் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகின்றேன். தினமுரசு வாழ்க!! வாழ்க!!!

மா.சதாசிவம், கொள்ளுப்பிட்டி.

### அமைதியின் சொற்கள்

எந்த ஒரு இடம் எளிமையானதாக, அமைதியானதாக, அழகானதாக, சொந்தமானதாக, உண்மையானதாக இருக்கிறதோ, உண்மையில், கற்பனையில் அல்ல, அந்த இடத்திற்குச் செல்லுங்கள்.

இணையத்தளம்: www.wopg.org

**- பிரேம் ராவத்**

# மாற்றுக் கருத்துக்களுக்கு இடமில்லையேல் அழிவுகளையே சந்திக்க நேரிடும்



### -எம்.சந்திரகுமார் எம்.பி-

**ஒரு நாட்டில் ஒரு தரப்பு கருத்துகளை மட்டும் கேட்டுவிட்டு, மாற்றுக் கருத்தாளர்களின் கருத்துகள் உதாசீனம் செய்யப்பட்டால் அல்லது மாற்றுக் கருத்துக்களுக்கு இடமளிக்காதுவிட்டால் அந்த நாடு சர்வாதிகாரத்தை நோக்கியே பயணிக்கும் என ஈ.பி.டி.பி பாராளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்தார்.**

கிளிநொச்சி. கோணாவில் பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் மேலும் தெரிவிக்கையில், ஜனநாயகம் என்பது எல்லா கருத்துகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். அப்போதுதான் மக்களால் பலமான ஜனநாயக கட்டமைப்பை உருவாக்குவதற்குரிய சூழல் உருவாகும்.

அரசியல்வாதிகள் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாமல்விட்டால் அதற்கு பொறுப்புச் சொல்லவேண்டிய கடமை அவர்களுக்கு உண்டு. அதை விமர்சிப்பதற்கான உரிமை பத்திரிகைகள், பொது அமைப்புகள் மற்றும் மக்கள் என அனைவருக்கும் உண்டு. ஆனால், தமிழர் அரசியலில் ஒரு தரப்பு நியாயம் மட்டும் கேட்கப்படுகிறது. மாற்றுக் கருத்தாளர்களின் நியாயங்கள் கேட்கப்படுவதில்லை.

இந்த கலாசாரம் நீண்டகாலமாக பின்பற்றப்பட்டு வந்த காரணத்தினால்தான் மக்கள் பெரும் அழிவுகளை சந்தித்துள்ளனர். சிலர் கடந்த காலங்களில் நடைபெற்ற சம்பவங்களை மக்களுக்கு நினைவூட்டி, அதன்மூலம் அவர்களின் உணர்வுகளைத் தூண்டி அந்த மக்களின் இரத்தத்தை சூடாக்கி மக்களின் வாக்குகளைப் பெற்று அரசியல் செய்துவருகின்றார்கள்.

ஆனால் நாம் மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்து அதற்கூடாக எமது அரசியல் பலத்தை பலப்படுத்தி, மத்திய அரசுடன் பேரம்பேசி அங்கிருந்து நிதிகளை எமது பகுதிகளுக்கு கொண்டுவந்து அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்துவருகின்றோம்.

## தேசிய அரசாங்கத்தை எதிர்க்கிறது ஜே.வி.பி

தேசிய அசராங்கத்திற்கு ஆதரவளிக்கப் போவதில்லை என ஜே.வி.பி.யின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். தேசிய அரசாங்கத்தை அமைக்கும் முனைப்புக்களுக்கு ஒத்துழைப்பு வழங்கப்பட முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கனவே திட்டமிட்டவாறு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 23ம் திகதி பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். பொதுத் தேர்தலை நடத்தாமல்விட எடுக்கும் எந்தவொரு முயற்சிக்கும் ஜே.வி.பி கட்சி ஆதரவளிக்கப் போவதில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

மெய்யாகவே தேசிய அரசாங்கமொன்றை அமைக்கவேண்டிய அவசியம் இருந்தால் எதிர்வரும் பொதுத் தேர்தலின் பின்னர் அவ்வாறு தேசிய அரசாங்கமொன்றை அமைத்துக்கொள்ள முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

## நூறு நாள் திட்டத்தில் பஸ் தரிப்பு நிலையம்



அரசாங்கத்தின் நூறு நாட்கள் வேலைத்திட்டத்தின்கீழ் கிண்ணியா பிரதேசத்துக்கான பயணிகள் பஸ் தரிப்பிடம் ஒன்றை சின்னக் கிண்ணியா தோனா பிரதேசத்தில் நிர்மாணிப்பதற்காக உள்நாட்டு போக்குவரத்து பிரதி அமைச்சர் எம்.எஸ்.தெளபீக் நடவடிக்கை எடுத்துள்ளார். இதற்கான ஆரம்ப வேலைகள் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டன. இதன்போது நகர அபிவிருத்தி நீர் வழங்கல் வடிகால் அமைப்பு அமைச்சர் ரவூப் ஹக்கீம், காணி அமைச்சர் எம்.கே.டி.எஸ்.குணவர்த்தன, கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபீஸ் நஸீர் அஹமட், கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஜே.எம்.லாஹிர் ஆகியோர் கலந்துகொண்டனர்.



## நிபுணர்கள் கருத்து கவனத்தில் எடுக்கப்படவில்லை

அனர்த்த முகாமைத்துவங்களின்போது கடந்த காலங்களில் நிபுணர்களின் ஆலோசனைகளை கவனத்தில் கொள்ளவில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.


பொலன்னறுவையில் இடம்பெற்ற கடந்த வருடத்தில் ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நஷ்டஈடு வழங்கும் நிகழ்வு நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனை தெரிவித்துள்ளார். மேலும், இயற்கை அனர்த்தங்களின் பாதிப்புக்களை தவிர்த்து கொள்வதற்காக வெளிநாடுகளின் உதவிகளை பெற்று கொண்டேனும் விசேட திட்டங்களை செயற்படுத்தவுள்ளதாகவும் இதன்போது ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில், முழுமையாக பாதிக்கப்பட்ட 393 வீடுகளுக்கும் பகுதியளவில் பாதிக்கப்பட்ட 1034 வீடுகளுக்கும் இதன்போது நஷ்டஈடு வழங்கப்பட்டது.

# அது தாங்கண்ணே இது!

ரிஷி





'இலங்கையில் நடைபெற்ற இறுதி யுத்தத்தின்போது இடம்பெற்றதாக கூறப்படும் போர்க் குற்றங்கள் குறித்து உள்நாட்டு விசாரணையே நடத்தப்படும்' என்று தெரிவித்துள்ள இலங்கை அரசு, 'இந்தியாவும் இதையே விரும்புகிறது. இதற்கு அமெரிக்காவும் ஐ.நாவும் இணக்கம் தெரிவித்துவிட்டன' என்றும் வெளிப்படையாக அறிவித்துள்ளது.

இலங்கை அமைச்சரவை செய்தித் தொடர்பாளர் ராஜித சேனாரட்ன இதை தெரிவித்துள்ளார்.

"இலங்கையில் நடைபெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பாக சர்வதேச விசாரணை நடத்தப் படவேண்டும்" என்ற கோரிக்கை, தமிழ் அமைப்புகள், அரசியல் கட்சிகள் சிலவற்றால் வைக்கப் பட்டிருந்தது. போர்க்குற்றங்கள் தொடர்பாக ஐ.நா.வின் உப அமைப்பு மேற்கொண்ட விசாரணை அறிக்கை ஒன்று தயாராக உள்ளது. மார்ச் மாதம் வெளியிடப்பட இருந்த அந்த அறிக்கை, செப்டெம்பர் மாதத்துக்கு பிற்போடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அமைச்சரவை கூட்டத்தின்பின் செய்தியாளர்களை சந்தித்த அமைச்சரவை செய்தித் தொடர்பாளர் ராஜித சேனாரட்ன, "இலங்கை தொடர்பாக விசாரணை மேற்கொள்வதற்கு வெளிநாட்டவர்கள அவசியமல்ல. சர்வதேசத் தரத்திலான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டியது அரசின் கடமை.

ஆரம்பத்தில் இருந்தே நாம் உள்நாட்டு விசாரணையை நடத்துவதாகவே உறுதியளித்து இருந்தோம். எமது தேர்தல் அறிக்கையிலும், இதையே நாம் குறிப்பிட்டிருந்தோம். இதே எண்ண ஓட்டத்திலேயே இந்தியாவும் உள்ளது. இந்தியாவும் எம்முடன் இருக்கும் என்பது எமக்குத் தெரியும்.

எமது வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர, உள்நாட்டு விசாரணையையே நாம் நடத்துவோம் என்று மிகத்தெளிவாக அமெரிக்காவிடமும் ஐ.நா.விடமும் கூறியுள்ளார். அவர்களும் இதற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர்.

அவர்களால் ஏற்றுக் கொள்ளப் படக்கூடிய சர்வதேச தரத்திலான விசாரணையை எம்மால் செய்ய முடியுமா என்பதைப் பார்பபதற்காகவே, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் (சர்வதேச விசாரணை) அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு ஆறு மாதத்திற்கு ஒத்திவைத்துள்ளனர். அதனால் சர்வதேச தரத்திலான விசாரணையை செய்யவேண்டியது எமது கடமை.

தென் ஆபிரிக்காவிலும் இது போன்ற உள்நாட்டு விசாரணை ஒன்று நடைபெற்றது. 'உண்மை கண்டறியும் ஆணைக்குழு' என்ற அமைப்பு நடாத்திய உள்நாட்டு விசாரணை சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதே பாணியை நாமும் பின்பற்ற முடியும் என்றார்.

ஒரு விஷயம் நன்றாகவே புரிகிறது. இலங்கையில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தி, புதிய அரசை கொண்டுவந்தவர்கள், அமெரிக்கா, இந்தியா மற்றும் மேலைநாடுகள்தான். இவர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்தே, ஐ.நா. விசாரணை அறிக்கை வெளியாவதை பிற்போட்டுள்ளனர். இந்த விடயம், தமிழ் தேசியக கூட்டமைப்புக்கும் மிக நன்றாகவே தெரியும். ஆனால், 'அதுவேற சாமான், இதுவேற சாமான்' என்று தன்னுடைய அரசியல் சாணக்கியத்தை காண்பித்திருக்கிறார் கூட்டமைப்பு தலைவர் இரா.சம்பந்தன்.

ஆனால் பொறுத்திருந்து பாருங்கள், மேற்குலக நாடுகளின் விருப்பத்திற்கு மாறாக தற்போதைய அரசாங்கம் தற்போதைக்கு செயற்படப் போவதில்லை. ஆகவே, அரசாங்கத்தினால் நடாத்தப்படப் போகின்ற விசாரணைகளுக்கு சர்வதேச தரச் சான்றிதழ் வழங்கப்பட்டு, கவுண்டமணி செந்திலின் வாழைப்பழக் கதை பாணியில், 'அதுதாங்கண்ணே இது - இதுதாங்கண்ணே அது' என்று கடந்த நான்கு வருடங்களாகத் திரையிடப்பட்டுவந்த சர்வதேச விசாரணை என்ற படத்திற்கு வணக்கம் சொல்லப்படப்போகிறது.

இதுவும் கூட்டமைப்பினருக்கு தெரியாமல் இல்லை. ஆனால், பாவம் அவர்கள் என்ன செய்வார்கள். தற்போதைக்கு இதை விட்டால் அரசியல் சந்தையில் விலைபோகக்கூடிய கவர்ச்சிகரமான பொருட்கள் எதுவும் அவர்களிடம் இல்லையே...!

தினமுரசு
த.பெ.இல:- 167. யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

## முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

### ஒவ்வாத அணுகுமுறை!

கிழக்கு மாகாணசபையில் முதலமைச்சர் போட்டியில் தோற்றுப்போன கூட்டமைப்பின் தலைமை தற்போது அமைச்சரவையில் பங்கெடுக்கும் அவசரத்தைக் காணமுடிகின்றது.

ஆனால் கூட்டமைப்பை அமைச்சரவைக்குள் உள்வாங்குவதற்கு உளப்பூர்வமான விருப்பத்தை முஸ்லிம் காங்கிரஸோ, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்போ, ஐக்கிய தேசியக் கட்சியோ கொண்டிருக்கவில்லை. இதற்குக் காரணம் மூவின மக்களும் கலந்துவாழும் கிழக்கு மாகாணத்தில் எவ்வாறான அரசியல் அணுகுமுறைகளைக் கொண்டிருக்க வேண்டும் என்பதை முறையாக வகுத்துக்கொள்ளாமல் கூட்டமைப்பு செயற்படுவதேயாகும்.

வடக்கு மாகாண சபையில் அறுதிப் பெரும்பான்மையாகக் கூட்டமைப்பினர் இருக்கின்றபோதும் மாகாணசபையை செயற்திறனோடு முன்னகர்த்தாமல் முடக்கிப்போடுவதற்கான காரணங்களையே தேடிக்கொண்டிருக்கின்றனர். தற்போது புதிய ஆளுநர், புதிய செயலாளர் என அவர்கள் கூறிய தடைகள் தளர்ந்துள்ள நிலையிலும் தீர்மானங்களை நிறைவேற்றுவதைத் தவிர ஆக்கபூர்வமாக எதையும் முன்னெடுக்காத சபையாகவே வடக்கு மாகாணசபையை நிர்வகிக்கின்றனர்.

கூட்டமைப்பினரிடம் சிக்கிக்கொள்ளும் அரசியல் அதிகாரங்கள் முடக்கி வைப்பதற்கே அன்றி முன்னோக்கிச் செயற்படுவதற்கல்ல. மக்களுக்கு அதனாலான நன்மைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கானதல்ல என்ற எழுதப்படாத கோட்பாடு கூட்டமைப்பிடம் உண்டு.

கிழக்கு மாகாணசபையில் சில அதிகாரங்கள் கூட்டமைப்பிடம் பங்கிடப்படுமாக இருந்தால் அந்த அதிகாரங்கள் முடக்கப்படும் என்ற அச்சம் சிங்கள, முஸ்லிம் மக்களிடையே உண்டு.

அரசியல் அதிகாரங்களை மக்களின் உச்ச பயனுக்காக செயற்படுத்தும் ஆளுமைத் திறமையற்ற கூட்டமைப்பினரின் அணுகுமுறைகள் அடிப்படையில் மாறவேண்டும். அவ்வாறில்லாமல் வாக்குகளையும், அரசியல் அதிகாரங்களையும் மட்டும் பங்கிட்டுக்கொள்ள முற்படுவதானது தமிழ் மக்களிடம் எப்படியோ இந்த நாட்டில் உள்ள ஏனைய மக்களிடம் நம்பிக்கையைப் பெறுவதற்கான செயற்பாடாக அமையவில்லை.

தமிழ் மக்களைப்போல் மீண்டும் மீண்டும் தோல்விகளையும், பின்னடைவுகளையும் உணர்ச்சிப் பெருமிதத்தோடு ஏற்றுக்கொள்ள ஏனையவர்கள் தயாராக இல்லை என்பது புரிந்துகொள்ளப்பட வேண்டும்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை
என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

# ஐ.நா அறிக்கை




## கூட்டமைப்பு - அரசு

# பலப்பரீட்சை!!

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையகம் போர்க்குற்றம் தொடர்பான விடயத்தை முன்னிலைப்படுத்துவது முழுக்க முழுக்க அமெரிக்காவின் இலங்கை மீதான நோக்கங்களுக்காக என்பது ஏற்கனவே அலசி ஆராயப்பட்ட விடயம். தமிழ் மக்களுக்கு நியாயத்தைப் பெற்றுக்கொடுப்பதற்காகவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு பரிகாரங்களைப் பெற்றுக் கொடுப்பதற்காகவோ இக்குற்றச்சாட்டுக்கள் முன்னிலைக்குக் கொண்டு வரப்படவில்லை என்பதும் இரகசியமானதல்ல.

தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினைக்குத் தீர்வையும் தமிழ் இனத்திற்கு எதிராகப் புரியப்பட்ட படுகொலைகளுக்கெதிரான நியாயத்தையும் சர்வதேச சமூகமே பெற்றுத் தருமென இதுவரை கூறிவந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் புத்திஜீவிகளும் இப்போது சர்வதேச சமூகத்திற்கு எதிராக குய்யோ முறையோ என்று கூச்சலிடுவது நியாயம்தானா என்பதை தமிழ் மக்களே சிந்திக்க வேண்டும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையகத்தின் இலங்கைக்கு எதிரான போர்க்குற்ற அறிக்கை மார்ச் மாதம் வெளியிடப்படவேண்டும் என்ற கோரிக்கைகளை கூட்டமைப்பின் ஒரு சாரார் முன்னெடுத்துவருகின்றனர். ஆனால் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் மற்றும் சுமந்திரன் ஆகியோர் ஐ.நா அறிக்கையானது செப்டெம்பர் மாதம் வரை ஒத்திவைக்கப்பட்டிருப்பதை மறைமுகமாக ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இரு வேறு நிலைப்பாடுகள் காரணமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தற்போது இரு அணிகளாகப் பிளவுபட்டுள்ளது. ஆனால், இரண்டு தரப்புக்களுமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருமித்த கருத்தாக இதுவரை எதையும் முன்வைக்கவில்லை.

புதிய ஜனாதிபதி மைத்திரி சிறிபால சேன தலைமையிலான அரசுக்கு கால அவகாசம் ஒன்றை வழங்கும்முகமாக அமெரிக்கா தனது அறிக்கையை ஒத்தி வைக்கச் சம்மதித்துள்ளது. மைத்திரிபால அரசுக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகளைக் கையாள்வதற்கு காலஅவகாசம் ஒன்று தேவை என்பதை ஏற்றுக் கொள்வதாக ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் தமக்கு வழங்கிய வாக்குறுதியை தற்போது கூட்டமைப்பு மீறிச் செயற்படுவதான வருத்தத்தை ஜனாதிபதி மைத்திபால தலைமையிலான அரசு தெரிவித்துள்ளது.

ஆனால், இரட்டைப் பாதையில் பயணிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரோ தென்னிலங்கை அரசுடன் நட்புறவைக் காட்டுவதற்கு சம்பந்தன் மற்றும் சுமந்திரன் ஆகியோர் ஒரு பாதையிலும், வடக்கில் அரச எதிர்ப்பு, அரசு மீதான கடுமையான விமர்சனங்கள் என்றவாறான கூட்டமைப்பின் ஏனையோரின் முன்னெடுப்புக்கள் தொடர்கின்றன. இதன் உச்சமாக கடந்தவாரம் அரசுடன் நெருக்கமான உறவைக் கொண்டிருக்கும் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனைத் துரோகியென வர்ணித்து அவரின் கொடும்பாவியையும் எரித்தனர். ஆனால் கூட்டமைப்பின் தலைவரான சம்பந்தனின் கொடும்பாவியை எரிக்கும் துணிச்சல் அவர்களுக்கு இருக்கவில்லை.

இதற்குக் காரணம் யாழ்ப்பாணத்துப் பாராளுமன்ற ஆசனங்களில் சம்பந்தனுக்கு ஒன்றை ஒதுக்கும் அவசியம் இல்லை. ஆனால் சுமந்திரன் இம்முறை வடமராட்சியில் களமிறங்குவார் என்ற நிலையிலேயே அவரைத் துரோகியாக சித்தரிக்கின்ற முனைப்புக்கள் தொடர்கின்றன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையகம் போர்க்குற்றம் தொடர்பான விடயத்தை முன்னிலைப்படுத்துவது முழுக்க முழுக்க அமெரிக்காவின் இலங்கைமீதான நோக்கங்களுக்காக என்பது ஏற்கனவே அலசி ஆராயப்பட்ட விடயம். தமிழ் மக்களுக்கு நியாயத்தைப் பெற்றுக் கொடுப்பதற்காகவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு பரிகாரங்களைப் பெற்றுக்கொடுப்பதற்காகவோ இக்குற்றச் சாட்டுக்கள் முன்னிலைக்குக் கொண்டுவரப் படவில்லை என்பதும் இரகசியமானதல்ல.

அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான துணைச் செயலர் நிஷா தேசாய் பிஸ்வால் இலங்கைக்கு வருகைதந்திருந்தபோது ஐ.நா மனித உரிமை ஆணையகத்தின் அறிக்கை ஒத்திவைக்கப்படும் என்பதை கோடிட்டுக் காட்டியிருந்தார். அப்போதே அதை மறுத்து மார்ச் மாதத்தில் அறிக்கை கொண்டுவரப்படவேண்டும் என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதர அமைப்புக்களோ வலியுறுத்திப் போராடவில்லை.

தற்போது மனித உரிமை ஆணையகத்தினால் அறிக்கை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், மனித உரிமை ஆணையகத்தின் முடிவை மாற்றி மார்ச் மாதத்திலேயே அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒரு பகுதியினரும், இதர அமைப்புக்களும் குரல்கொடுப்பது அரசியல் உள்நோக்கம் கொண்ட செயற்பாடுகளேயன்றி வேறொன்றுமல்ல.

இதுவும் கடந்த காலத்தைப் போல எல்லாமும் கையை மீறிச் சென்றபின் கடமைக்காக அரங்கேற்றப்படும் அரசியல் நாடகங்களில் ஒன்றாகவே பார்க்கப்படலாம்.

இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்தவரை நிறைவேற்று அதிகார சபையில் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனை இணைத்துக்கொண்டு சர்வதேச சமூகத்தின் அழுத்தத்தை ஒத்தி வைக்க முடியும் என எடுத்துக்கொண்ட முயற்சி வெற்றியளித்துள்ளது.

ஆகவே, தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினைக்குத் தீர்வையும் தமிழ் இனத்திற்கு எதிராகப் புரியப்பட்ட படுகொலைகளுக்கெதிரான நியாயத்தையும் சர்வதேச சமூகமே பெற்றுத் தருமென இதுவரை கூறிவந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் புத்திஜீவிகளும் இப்போது சர்வதேச சமூகத்திற்கு எதிராக குய்யோ முறையோ என்று கூச்சலிடுவது நியாயம்தானா என்பதை தமிழ் மக்களே சிந்திக்கவேண்டும்.

மைத்திரிபால சிறிசேனவின் புதிய அரசு தமிழ் மக்களுக்குத் தீர்வை வழங்கும் என்றும் சர்வதேசம் தீர்வை வழங்கும் என்றும் தமிழ் மக்களை நம்பச் செய்த கூட்டமைப்பினர் தற்போது இரண்டு தரப்புமே தமிழ் மக்களுக்கு எதையும் வழங்காது என்றும் கூச்சமில்லாமல் கூறுகின்றனர்.


வடக்கில் இருந்து தென்னிலங்கை அரசுக்கு எதிராக குரல்கொடுக்கும் கூட்டமைப்பினரின் தலைமை தென்னிலங்கை அரசின் கொள்கை வகுப்புச் சபையில் பங்காளியாக அமர்ந்திருப்பதை வெளிப்படையாக விமர்சிக்க மறுப்பது முரண்பாடுகளின் உச்சமாகும்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, பிரேமதாசா, ரணில் விக்கிரமசிங்க, சந்திரிக்கா, மகிந்த ராஜபக்ஷ, இப்போது மைத்திரிபால சிறிசேன என தென்னிலங்கையின் அத்தனை தலைவர்கள்மீதும் ஒரே மாதிரியான குற்றச்சாட்டைக் கூட்டமைப்பினர் கூறிவருகின்றனர்.

ஆனால் தமிழ் மக்களிடம் தாம் வழங்கிய நம்பிக்கைகள், வாக்குறுதிகள் எவ்வாறு பொய்யாகிப் போனது அல்லது மறக்கடிக்கப்பட்டது என்பதை வசதியாக மூடி மறைத்துவிடுகின்றனர்.

பாராளுமன்றத் தேர்தல் வரலாம் என்ற எதிர்பார்ப்பு எல்லோரையும் பற்றிக்கொண்டுள்ள நிலையில் தென்னிலங்கை அரசுக்கு எதிராக போர்க் கொடியை தூக்குவதைத் தவிர கூட்டமைப்புக்கு வேறு மார்க்கம் இல்லை. தேர்தல் நெருங்க நெருங்க அரசுடன் நடத்தும் தேனிலவு மெல்லக் கசக்கத் தொடங்கியிருக்கிறது.

பாராளுமன்ற ஆசனத்திற்கான போட்டியில் கூட்டமைப்புக்குள்ளேயே துரோகிகளைத் தேடும் புதிய போராட்டத்தை சுமந்திரனின் கொடும்பாவி எரிப்பு ஆரம்பித்து வைத்திருக்கின்றது.





# புலிகளின் வதை முகாமில் மணியம்

வதை 154

அவ்வாறாகப் பயணித்து மாலை மங்கும் நேரம் பூநகரி வாடியடியை அடைந்தோம்.

சிறிதுநேரத்தில் சங்குப் பிட்டியை அடைந்துவிடுவோம். சங்குப்பிட்டி - கேரதீவு கடற் பயணத்தை இரவுநேரத்தில் மேற்கொள்வதுதான் பாது காப்பானது என்றபடியால், அங்கு சிறிதுநேரம் தாமதித்து விட்டு பொழுது கருகியதும் பயணத்தைத் தொடர்ந்தோம். இதற்கிடையில் பூநகரியில் வைத்து சில முஸ்லீம் சகோதரர்களும் எமது வாக னத்தில் ஏறிக்கொண்டனர். அவர்களது கைகளில் பெரிய பெரிய பைகளில் நிறையப் பொருட்கள் இருந்தன. பெரும்பாலும் அவை கோதுமை மா, சீனி போன்ற பொருட்கள். அவர் களில் இரண்டொருவர் எனக்குத் தெரிந்தவர்களாக இருந்ததால், அது பற்றி அவர்களிடம் விசாரித்தேன்.

யுத்தம் காரணமாக அப்போதைய ஜனாதிபதி ஆர்.பிரேமதாசவின் ஐ.தே.க அரசாங்கம் யாழ்ப்பாணத்தின் மீது பொருளாதாரத் தடை விதித்திருந்ததால், அங்கு அத்தியாவசியப் பொருட்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவியது. எனவே வாய்ப்புள்ளவர்கள் வெளி யிடங்களுக்குச் சென்று பெரும் சிரமங்களுக்கு மத்தியில் பொருட்களை வாங்கிவந்தனர்.

யாழ்ப்பாண முஸ்லீம் களுக்கு பூநகரிப் பகுதியில் இருந்த நாச்சிக்குடா கிராமத்தில் உறவுகளும் தொடர்புகளும் இருந்ததால், அவர்கள் அங்கே சென்று சில அத்தியா வசியப் பொருட்களை வாங்கி வந்துகொண்டிருந்தனர் என்பது தெரிந்தது.

இப்பொழுது எனக்கு ஒரு தர்மசங்கடமான நிலை உருவாகியது. கடந்த சில நாட்களாக என்னுடன் இரவும் பகலும் ஒன்றாக வாழ்க்கை யைக் கழித்துவந்த நண்பர் சிதம்பரநாதனும் நானும் பிரிய வேண்டிய நேரம் வந்துவிட்டது. வழிப்பயணத்தில் சந்தித்துப் பழகினாலும், மிக நீண்டகாலம் பழகியது போன்ற ஓர் உணர்வு எங்கள் இருவருக்குள்ளும் உருவாகிவிட்டிருந்தது. அவர் என்னை தன்னுடன் வந்து அன்றிரவைத் தனது வீட்டில் கழித்துவிட்டு, மறுநாள் காலையில் பயணத்தைத் தொடரும்படி எவ்வளவோ வலியுறுத்திக் கேட்டார். ஆனால் நான் அதற்குச் சம்மதிக்கவில்லை.


அதற்கு இரண்டு காரணங் கள் இருந்தன. ஒன்று இவ்வளவு நாட்கள் கஸ்டப்பட்டு இதுவரை தூரமும் வந்துவிட்டு, உடனடி யாகச் சென்று எனது மனைவி யைப் பார்க்காமல் இருப்பதை என் மனம் ஒப்பவில்லை. இரண்டாவது காரணம், யுத்தத்தில் ஏதாவது எதிர் பாராத திருப்பங்கள் ஏற்பட்டு சங்குப்பிட்டி - கேரதீவுக் கடலேரியை இராணுவம் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிட்டால், எனது பயணம் திரிசங்கு நிலையை அடைந்து விடலாம் என அஞ்சினேன். எனவே கனத்த இதயத்துடன் நண்பர் சிதம்பரநாதனிடம் விடைபெற்றுக் கொண்டு பயணத்தைத் தொடர்ந்தேன். அதன்பின்னர் தொடர்ந்த யுத்த சூழ்நிலை காரணமாக அந்த இனிய நண்பரை இன்றுவரை நான் சந்திக்க முடியவில்லை.

நாம் பிரயாணம் செய்த வாகனம் இக்கரையில் சங்குப் பிட்டியுடன் நின்றுவிட, படகு மூலம் கடலேரியைக் கடந்து கேரதீவுக் கரையை அடைந் தோம். அங்கும் இது போன்ற ஒரு வாகனம் நின்றது. அதில் எல்லோரும் ஏறி யாழ்ப் பாணத்தை நோக்கிப் பயணத்தைத் தொடர்ந்தோம். சிறிதுதூரம் சென்றதும் எமது வாகனத்தில் ஏதோ இயந்திரக் கோளாறு ஏற்பட்டு, அது அசையமறுத்து நின்றுவிட்டது. சாரதியும் துணைக்கு வந்தவரும் ஏதேதோ முயற்சிகள் எல்லாம் செய்துபார்த்தனர். அவர்கள் அந்த முயற்சியில் ஈடுபட்டு இருக்க நாம் வாகனத்தைவிட்டு இறங்கி காலாற சிறிது தூரம் நடந்துவந்தோம். எவ்வளவோ முயன்றும் வாகனம் அசைவதாகக் காணோம். சுமார் ஒரு மணித்தியாலத்தின் பின்னர் சாரதி எம்மிடம் வந்து வருத்தத்தைத் தெரிவித்து, தமது வாகனத்தால் மேற் கொண்டு பயணத்தைத் தொடரமுடியாது எனத் தெரிவித்தார். அவரைக் குற்றம் சொல்லியும் பயனில்லை. "எல்லாம் அவன் செயல்" என்பதுபோல, எல்லாம் அவர்கள் செயல். அதாவது பிரேமதாச, பிரபாகரன் என்ற இரு தெய்வங்களினதும் அருட்கொடை!

இப்பொழுதே நேரம் இரவு 9 மணி அளவில் ஆகி விட்டதால், இனி அந்தப் பாதை யில் வாகனங்கள் எதுவும் வருவதற்கு வாய்ப்பில்லை. எனவே நடராசா (நடை) தான் ஒரே வழி. சுமைகளைத் தூக்கிக்கொண்டு நடக்க ஆரம்பித்தோம். சிறிதுநேரத்தில் கேரதீவுப் பக்கத்தில் இருந்து நாம் போகும் திசையை நோக்கி வாகனம் ஒன்று வந்தது. அது புலிகளின் ஒரு பிக்கப் வாகனம். அதில் மூவர் இருந்தனர். எமக்கு அருகில் நிறுத்தி, எம்மைப் பற்றி விசாரித்தனர். எல்லா விபரங்களையும் அறிந்தபின்னர் புறப்பட்டுச் செல்லத் தயாராகினர். எங்களில் ஒருவர் அந்த வாகனத்தில் எம்மில் சிலர் வரலாமா எனத் தயக்கத்துடன் வினவினர். ஆனால் புலிகள் தாம் ஏதோ அவசர அலுவலாகச் செல்வதாகக் கூறிவிட்டு, பதிலுக்குக் காத்திராமல் பறந்து சென்றுவிட்டனர்.

நாம் வேறு வழியின்றி நடையைத் தொடர்ந்தோம். முதலில் கண்டி வீதியிலிருந்த செம்மணிச் சந்தியை அடைந்தோம். நேராக யாழ்ப்பாண நகருக்குச் செல்வது அந்த நேரத்தில் பாதுகாப்பு இல்லையென்ற படியால், நாயன்மார்கட்டு வீதி வழியாக முத்திரைச் சந்தியை நோக்கித் தொடர்ந்து நடந்தோம். கூடவந்த முஸ்லீம் நண்பர்கள் என்னுடன் பல விடயங்களையும் உரை யாடியவாறு வந்தனர். யாழ்ப்பாணம் முஸ்லீம் வட்டாரத்தில் ஆரம்பகாலம் முதல் எமது புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி மிகவும் பலமான நிலையில் இருந்தது அவர்களுக்குத் தெரியும்.

(வதை தொடரும்...)



# முதலாவது பிரமாண்ட ரயில் கொள்ளை

"என்ன வியாபாரம்"

"துப்பாக்கி"

"அவருக்கு ஒரு துப்பாக்கி வேண்டுமாம். அப்படித்தானே"

"ஒன்றல்ல. ஐந்து துப்பாக்கிகள் அதுவும் ஒரு வாரத்துக்குள் வேண்டுமாம்"

"ஐந்து துப்பாக்கிகளா?" நிமிர்ந்து அமர்ந்தார் ஹரன்பி. அறையின் மூலையில் அமர்ந்தபடி தலையைக் குனிந்து ஏதோ எழுதிக்கொண்டிருந்த ஹரன்பியின் உதவியாளர் மிஸ்டர் ஷார்ப்பும் நிமிர்ந்து பார்த்தார்.

மிஸ்டர் சிம்ஸ் என்ற நபரை இனி எப்படித் தேடுவது என்று ஹரன்பியும், ஷார்ப்பும் தலையை உடைத்துக் கொண்டு இருந்தபோதுதான், பில் வந்துசேர்ந்தார்.

இந்த பில்தான், கடந்த அத்தியாயத் தில் எட்வேர்ட்டுக்கு துப்பாக்கிகள் விற்க வியாபாரம் பேசிய நபர்.

"என்ன பில்? புதிய தகவல் ஏதாவது இருக்கிறதா"

"இல்லாவிட்டால் உங்களைத் தேடி வருவேனா"

"எங்கே சொல்லுங்கள் பார்க்கலாம்" என்று கூறியபடி ஹரன்பி ஒரு தங்க நாணயத்தை எடுத்து மேஜையில் வைத்தார். ஆனால் பில்லின் கைகளில் கொடுக்கவில்லை. பில் கூறப்போகும் தகவல் பெறுமதியுடைய தகவலாக இருந்தால், தங்க நாணயம் பில்லுக்குச் சொந்தம் என்று சொல்லாமல் சொல்லும் செய்கை அது.

தங்க நாணயத்தைப் பார்த்தபடி பில் வாயைத் திறந்தார். "நேற்று ஒருவர் வந்து என்னுடன் வியாபாரம் பேசினார். வந்த நபர் மகா பதட்டத்தில் இருந்தார்"

"என்ன வியாபாரம்"

"துப்பாக்கி"

"அவருக்கு ஒரு துப்பாக்கி வேண்டுமாம். அப்படித்தானே"

"ஒன்றல்ல. ஐந்து துப்பாக்கிகள் அதுவும் ஒரு வாரத்துக்குள் வேண்டுமாம்"

"ஐந்து துப்பாக்கிகளா?" நிமிர்ந்து அமர்ந்தார் ஹரன்பி. அறையின் மூலையில் அமர்ந்தபடி தலையைக் குனிந்து ஏதோ எழுதிக்கொண்டிருந்த ஹரன்பியின் உதவியாளர் மிஸ்டர் ஷார்ப்பும் நிமிர்ந்து பார்த்தார்.

"ஆம் ஐந்து துப்பாக்கிகள். பணத்தைப் பற்றி கவலையில்லை இந்த நபருக்கு. தங்க நாணயங்களாக வைத்திருக்கிறார்"

"ஒரு வாரம் என்றால், அடுத்த வெள்ளிக்கிழமை துப்பாக்கி வேண்டும். அப்படித்தானே" என்றபடி கலண்டரைப் பார்த்தார் ஹரன்பி.

"வெள்ளிக்கிழமை இல்லை. வியாழக்கிழமை. நேற்றிலிருந்து ஒரு வாரம்"



"ஆம்... ஆம்... வியாழக்கிழமை. ஐந்து துப்பாக்கிகளை வைத்து என்ன செய்யப்போகிறாராம் அவர்? ஏதாவது சொன்னாரா?"

"இல்லை சொல்லவில்லை. ஆனால் காலை 10 மணிக்கெல்லாம் துப்பாக்கி கையில் கிடைத்துவிட வேண்டும் என்று நேர அவகாசம் கொடுத்துவிட்டு சென்றிருக்கிறார்."

"நீங்கள் என்ன சொன்னீர்கள்"

"மதியம் 12 மணிக்குத் தருவதாகச் சொன்னேன். அது டூ லேட் என்றார். 10 மணிக்குக் கண்டிப்பாக துப்பாக்கிகள் தேவை என்று பிடிவாதம் பிடித்தார்"

"ஓகோ... 12 மணிக்குக் கொடுத்தால் தாமதமாகிவிடும். 10 மணிக்குத் துப்பாக்கிகள் தேவை" என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டார் துப்பறிவாளர் ஹரன்பி. அப்படியானால் வியாழக்கிழமை காலை 10 மணியிலிருந்து 12 மணிக்குள் துப்பாக்கிகளை உபயோகிக்க வேண்டும். அதுவும் ஐந்து துப்பாக்கிகள். ஷோ. இதில் ஒரு குழுவே சம்மந்தப்பட்டிருக்க வேண்டும்"

பில். மேஜையில் இருந்த தங்க நாணயத்தைப் பார்த்தபடி மௌனமாக நின்றிருந்தார்.



"வந்த நபர் தன்னுடைய பெயர் என்னவென்று சொன்னாரா"

"சொல்லவில்லை"

"சொல்லமாட்டார்கள். சொன்னாலும் அது ஒரு போலிப் பெயராக இருக்கும். சரி. ஆள் பார்வைக்கு எப்படி இருந்தார்"

"உயரமான நபர். விலையுயர்ந்த ஆடைகள் அணிந்திருந்தார். பார்வை க்குப் பெரியமனிதர் போலிருந்தார்"

"வேறு ஏதாவது அடையாளம்?"

"வேறு அடையாளம்..." பில் யோசித்துவிட்டுச் சொன்னார் "சிவப்பு நிறத்தில் தாடி வைத்திருந்தார்"

"என்ன என்ன"

"சிவப்பு நிறத் தாடி. செம்பட்டை நிறம்"

(கொள்ளை தொடரும்...)




# நிலமெல்லாம் இரத்தம்

பா.ராகவன்

ஆனால் இந்தப் போராளி இயக்கங்கள் சமயத்தில் தீவிரவாதச் செயல்களில் ஈடுபடுவதுண்டு என்பதும் மறுக்கமுடியாத உண்மையே ஆகும். உதாரணமாக, யசீர் அரபாத் தலைமைப் பொறுப்புக்கு வந்த ஐந்தாம் ஆண்டு, அதாவது 1974ஆம் வருடம் பி.எல்.ஓ.வின் ஒரு குழுவினர் இஸ்ரேலில் உள்ள மா'லாட் (Ma'alot)



என்கிற இடத்தில் ஓர் ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் புகுந்து கையெறி குண்டுகளை வீசி இருபத்தொரு குழந்தைகளை ஈவிரக்கமில்லாமல் கொன்று வீசினார்கள். இது சந்தேகத்துக்கு இடமில்லாமல் தீவிரவாதம். இன்னும் சொல்லப்போனால் கொலை வெறியாட்டம்.

இஸ்ரேலிய அரசுக்கு எதிரான யுத்தத்துக்கும் அந்த அப்பாவிக் குழந்தைகளுக்கும் என்ன சம்பந்தம்? யூதர்களில் சிறுவர், பெரியவர் என்று பாராமல் அனைவரையும் கொன்று குவிக்க உத்தரவிட்ட ஆரியக் கிருத்தவரான ஹிட்லருக்கும் இவர்களுக்கும் என்ன வித்தியாசம் என்று கேட்டது இஸ்ரேல்.

நியாயப்படுத்தவே முடியாத இத்தகைய செயல்களால்தான் போராளி இயக்கங்களுக்கு சர்வதேச ஆதரவோ, அனுதாபமோ பெரும்பாலும் கிடைக்காமல் போகிறது. போராளி இயக்கங்களின் நோக்கத்தில், செயற்பாடுகளில் ஏற்படும் இத்தகைய சறுக்கல்களால்தான் அவர்கள்மீது விழவேண்டிய நியாயமான கவனம் விழாமல் போகிறது.

அரபாத் பொறுப்புக்குவந்த ஆரம்ப வருடங்களில் மிகக்கவனமாக இஸ்ரேலிய இராணுவம், காவல்துறை போன்ற இலக்குகளின்மீது மட்டுமே தாக்குதல் நடத்தப்பட்டது. இது இஸ்ரேலுக்குள்ளாக, இஸ்ரேலுக்கு வெளியிலும் பல்வேறு தேசங்களில் பி.எல்.ஓ.வின் போராளிகள் கவன ஈர்ப்புக்காக ஏராளமான தாக்குதல் சம்பவங்களில் ஈடுபட ஆரம்பித்தார்கள். ஆனால் மிகக் கவனமாக அத்தனை தாக்குதல்களுமே யூத இலக்குகளின் மீது மட்டுமே இருக்கும்படி பார்த்துக் கொண்டார்கள்.

உலகம் முழுக்க பி.எல்.ஓ, பி.எல்.ஓ என்று பேசிக்கொண்டிருந்த காலமது. யார் என்ன என்கிற விவரம்கூடத் தெரியாமல் அரபாத்தைப் பற்றிப் பேசினார்கள். அணுகுண்டுகள் வைத்திருக்கும் இயக்கம் என்றெல்லாம் கதை பரப்பினார்கள். உண்மையில் நாட்டு வெடிகுண்டுகளுக்கு அப்பால் பி.எல்.ஓ. வினரிடம் அப்போது வேறெந்த ஆயுதமும் கிடையாது. வாங்குவதற்கும் பணம் கிடையாது. முதலில் பி.எல்.ஓ.வின் பிரசாரப்பிரிவினர் அரபு தேசங்களெங்கும் கால்நடையாகப் பயணம் மேற்கொண்டு துண்டேந்தி வசூல் செய்தே இயக்கத்தை வழிநடத்திக்கொண்டு இருந்தனர்.

சவூதி அரேபியா போன்ற மிகச்சில தேசங்களின் அரசுகள் மட்டும் மறைமுகமாக பி.எல்.ஓ.வுக்கு நிதியுதவி செய்திருப்பதாகத் தெரிகின்றது.

1973ஆம் ஆண்டுவரை பி.எல்.ஓ.வுக்கு நிதிப் பிரச்சினை மிகப்பெரிய அளவில் இருந்திருக்கிறது. இது சந்தேகத்துக்கு இடமில்லாத உண்மை.

ஒரு பக்கம் பி.எல்.ஓ.வில் இருந்து இயக்கங்கள் மிகத்தீவிரமாக இஸ்ரேலை ஒழிப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த அதே காலகட்டத்தில் பலஸ்தீனில் வேறு சில புதிய இயக்கங்களும் தோன்றத் தொடங்கின.

இஸ்ரேல் என்கிற திடீர் தேசத்தை வேரோடு ஒழித்துவிட்டு, அகண்ட பலஸ்தீன் மறுபடியும் ஸ்தாபிப்பதற்காக நாங்கள் திட்டம் தீட்டுகிறோம். இதில் எந்த ஒளிவுமறைவும் இல்லை. ஆயுதங்கள்மூலம் அச்சமூட்டுவோம். இனவிருத்திமூலம் கலவரமூட்டுவோம். யூதர்களைத் தூங்கவிடமாட்டோம். ஜெருசலேம் உட்பட, இஸ்ரேல் எங்களிமிடருந்து அபகரித்த அத்தனையையும் திரும்பப் பெறாமல் ஓயமாட்டோம் என்கிற யசீர் அரபாத்தின் அன்றைய பிரகடனம் ஒரு வேத மந்திரம்போல அத்தனைபேரின் செவிகளிலும் விழுந்து சிந்தனையைக் கிளறிவிட்டதன் விளைவே இது.

இப்படித் தோன்றிய இயக்கங்களில் சில திசைமாறிப் போயின என்றாலும் பெரும்பாலான இயக்கங்கள் பி.எல்.ஓ.வில் சேராவிட்டாலும் பலஸ்தீன் விடுதலை இயக்கங்களுக்குத் தம்மாலான உதவிகளைச் செய்யத் தயங்கவில்லை. குறிப்பாக ஆயுதங்களை ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு எடுத்துச் செல்வது அன்றைக்கு பி.எல்.ஓ.வினரின் மிகப்பெரிய பிரச்சினையாக இருந்தது.

குறிப்பாக அரபு தேசங்களுக்கு வெளியே அவர்கள் திட்டமிட்ட ஒவ்வொரு கவனயீர்ப்புச் செயலுக்கும் தேவையான ஆயுதங்களைக் கடத்தியோ, உருவாக்கியோ, வாங்கியோ தரும் பணியைச் செய்ய இத்தகைய இயக்கங்கள் மிகவும் உதவிசெய்தன.

அப்படி 1967 யுத்தத்துக்குப் பிறகு உதித்த பலஸ்தீன் இயக்கங்களுள் ஒன்றுதான் ஹமாஸ்.

(தொடரும்...)




# பூமிகா காத்திருக்கிறாள்!

02

அளவெட்டி ப.உதயகுமார்

> யுத்தம் என்னும் கொடிய அரக்கன் இத்தகைய பரிதாப நிலையை எங்கள் தமிழ் பெண்களுக்கு விட்டுச்சென்றது. கொடுமையிலும் கொடுமையாக உள்ளது. எத்தனை ஆயிரம் இளம் பெண்கள் விதவைகளாகி வாழ வழி தெரியாது தவித்துக் கொண்டிருக்கின்றனர்.

பூமிகாவின் கணவன் கமலேந்திரன் இருந்திருந்தால் அவளுக்கு இந்த நிலை வந்திருக்காது. அவளின் கணவன் கைது செய்யப்பட்டுக் காணாமல் போனதிலிருந்து பூமிகா தான் குடும்பத்தின் பாரத்தை சுமந்துவருகின்றாள்.

கமலேந்திரன் எங்கே இருக்கிறான். உயிருடன் இருக்கின்றானா?. இல்லையா? என்பதுகூட பூமிகாவுக்குத் தெரியாது. தான் சுமங்கலியா? அல்லது அமங்கலியா? என்ற விடைதெரியாத வினாக்களைச் சுமந்துகொண்டு தமிழர் தாயகமெங்கும் வாழ்ந்துகொண்டிருக்கும் ஆயிரமாயிரம் பெண்களுடன் பூமிகாவும் ஒருத்தியாகிவிட்டாள்.

யுத்தம் என்னும் கொடிய அரக்கன் இத்தகைய பரிதாப நிலையை எங்கள் தமிழ் பெண்களுக்கு விட்டுச்சென்றது. கொடுமையிலும் கொடுமையாக உள்ளது. எத்தனை ஆயிரம் இளம் பெண்கள் விதவைகளாகி வாழ வழி தெரியாது தவித்துக் கொண்டிருக்கின்றனர். என்ன முடிவை எடுப்பது என்று அவளது மனம் குழம்பிக் கொண்டிருந்தது. "அம்மா" என்ற குரல் கேட்டு திரும்பினாள் பூமிகா.

"என்னம்மா யோசிச்சுக் கொண்டு இருக்கிறியள்... எங்களை எப்படி வாழ வைக்கப்போறம் எண்டுதானே உங்கள் பாட்டிலை யோசிக்கிறியள். நீங்கள் பாவம். எங்களை அனாதை மடத்திலை சேர்த்துவிடுங்கோ அம்மா. எங்களாலைதானே உங்களுக்கு கரைச்சல். கண்ணில் இருந்து வழிந்தோடும் கண்ணீர்த்துளிகளை சிந்தியவாறு கூறினாள் கார்த்திகா.

"என்ன கார்த்திகா நீ என்ன சொல்லுறாய்... நீ என்ரை பிள்ளையடி. நான் சுமந்து வளர்த்த பிள்ளை. உன்னைக் கொண்டு போய் அனாதை ஆச்சிர மத்திலை விடச் சொல்லுறியே... நான் உயிரோடை இருக்கிறன்... உங்களைப் பார்ப்பன். றோட்டிலை நிண்டு பிச்சை எடுத்தாவது உங்களை வாழவைப்பன். நீ கவலைப் படாதை கார்த்திகா" வேதனை யுடன் பதில அளித்தாள் பூமிகா.



நீங்கள் பொய் சொல்லுறியள் அம்மா. நாங்கள் அனாதையள் தானே. எங்கடை அப்பா, அம்மாவை யுத்தம் பறிச்சிட்டுதுதானே. அநாதைகளாக, ஆருமற்றவர்களாக நிண்ட எங்களை எடுத்து வந்து எவ்வளவு கஷ்டப்படுறியள் அம்மா... பத்து வயதான கார்த்திகா தன் கதையை எடுத்துச்சொன்னாள்.

நீங்கள் மூண்டுபேரும் என்ரை பிள்ளையள்தான். என்னைப் பற்றி கவலைப்படதேயுங்கோ. இப்ப கொஞ்சம் கஷ்டம்தான். நீங்கள் யோசிக்காதையுங்கோ. கார்த்திகாவை கட்டியணைத்து அழுது புலம்பினாள் பூமிகா!

(காத்திருப்பு தொடரும்)



# யாழில் இருந்து முள்ளிவாய்க்கால் வரை

30

*வே. அர்ச்சுணன்*

புலிகளின் தாக்குதல் அணிகளின் திட்டங்கள் அனைத்தும் பூர்த்தியாகிய நிலையில் சுண்டிக்குளம் கடற்கரையில் தரை இறங்குவதற்கு தயாராக இருந்த போராளிகளின் அணிகளை புலிகளின் தளபதிகள் வழியனுப்புவதற்கு தயாராகிக்கொண்டிருந்த அதேநேரம் இந்த தாக்குதலுக்குரிய வியூகங்களை எவ்வாறு வகுப்பது?, தாக்குதல் ஆரம்பிக்கின்றபொழுது எதிர்கொள்ள வேண்டிய சவால்கள் என்பன தொடர்பிலும் அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பிலும் பிரபாகரன், தளபதிகளான பால்ராஜ், சூசை, துர்க்கா, விதுசா, தீபன், ராஜசிங்கம் உள்ளிட்ட தளபதிகளுக்கு தொலைத்தொடர்பு சாதனங்களூடாக விளக்கம் அளிக்காமல் இறுதிக்கட்ட நேரத்தில் பால்ராஜ்ஜையும் சூசையையும் நேரடியாக அழைத்து சரியான விளக்கங்களை அளித்தபின் இறுதியாக இந்த விளக்கங்களின்படி உலக வரலாற்றில் இடம்பிடித்த இந்த தாக்குதலுக்கான நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. அதாவது 26.03.2000 அன்று இருட்டுப் பரவத்தொடங்கிய நேரம் ஊடறுப்புத் தாக்குதல் படையணிகள் சுண்டிக்குளம் கடற்கரையில் தயாராகிக்கொண்டிருந்தன.

பல கட்டளைத் தளபதிகளும் வழி அனுப்புவதற்காக ஒன்றாக கூடியிருந்தார்கள். எல்லோரது முகத்திலும் ஏதோவொரு பரபரப்பு தரையிறங்குவதற்கு தயாராகிப் புறப்படுவதற்குமுன் போராளிகளுடன் கதைத்த தளபதி பால்ராஜ் அவர்கள் எதிரி ஆக்கிரமித்துள்ள எங்களுடைய யாழ்.மண்ணில் மீண்டும் நாம் காலடி எடுத்து வைக்கப்போகின்றோம். நாங்கள் வெல்லப்பட முடியாதவர்கள் என்பதை எதிரிக்கு சொல்லி வைக்கப்போகின்றோம். புலிகள் யார் என்பதை எதிரிக்கு காட்டப்போகின்றோம் என்று கூறினார். தளபதியின் ஆக்ரோஷமான வார்த்தைகளை உள்வாங்கிக்கொண்டு போராளிகள் மிகுந்த சந்தோசத்துடனும் தெம்புடனும் படகுகளில் ஏறி தாக்குதலுக்குத் தயாராகினார்கள். இத்தாக்குதலில் பங்குகொண்ட தளபதிகளான துர்க்கா, விதுசா, ராஜசிங்கம் உட்பட பல தளபதிகளும் தங்களது அணிகளுடன் புறப்படத் தயாராகினார்கள்.

சமநேரத்தில் ஊடறுத்து நிற்கும் தாக்குதல் அணிகளுக்கான தரை வழித்தொடர்பை ஏற்படுத்திக்கொடுக்கும் பொறுப்பை முக்கியமாக ஊடறுப்புத் தாக்குதலின் தொடர் இருப்பை தீர்மானிக்கும் பிரதான களமுனையைப் பொறுப்பெடுத்த தளபதி தீபன் தலைமையிலான அணி தாளையடி இராணுவ முகாம்மீது தாக்குதல் நடாத்துவதற்கு தயாராகினர்.

ஏனெனில் தாளையடியை ஊடறுத்து கரையோரப்பகுதியை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தாலே ஊடறுப்பு அணிக்கான விநியோகங்களை செய்யலாம் என்பது இந்நடவடிக்கையின் வெற்றியில் பிரதான பங்கை வகித்தது. ஆனையிறவு வெற்றியைத் தீர்மானிக்கும் வரலாற்றுச் சமருக்கான அணிகள் தரையிறங்க வேண்டிய இடத்தின் பாதுகாப்பை உறுதிசெய்த வேவு அணிகள் குடாரப்புக் கரையில் முன்மறிப்பு போட்டுத் தயாராக இருந்தன. தாக்குதல் அணிகள் சிறிய படகுகளில் தரையிறங்கும் குடாரப்புப் பகுதியை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தன.

இவ்வாறு நகர்ந்து சென்ற அணிகள் குடாரப்புப் பகுதியில் வெற்றிகரமாக தரையிறங்கி தங்களது அடுத்தகட்ட நடவடிக்கைக்கு உடனடியாகவே தயாராகினார்கள். புலிகளினது திடீர் தரையிறக்கத்தை சற்றுமே எதிர்பார்க்காத படைத்தரப்பினர் தங்களது வழமையான ரோந்து நடவடிக்கைகளையும் காவல் கடமைகளிலும் ஈடுபட்டுக்கொண்டிருந்த பொழுதுகளில் பால்ராஜ் தலைமையிலான அணியினர் குடாரப்பில் தரையிறங்கியதுடன் உடனடியாகவே புன்னையடி பகுதி ஊடாக கண்டல் காட்டைக் கடந்து இத்தாவில் பகுதிநோக்கி முன்னேறிக் கொண்டிருந்த சமயத்தில் விடுதலைப் புலிகளின் இன்னொரு விசேட கொமாண்டோ அணியினர் அதிகாலை 2.25 மணியளவில் மாமுனைப் பகுதியிலிருந்த படையினர் மினிமுகாம் மீது சிறிய அளவிலான தாக்குதல் ஒன்றைத் தொடுப்பதற்கு தயாராகிக் கொண்டிருந்தபோது படையினர் தங்களது சீருடைகளையும் துப்பாக்கிகளையும் தூக்கி எறிந்துவிட்டு மக்களோடு மக்களாக காட்டுப்பகுதி ஊடாக நாகர் கோவில் படைமுகாமிற்கு தப்பியோடிக் கொண்டிருந்தனர்.

**box சமர்க்களநாயகன் லீமா எனப்படும் பால்ராஜ்ஜின் மதிநுட்பத்தினையும் அவர்களது போரியல் ஆளுமையும் உலகப்படை வல்லுநர்களையே வியப்பில் ஆழ்த்தியது. இத்தாவில் களமுனையில் தரைவழியில் தளபதி பால்ராஜ், தீபன், விதுர்சா, துர்க்கா போன்றோர் கடுமையாக உழைத்ததோடு கடற்பகுதியில் தரையிறக்கம், விநியோகம், வழிமறிப்புச்சண்டை என பல்வேறு வியூகங்களை வகுப்பதிலும் சண்டைக்குரிய நிகழ்ச்சி நிரலின் முக்கிய கதாநாயகர்களில் ஒருவராகவும் இருந்து சூசை இந்த தாக்குதலின் முக்கியமான பல பங்குகளை வகித்ததை எவரும் மறுத்துவிட முடியாது.**



இதேநேரம் கேணல் தீபன் தலைமையிலான அணியினர் தாளையடி, மருதங்கேணி, மாசார், சோறன்பற்று, புதுக்காடு வரையிலான நீண்ட தொடர் மினிமுகாம்களையும் இராணுவ நிலைகளையும் தகர்த்து கரையோரப் பகுதி ஊடாக ஒரு விநியோக மார்க்கத்தை திறந்துகொடுத்தனர். இவ்வாறு விநியோக பாதையொன்று திறந்து கொடுக்கப்பட்டதையடுத்து படையினர் உடனடியாகவே உஷாராகிவிட்டனர். அதாவது இத்தாவில் பகுதியில் தாக்குதலுக்கு தயாராகிக்கொண்டிருந்த தளபதி பால்ராஜ் தலைமையிலான அணியினரை மடக்குவதற்கும் அவர்களது முற்றுகையை அடக்குவதற்கும் படையினர் பல கோணங்களிலும் முயற்சிகளை எடுத்துக் கொண்டனர்.

அதாவது படைத்தரப்பின் முழுமையான படைவலிமையையும் இந்த களமுனையில் பரீட்சித்துப் பார்க்கப்பட்டது. ஆனால் இந்தக் களமுனையில் விடுதலைப் புலிகளின் கைமேலோங்கத் தொடங்கியதை படையினர் களமுனை இறுக இறுக உணரத் தொடங்கினார்கள்.

அதாவது இந்தக் களமுனை அரச படையினருக்கு சாதகமான சூழலில் அமைந்திருந்தபோதிலும் படையினர் களமுனையில் தாக்குப்பிடிக்க முடியாத அளவிற்கு புலிகளின் போரியல் வியூகங்கள் அமைந்திருந்ததுடன் புலிகளின் போரியல் உத்திகள் ஒரு கட்டத்தில் படையினரை நிலைகுலையச் செய்ததை படைத்தரப்பின் சிரேஷ்ட படை அதிகாரிகள் இந்த போர் முடிந்த பின்னர் இப்போர் தொடர்பாக அன்றைய பாதுகாப்பு அமைச்சு நடத்திய போரியல் தொடர்பான மாநாட்டில் ஒப்பிக்கொண்டு இருந்தனர்.

அதாவது படையினரிடம் விமானப் படைகள், டாங்கிப் படைகள் (கவசப் படைகள்) உள்ளிட்ட வலுவான படையினரின் கூட்டமைப்புக்கள் இருந்தபோதிலும் இந்தக் களமுனை மண் கவ்வுகின்ற அளவிற்கு மோசமான வீழ்ச்சியையும் பெருமள விலான உயிரிழப்புக்களையும் ஆயுத தளபாட இழப்புக்களையும் படையினருக்கு ஏற்படுத்தியிருந்தது. மட்டுமல்லாது பெருமளவிலான நிலப்பகுதியையும் படையினர் இழக்க வேண்டி ஏற்பட்டதுடன் வரலாற்று ரீதியாக புலிகள் போரியல் ரீதியில் ஒரு பெரும் சாதனையை நிகழ்த்தி பெருமளவிலான நிலப்பரப்பை தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து போரியல் ஆய்வாளர்களும் மூக்கின் மேல் விரல்வைத்து புலிகளின் மதிநுட்பத்தை அவர்களின் போரியல் பட்டறிவை அவர்களது தாக்குதல் திறமையை அதிசயமாக உற்றுநோக்கினர்.

அதாவது box சமர்க்களநாயகன் லீமா எனப்படும் பால்ராஜ்ஜின் மதிநுட்பத்தினையும் அவர்களது போரியல் ஆளுமையும் உலகப்படை வல்லுநர்களையே வியப்பில் ஆழ்த்தியது. இதில் இன்னொரு விடயத்தை குறிப்பிடலாம். அதாவது புலிகளுக்கும் அரச தரப்பினருக்குமிடையில் பேச்சு வார்த்தை நடைபெற்றுக் கொண்டிருந்த காலப்பகுதியில் படைத்தரப்பினர் புலிகள் தரப்பில் பார்ப்பதற்கு 'விரும்பிய ஒரேயொரு தளபதி பால்ராஜ் என்றால் அது மிகையாகாது.


அதாவது முகமாலையில் இடம்பெற்ற அரச பிரதிநிதிகளிற்கும் புலிகளிற்கும் இடையிலான சந்திப்பின்போது பால்ராஜ்ஜை பார்க்கமுடியுமா? என்று அங்கு வந்த இராணுவ அதிகாரிகள் அங்கு வந்தவர்களிடம் வினவிக் கொண்டிருந்தனர். அந்தளவிற்கு தனது எதிரிகளையும் கவரக்கூடிய ஒரு சிறந்த போரியல் தளபதியாக பால்ராஜ் திகழ்ந்தார் என்பது எவருமே மறுக்க முடியாது.

தனது மதிநுட்பத்தால் தனது தலைவரின் சிந்தனைக்கு மெருகூட்டி இந்தத் தாக்குதல் களத்தை வெற்றிகரமாக வழிநடத்தி முடித்த பால்ராஜ் பின்னைய நாட்களில் பல்வேறு சர்ச்சைகளிலும் சிக்கல்களிலும் மாட்டிக்கொண்ட போதிலும் இவரது போரியல் சாதனைகளை எவருமே மறுக்கமுடியாது.

இத்தாவில் களமுனையில் தரைவழியில் தளபதி பால்ராஜ், தீபன், விதுர்சா, துர்க்கா போன்றோர் கடுமையாக உழைத்ததோடு கடற் பகுதியில் தரையிறக்கம், விநியோகம், வழிமறிப்புச்சண்டை என பல்வேறு வியூகங்களை வகுப்பதிலும் சண்டைக்குரிய நிகழ்ச்சி நிரலின் முக்கிய கதாநாயகர்களில் ஒருவராகவும் இருந்து சூசை இந்த தாக்குதலின் முக்கியமான பல பங்குகளை வகித்ததை எவரும் மறுத்துவிடமுடியாது.

இந்த சூசையின் திட்டங்கள் எவ்வாறு இருந்தன?, இந்தச் சமரை வெற்றிகரமாக நடத்த சூசையின் பங்களிப்பு எப்படி இருந்தது?, இந்த நடவடிக்கைகள் ஒட்டுமொத்தமாக முள்ளிவாய்க்கால் முடிவுவரை எம்மவர்களை எவ்வாறு இழுத்துச் சென்றது என்பதை தொடர்ந்து பார்ப்போம்.

தொகுப்பு – வேணு கிருஷ்ணா



# ஐ.எஸ்.ஐ.எஸ். அட்டூழியம்

ஈராக்கில் தாக்குதல் நடத்திவரும் தீவிரவாதிகள் ஐ.எஸ்.ஐ.எஸ். என்றபெயரில் அழைக்கப்படுகிறார்கள். ஐ.எஸ்.ஐ.எஸ். என்பது "இஸ்லாமிக் ஸ்டேட் ஒப் ஈராக் அன்ட் சிரியா" என்ற ஆங்கில வார்த்தையின் சுருக்கம் ஆகும். ஈராக்கையும், சிரியாவின் ஒரு பகுதி மற்றும் துருக்கியின் ஒரு பகுதி ஆகியவற்றையும் இணைத்து தனி இஸ்லாமிய நாட்டை உருவாக்குவது இவர்களது திட்டமாகும் இதுமட்டுமல்லாமல் எதிர்காலத்தில் பக்கத்து நாடான லெபனான், பலஸ்தீனம், இஸ்ரேல், ஜோர்டான், துருக்கி ஆகிய நாடுகளையும் ஒன்றிணைத்து பெரியளவிலான இஸ்லாமிய தேசத்தை உருவாக்கவும் அவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

2003ஆம் ஆண்டு அமெரிக்கா ஈராக்மீது படையெடுத்தபோது சில அரபு நாட்டினர் சேர்ந்து இந்த படையை உருவாக்கினார்கள். அப்போது பெயரளவுக்குத்தான் இது செயற்பட்டு வந்தது. ஆனால் 2006ஆம் ஆண்டுக்குப் பிறகு இது தீவிரமாக செயற்பட ஆரம்பித்தது. சிரியாமீதான போர் தொடங்கியபிறகு இந்த படையில் ஏராளமானோர் சேர்ந்தனர். தற்போது பல ஆயிரம் பேர் படையில் உள்ளனர். அதில் 6 ஆயிரம் பேர் ஈராக்கில் போரிட்டு வருகிறார்கள். 5 ஆயிரம் பேர் சிரியாவில் போரில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களுக்கு பின்னணியில் 15 ஆயிரம் பேர்வரை படையில் சேருவதற்கு தயாராக உள்ளனர். விரைவில் 60 ஆயிரம் பேரை சேர்த்து பெரும் படையை உருவாக்கவும் அவர்கள் திட்டமிட்டுள்ளனர். சிரியா மற்றும் ஈராக்கில் வங்கி மற்றும் பல்வேறு இடங்களில் கொள்ளையடித்த ரூ.12 ஆயிரம் கோடி பணம் அவர்களிடம் உள்ளது. இதை வைத்து பெரும் படையை உருவாக்கி வருகிறார்கள். ஒவ்வொரு வீரருக்கும் மாதம் ரூ.36 ஆயிரம் சம்பளம் வழங்கிவருகிறார்கள்.

அரபு நாடுகள் பலவற்றில் சன்னி முஸ்லிம்கள் அதிகளவில் உள்ளனர். அவர்களும் இவர்களுக்கு பண உதவி செய்துவருகிறார்கள். இந்த படையின் தலைவராக அபூபக்கர் அல் பகாதி செயற்பட்டுவருகிறார். கடந்த வருடம் முதல் சிரியாவில் அல்ராக் நகரை தலைநகராகக் கொண்டு புதிய நாடு செயற்பட்டு வருவதாக தன்னிச்சையாக அறிவித்து உள்ளனர். இந்த அரசின் பிரதமர் மற்றும் பல்வேறு துறைகளின் அமைச்சர்களும் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

### ஜப்பானிய பணயக் கைதி கொலை: ஐ.எஸ். தீவிரவாதிகள் அட்டூழியம்

ரூ.1,225 கோடி கேட்டு ஐ.எஸ். தீவிரவாதிகள் விதித்த கெடு முடிந்ததையடுத்து. அவர்கள் ஜப்பானிய பயணக்கைதியை கொலை செய்தனர்.

ஈராக், சிரியா ஆகிய நாடுகளில் ஆதிக்கம் செலுத்திவரும் ஐ.எஸ். தீவிரவாதிகள், எதிரி நாட்டினரை பணயக்கைதிகளாக பிடித்து. தலையை துண்டித்து கொல்வதை வாடிக்கையாக வைத்துள்ளனர். அவர்கள், ஜப்பானை சேர்ந்த கெஞ்சி கோட்டூ, ஹாருணா யுக்கவா என்ற 2 பேரை சிரியாவில் பணயக்கைதிகளாக பிடித்தனர்.

இவர்களில் கெஞ்சி கோட்டூ, பத்திரிகையாளர் ஆவார். போர் செய்திகளை சேகரிக்க சிரியாவுக்கு சென்றிருந்தபோது, தீவிரவாதிகளிடம் சிக்கினார். ஹாருணா யுக்கவா, தனியார் பாதுகாப்பு நிறுவனத்தைச் சேர்ந்தவர்.

இந்நிலையில், பணயக் கைதிகளில் ஒருவரான ஹாருணா யுக்கவாவை ஐ.எஸ். தீவிரவாதிகள் கொலை செய்தனர். இதுபற்றிய வீடியோ படத்தை தீவிரவாதிகள் வெளியிட்டு இருந்தனர். அதை பார்த்து, ஜப்பானிய அரசு கடும் அதிர்ச்சி அடைந்தது.

### ஜப்பான் பத்திரிகையாளர் கழுத்தறுத்து கொலை: ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு கொடூரம்

பணயக்கைதியாக பிடித்து வைக்கப்பட்டு இருந்த ஜப்பான் பத்திரிகையாளர் கென்ஜி கோட்டோ, ஐ.எஸ்.ஐ.எஸ்., பயங்கரவாதிகளால், கழுத்தறுத்து கொலை செய்யப்பட்டார். இது தொடர்பான வீடியோவை, ஐ.எஸ். அமைப்பு இணையத்தில் வெளியிட்டுள்ளது. அதில், கைகள் பின்புறம் கட்டப்பட்ட நிலையில், கென்ஜி கோட்டோ, மஞ்சள்நிற உடையில் மண்டியிட்டபடி உள்ளார்.

அவர் அருகில், முகத்தை மறைத்தபடி, கையில் கத்தியுடன் கறுப்புநிற உடையணிந்த பயங்கரவாதி நிற்கின்ற காட்சி இடம் பெற்றுள்ளது. இதற்கு முந்தைய பணயக் கைதிகளை கொன்ற வீடியோ காட்சிகளிலும், இதே நபர்தான் இடம்பெற்றிருந்தான். அவன், ஆங்கிலத்தில், "ஜப்பான் அரசின் பொறுப்பற்ற செயல்தான், பணயக் கைதி உயிரிழக்க காரணம். இனி, ஜப்பான் பல பயங்கர கனவுகளை காணும். அதற்கான துவக்கம்தான் இது," எனக் கூறிவிட்டு, கென்ஜியின் கழுத்தை சறுக்கென்று அறுத்துவிடுகிறான்.

### ஐ.எஸ். போராளிகளால் ஜோர்தானிய விமானி கூண்டில் அடைத்து எரித்துப் படுகொலை!

ஐ.எஸ். போராளிகளால் பணயக்கைதியாக பிடித்து வைக்கப்பட்டிருந்த ஜோர்தானிய விமானி கூண்டில் அடைத்து வைக்கப்பட்டு எரியூட்டப்பட்டு படுகொலை செய்யப்படுவதை வெளிப்படுத்தும் வீடியோ காட்சியொன்றை வெளியிட்டுள்ளனர்.

இதனையடுத்து ஜோர்தான், பெண் தற்கொலைக் குண்டுதாரி ஒருவர் உட்பட இருவருக்கும் மரணதண்டனை நிறைவேற்றியுள்ளது.

விசுவாசிகளின் இதயங்களை குணப்படுத்தல் என்ற தலைப்பில் ஐ.எஸ். போராளிகளால் வெளியிடப்பட்ட பிந்திய வீடியோ காட்சியில், ஜோர்தானிய விமானியான மோஸ் அல் கஸஸ்பெஹ் செம்மஞ்சள் நிற ஆடை அணிவிக்கப்பட்டு அழைத்துவரப்பட்டு கூண்டில் அடைக்கப்படுகிறார். தொடர்ந்து அந்தக் கூண்டின்மீது பெற்றோல் போன்ற எரிபொருளை ஊற்றி அதற்கு தீ வைக்கப்படுகிறது.

இதனையடுத்து நிராதரவாக நின்ற விமானியை தீ முழுமையாக சூழ்ந்துகொள்கிறது. அதன்பின் போராளிகள், எரிந்து கருகிய அந்தக் கூண்டின் மீது செங்கற்கள் உள்ளடங்கலானவற்றை வாரி இறைத்தபின்னர் அந்தக் கூண்டை புல்டோஸர் உபகரணத்தால் தட்டையாக்குகின்றனர்.

### ஐ.எஸ் அமைப்பால் அமெரிக்கப் பெண்மணி கொலை

சிரியாவில் இஸ்லாமிய அரசு தீவிரவாதக் குழுவால் பிடித்து வைக்கப்பட்டிருந்த அமெரிக்கப் பெண்மணி கைலா ஜீன் முல்லர் கொல்லப்பட்டு உள்ளதை அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா உறுதிசெய்திருந்தார். அவர் 18 மாதங்களாக அந்தத் தீவிரவாதக் குழுவால் பணயக் கைதியாக வைக்கப்பட்டிருந்தார். அந்த இருபத்தி ஆறு வயதான தொண்டு நிறுவன ஊழியரது கொலைக்கு காரணமானவர்களை அமெரிக்கா நீதியின் முன்நிறுத்தும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

தமது மகளின் மரணம் தொடர்பில் தாங்கள் நொறுங்கிவிட்டதாக தெரிவித்திருக்கும் முல்லரின் பெற்றோர், தமது மகள் உதவி தேவைப்படுபவர்களின் சேவைக்காக தனது வாழ்வை அர்ப்பணித்துக்கொண்டவர் என்றும் தெரிவித்திருக்கிறார்கள்.

### எகிப்து: 21 கிறிஸ்தவர்களின் தலையைத் துண்டித்த ஐ.எஸ்

ஐ.எஸ் தீவிரவாதிகள் லிபியாவில் 21 கிறிஸ்துவ எகிப்தியர்களின் தலையைத் துண்டித்துக் கொன்றுள்ளனர். Coptic கிறிஸ்துவர்கள் கொலை செய்யப்படும் காணொளி, தீவிரவாத இணையத்தளத்தில் வெளியிடப்பட்டது. அதன் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தியுள்ள எகிப்திய அதிபர் அப்தேல் ஃபாட்டா அல் சிஸி கொலையாளிகளுக்குத் தக்கவகையில் பதிலடி கொடுக்கப்போவதாகச் சூளுரைத்திருக்கிறார்.

பயங்கரவாதிகளால் கொல்லப்பட்ட அனைவரும், லிபியாவுக்கு வேலை செய்யச் சென்ற எகிப்திய ஊழியர்கள். கடந்த டிசம்பரிலும் ஜனவரியிலும் அவர்கள் பிணை பிடிக்கப்பட்டனர். அவர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைக்கு, உரியநேரத்தில் பழி தீர்த்துக்கொள்ள கைரோ முடிவெடிக்கும் என்று அவர் எச்சரித்தார்.

எகிப்தியப் பிணையாளிகள் 21 பேரும், ஒரேஞ்சு வண்ண உடையில், கடற்கரையோரம் வரிசையாக நடத்திச்செல்லப்படும் காட்சி, காணொளியில் காட்டப்படுகிறது. பின்னர் பிணையாளிகளின் கைகள் பின்னால் கட்டப்பட்டநிலையில், அவர்கள் மண்டியிட்டு அமர்ந்துள்ளனர்.

அப்போது பேசும் ஒரு தீவிரவாதி, அல்கொய்தா தலைவர் ஒசாமாவின் உடல் எந்தக் கடலில் வீசப்பட்டதோ அதே கடலில், பிணையாளிகளின் இரத்தம் கலக்கப்படுமென்று ஆங்கிலத்தில் கூறுகிறார். விரைவில் தாங்கள் ரோம் நகரை ஆக்கிரமிக்க உள்ளதாகவும் அவர் மிரட்டல் விடுத்தார். அதனைத் தொடர்ந்து, பிணையாளிகள் அனைவரும் ஒரே நேரத்தில் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

### ஐ.எஸ். அட்டூழியம் - ஈராக்கில் 40 அதிகாரிகள் உயிருடன் எரிப்பு

ஈராக்கின் அன்பார் மாகாணத்தில் பாதுகாப்பு அதிகாரிகள் உட்பட 40-க்கும் மேற்பட்ட அதிகாரிகளை ஐ.எஸ். தீவிரவாதிகள் உயிருடன் எரித்துக் கொன்றதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. ஈராக்கின் மேற்கு பகுதியில் உள்ள அன்பார் மாகாணத்தில் சுமார் 30 முதல் 45 அதிகாரிகளை ஐ.எஸ். தீவிரவாதிகள் கொடூரமான முறையில் எரித்துக்கொன்றதாக தலைமை இராக் பாதுகாப்புத் துறையில் தலைமை கேணல் காஸிம் அல்-ஒபைதீ தெரிவித்ததாக சினுவா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

எரித்துக் கொல்லப்பட்டவர்கள் அனைவரும் சன்னிப் பிரிவு பழங்குடியினத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் அதில் பெரும்பாலானோர் காவல்துறையையும் ஈராக் அரசின் சாவா துணை காவல்படையை சேர்ந்தவர்கள் என்ற தகவலும் வெளியிடப்பட்டுள்ளது.

### ஐ.எஸ். தீவிரவாதிகளை அழிக்க நேட்டோ படை நாடுகள் உடன்பாடு

சிரியாவில் தொடங்கி இன்று ஈராக் வரை ஆக்கிரமித்து, பல அப்பாவி மக்களை கொன்று குவிக்கும் ஈராக் மற்றும் சிரியாவில் இஸ்லாமிய தேசம் (ஐ.எஸ்) எனும் தீவிரவாத அமைப்பை அழிக்க செப்டம்பர் 2014இல் நாட்டோ படை நாடுகள் உடன்பாடு செய்து உள்ளனர். ஐ.எஸ் என்ற அமைப்பு சிரியாவில் உள்நாட்டு போரில் வலுப்பெற்று, அங்குள்ள மற்ற கிளர்ச்சியாளர்கள் மற்றும் அசாத் அரசை எதிர்த்து போரிட்டு பல இடங்களை கைப்பற்றியது.

### நாங்கள் போர் புரிவது இஸ்லாத்துக்கு எதிராக அல்ல: ஒபாமா

வெள்ளை மாளிகையில் நடந்த பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைக்கான உச்சி மாநாட்டில்தான் ஒபாமா இவ்வாறு பேசி உள்ளார். இந்தியா உட்பட 60 நாடுகள் பங்கேற்ற இந்த மாநாடு மூன்று நாட்கள் நடைபெற்றது.

ஒபாமா பேசியவை: "நாங்கள் இஸ்லாத்துக்கு எதிராக போர் புரியவில்லை. எங்களது போர் இஸ்லாத்தின் மரபைத் திரித்தவர்களுக்கு எதிரானது. ஐ.எஸ்.ஐ.எஸ்., அல்-கொய்தா போன்ற அமைப்பினர் இஸ்லாத்தை பாதுகாக்கும் போராளிகள் என்ற போர்வையில் தங்களுக்கென அடையாளத்தை, அங்கீகாரத்தை தேடிக்கொள்ள கடும் பிரயத்தனம் செய்துவருகின்றனர்.

தீவிரவாதத்தால் சிரியா, ஈராக்கை ஐ.எஸ்.ஐ.எஸ். சீரகுலைத்துவருகிறது. அப்பாவி மக்கள் தலைதுண்டிக்கப்பட்டு, உயிருடன் எரித்துக் கொல்லப்படுகின்றனர். இது மன்னிக்கமுடியாத கொடூரம்.

பயங்கரவாதிகளை எதிர்கொள்வதில் மிகப் பெரிய சவால் இருக்கிறது. பயங்கரவாதிகள் அவ்வப்போது தங்கள் தாக்குதல் வழிமுறைகளை மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, கூடுதல் கண்காணிப்பு தேவைப்படுகிறது. ஆனால், பயங்கரவாதத்துக்கு எதிரான இந்தப் போரில் வெற்றி பெறுவோம் என எனக்கு நம்பிக்கை இருக்கிறது. உலக நாடுகளின் ஒத்துழைப்பு இந்த நம்பிக்கையை மேலும் பலப்படுத்தியுள்ளது.

ஐ.எஸ்.ஐ.எஸ். இஸ்லாமிய நாடு அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. அமெரிக்கா வும் ஏனைய பிற மேற்கத்திய நாடுகளும் இஸ்லாத்துக்கு எதிராகப் போர் புரிந்து வருவதாகவும் அவதூறு பரப்பிவருகிறது. இதைக் கூறித்தான் ஐ.எஸ். படைக்கு ஆள் திரட்டப்படுகின்றனர். இளைஞர்கள் இப்படித்தான் மூளைச்சலவை செய்யப்படுகின்றனர்.

அவர்கள் முன்வைக்கும் எந்த ஒரு வாதத்தையும் நாம் ஏற்றுக் கொள்ளக்கூடாது. ஏனெனில் அவர்கள் சொல்வது பொய். அவர்கள் எதிர்பார்க்கும் அங்கீகாரத்தை ஒரு போதும் நாம் அளித்துவிடக்கூடாது. அவர்கள் மதத் தலைவர்கள் அல்ல வெறும் தீவிரவாதிகள்.

அவர்கள் கடவுளின் பெயரால் அப்பாவிகளை கொலை செய்யும் பைத்தியக்காரர்களே. கடவுளின் பெயரால் அப்பாவிகளை கொல்பவர்கள் கிறிஸ்துவம், யூதம், புத்தமதம், இந்து மதம் என எந்த மதத் தைச் சேர்ந்தவராகவும் இருக்க முடியாது. பயங்கரவாதத்துக்கு எந்த ஒரு மதமும் பொறுப்பல்ல. ஆனால், மத அடையாளத்தைச் சுமக்கும் சிலரே வன்முறைக்கும், பயங்கரவாதத்துக்கும் காரணமானவர்களாவர்.

# வன்முறைகளால் சீரழியும் இளம் தலைமுறை

அளவெட்டி ப. உதயகுமார்

> வெளிநாடுகளில் இருந்துவரும் ஆண்கள் அங்கொரு பெண்ணை மணம் முடித்து பிள்ளைகள் இருக்கும்போதே இங்கு வந்து கொழுத்த சீதனம் வாங்கி இங்குள்ள பெண்களை மணந்து ஏமாற்றிச் செல்கின்ற சம்பவங்கள் தொடர்கதையாகி வருகின்றது. வெளிநாடு என்றதும் வெளியூர்ப் பணத்துக்கு ஆசைப்பட்டு வாழ்வுதனைப் பாழாக்கி கண்ணீர்வடிக்கும் பெண்களைவிட வெளியூர் மாப்பிள்ளைக்கு ஆசைப்பட்டு விசாரணைகள் ஏதுமின்றி பிள்ளைகளை அநியாயமாக பலியாக்க நினைக்கும் பெற்றோர்கள் உணரவேண்டும்.





யாழ். குடா உள்ளிட்ட பகுதி வன்முறைக் களமாகும். வடபகுதியாக மாறிவருகின்றது. அழிவு யுத்தம் முடிந்து விட்டபோதிலும், வன்முறைகளுடன் கூடிய கலாசாரப் பிறழ்வுகளும் நாள்தோறும் தலைதூக்கி வருவதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளன.

இவற்றிலே இளைஞர் குழுக்களிடையே உருவாகும் மோதல்கள், வாள்வெட்டுச் சம்பவங்கள், பெண்களுக்கெதிரான வன்முறைச் சம்பவங்கள், பாலியல் துஷ்பிரயோகம், இளவயதுக் கர்ப்பம், ஏமாற்று மோசடிகள் போன்றவற்றினால் வடபகுதி பெரும் சீரழிவுகளைச் சந்தித்து வருகின்றது.

இதன்விளைவுகள் நாளை பெரும் தாக்கங்களையும், மாற்றமுடியாத வடுக்களையும் உண்டாக்கப்போகின்றது என்பது மறைக்கமுடியாத உண்மையாகும்.

இன்றைய இளைஞர், யுவதிகளே நாளைய தலைவர்களாக வரப்போகின்றார்கள். அவர்களே நாட்டின் வருங்காலத் தூண் களாகவும் அமையப் போகின்றவர்கள். அப்படியான பெருமைக்குரிய இளம் சந்ததி அழிவுப்பாதையில் பயணித்து எதிர்காலமதை தொலைத்துவிட்டு கருகிய மலர்களாக சீரழிந்து போவதனை அனுமதிக்கவும் முடியாது.

அழிவு யுத்தம் ஒன்று இம்மண்ணிலே நடைபெற்றபோது யுத்தத்துக்கு பயந்து, அஞ்சி, ஒதுங்கியிருந்த இளம் சந்ததிக்கு யுத்தம் முடிந்துவிட்டதனால் உண்டான மாற்றங்கள், வசதி வாய்ப்புக்கள் என்பன அவர்களை பாதை மாற வைத்துக்கொண்டு வருகின்றது.

இது எங்கே போய் முடியப் போகின்றது என்பதே இன்று எம்முன்னே எழுந்துள்ள சவால்களுடன்கூடிய கேள்விக்குறியாகும்.

சட்டம், ஒழுங்கினைப் பாதுகாப்பதற்கு என்று பாதுகாப்பு தரப்பு இருக்கின்றபோதிலும், சட்டத்தைக் கையிலெடுப்பதனால் வன்முறைகள் கட்டுக்கடங்காமல் எல்லை மீறிச் சென்று கலகங்களை உண்டு பண்ணி வருகின்றது.

இவற்றிலே முக்கியமாக இளைஞர் குழுக்களிடையே உண்டாகும் கருத்து மோதல்கள் பெரும் யுத்தமாக வெடித்துக் குழுச்சண்டை, வாள்வெட்டுக்கள் என்று உக்கிரமடைந்துவருகின்றது.

கடந்த வாரம் குழு மோதல் ஒன்றின்போது இளைஞர் ஒருவரின் கை வாள்வெட்டிலே துண்டாடப்பட்ட சம்பவம் நடந்தேறியுள்ளது.

இளைஞர்களின் படிப்புக்கு ஏற்ற வேலை இல்லை. இதனால் உண்டாகக்கூடிய விரக்தி நிலை ஒருபுறமிருக்க, மது மற்றும் போதை வஸ்துகளுக்கு அடிமையாகும் நிலையும் அதிகரித்தவண்ணமுள்ளன.

அத்துடன் மிக, இலகுவாகக் கிடைக்கக் கூடிய தொழில்நுட்பச் சாதனங்களின் வளர்ச்சியும் வருகையும் அவர்களின் மனங்களைச் சிதறடிக்கச் செய்கின்றது.

இதனால் மனம் அலைபாயும் நிலைக்கு தள்ளப்படுகின்றன. அத்துடன் போதைவஸ்துப் பாவனைகளும் அதிகரித்துச் செல்கின்றது. இவ்வாறு போதையில் மூழ்கியுள்ள இளம் சந்ததி பாதை மாறிச்செல்வது சுலபமாகி, அடி, பிடி, சண்டை, வாள்வெட்டு என்று எல்லாமே எல்லைகள்மீறி நடக்கின்றன.

இதனால் வாழவேண்டிய வயதிலே சிறைக் கம்பிகளுக்குள் அகப்பட்டுத் தத்தளிக்கவேண்டிய பரிதாபநிலை தோன்றி வருகின்றது.

இது இவ்வாறிருக்க, இன்றைய இளம் சந்ததியினரில் ஒரு பகுதியினர் தாய், தந்தை சொல்கேட்டு நடப்பதில்லை. எது சரி, எது பிழை என்று புரிந்துகொள்ள முடியாத நிலையிலே தவறுகளுக்கும் குற்றங்களுக்கும் அடிமைகளாகி விரக்தி நிலைமைகளுக்கு உட்பட்டு வாழும் நிலைமைகளும் அதிகரித்துச் செல்கின்றன.

நிலைமை இவ்விதம் இருக்கும்போது, பெண்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்களும் தொடர்கதைகளாக தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இன்றைய இளம் பெண்களில் பலர் திருமணம் எனும் பெயர் கொண்ட நிகழ்வினால் வதைபட்டு வாழ்ந்து வருகின்றனர்.

ஆணுக்கு ஒரு சட்டமாகவும், பெண்களுக்கு ஒரு சட்டமாகவும் மதிக்கப்படுகின்றனர். பெண்களுக்கு உள்ள உரிமைகளை ஆண்கள் வழங்க மறுக்கின்றனர். இதனால் புரிந்துணர்வின்றி விட்டுக்கொடுப்புக்களின்றி பெரும்பாலான குடும்பங்கள் சீரழிவுகளுக்கு உள்ளாகிவருவதனை அவதானிக்க முடிகின்றது.

கண்டதும் காதல், போன் காதல், எஸ்.எம்.எஸ். காதல், பேஸ்புக் காதல், பாடசாலைக் காதல், அலுவலகக் காதல், பக்கத்துவீட்டு காதல், ரியூசன் காதல், வெளிநாட்டுக் காதல், என்று பலவகைக் காதல்கள் எம்மத்தியிலேயே அரங்கேறி வருகின்றது.

முன்சொல்லப்பட்ட காதல்கள் எல்லாவற்றிலும் சம்பந்தப்படுபவர்கள் பெண்களும், ஆண்களும்தான். ஆனாலும் இந்தக் காதல்களில் பெரும்பாலான காதல் ஜோடிகள் இணைவதில்லை. பல ஜோடிகள் கல்யாணத்துக்கு முன்பதாகக் கர்ப்பம் தரிக்கும் நிலைமைக்குத் தள்ளப்படுகின்றனர். பெரும்பாலானவர்கள் வீட்டைவிட்டு ஓடிப்போய் திருட்டுத்தனமாகக் கல்யாணம் கட்டி, ஒன்றிரண்டு பிள்ளைகளுடன் கணவனால் கைவிடப்படுகின்ற நிலைமைகளும் தொடர்கதைகளாகிவருகின்றன.

வாழவேண்டிய வயதிலே நீதிமன்ற வாசற்படியேறி இவர் என் கணவன், இவர் என் கணவன். இவர் என்னை மணமுடித்து ஏமாற்றிவிட்டார். இவரை என்னுடன் சேர்த்து வையுங்கள். வாழ்வதற்கு ஜீவனாம்சம் வாங்கித் தாருங்கள் என்று நீதிமன்றிடம் கேட்டு அலைகின்ற சம்பவங்களும் அதிகரித்த வண்ணமுள்ளன.

இது பெண்களின் வாழ்விலே பெரும் தாக்கங்களை உண்டு பண்ணிவருவதுடன் அவர்களின் எதிர்காலம் என்பதும் கேள்விக் குறியாகி நிற்கின்றது. இவற்றுடன் இன்னுமொரு மோசமான பின்விளைவுகளை உண்டாக்கக் கூடியதான சம்பவங்களும் பதிவாகிவருகின்றது! இது பெரும் பாதிப்புக்களை உண்டுபண்ணி விடுகின்றது.

அதாவது காதல் எனும் ஒரு புனிதமான சொல்லை பயன்படுத்தி இளம் பெண்களை அதுவும் பதின்ம வயதுப் பெண்களை கர்ப்பமடைய வைத்துவிட்டு, கடைசியில் அவளது குழந்தைக்கு அப்பா நான் இல்லை என்று சொல்லும் சம்பவங்களும் கடுகதி வேகத்திலே வளர்ந்துவருகின்றது. பாதிக்கப்பட்ட பெண்கள் கையிலே குழந்தையுடன் என் குழந்தையின் அப்பா என்பதனை உறுதிப்படுத்த டி.என்.ஏ குருதிப்பரிசோதனை செய்து உறுதிப்படுத்தும் சம்பவங்களும் நடைபெற்றுவருகின்றது. இங்கேயும் பெண்களே பாதிக்கப்படுகின்றனர்.

ஆண் சமூகம் இதனை உணர வேண்டும். இன்றைய நாகரிக உலகின் வளர்ச்சியினால் கான்போன் மூலம் கண்ட கண்ட கழிவுப் படங்களையெல்லாம் பார்த்து தன் வாழ்வுதனை சீரழிப்பதுடன் பெண்களையும் இவர்கள் சீரழிக்கின்றனர்.

கையிலே பணம் இல்லை. பணம் தேட தொழில் இல்லை. ஆனாலும் காதல் மட்டும் கைவிட்டுப் போகாது. கல்யாணம் கட்டிவிட்டு அப்பா, அம்மா சொல்கேட்டு பெண்களை கழட்டிவிடும் ஆண்களும், நிறையவே உள்ளனர். இதனால் பெண்களே பாதிக்கப்படுகின்றனர். இவ்வாறு பெண்களே கடுமையாக பாதிக்கப்படுவதனால் ஒரு ஆரோக்கியமான சமூகம் தோன்ற வாய்ப்பே இல்லாமல் போகின்றது.

ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே என்றுசொன்ன காலம் மலையேறிப் போய்விட, ஆவதும் ஆண்களால், பெண்கள் அழிவதும் ஆண்களால் எனும் புதுமொழி பொருந்தும் என்று எண்ணுகின்றேன்.

ஏனெனில் இந்தச் சமூகம்தன்னிலே பெண்களுக்கான கொடுமைகள் மிகப்பெரிய அளவிலே நடந்துவருவது கொடுமையிலும், கொடுமையான விடயமாயுள்ளது.

இது இவ்வாறிருக்கும்போது, விருப்பம் இல்லாத பெண்களை கடத்துவது மற்றும் விரும்பாதவளை கட்டாயப்படுத்தி இளைஞர்கள் குழுவாகக்கூடி கடத்துவது என்பதெல்லாம் சர்வசாதாரண சம்பவங்கள் மாதிரி நடைபெற்றுவருகின்றது. இத்துடன் பொய் சொல்லிப் பல பெண்களை மணம் முடிப்பது என்பதும் சர்வசாதாரணமாக நடைபெறுகின்றது.

வெளிநாடுகளில் இருந்துவரும் ஆண்கள் அங்கொரு பெண்ணை மணம் முடித்து பிள்ளைகள் இருக்கும்போதே இங்கு வந்து கொழுத்த சீதனம் வாங்கி இங்குள்ள பெண்களை மணந்து ஏமாற்றிச் செல்கின்ற சம்பவங்கள் தொடர்கதையாகி வருகின்றது. வெளிநாடு என்றதும் வெளியூர்ப் பணத்துக்கு ஆசைப்பட்டு வாழ்வுதனைப் பாழாக்கி கண்ணீர்வடிக்கும் பெண்களைவிட வெளியூர் மாப்பிள்ளைக்கு ஆசைப்பட்டு விசாரணைகள் ஏதுமின்றி பிள்ளைகளை அநியாயமாக பலியாக்க நினைக்கும் பெற்றோர்கள் உணரவேண்டும்.

வெளிநாடு என்று இப்போதும் ஓடிக் கொண்டிருப்போர்கள் குறைந்தபாடில்லை. கடற்பயணம் மூலமாக வரவேண்டாம் என்று தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகைமூலமாக ஆலோசனைகள் வழங்கப்பட்டுவருகின்றபோதிலும், எவருமே செவிமடுப்பதாக இல்லை. வெளிநாட்டில் போய்த்தான் உழைக்கவேண்டும் என்று எண்ணும் நம் இளம் சமுதாயம் மாற்றான் தேசத்தில். போய் மடிப்பிச்சை எடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுவருகின்றனர். என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில். ஏன் கையை ஏந்தவேண்டும் வெளிநாட்டில். யாருமே திருந்துவதாகத் தெரியவில்லை.

இந்த வெளிநாட்டு மோகத்தினால் யாரோ ஒரு ஏஜென்சிக்காரன் பணக்காரன் ஆக, தேடிச்செல்லும் எம்நாட்டவர் பிச்சை எடுக்கும் நிலைமைக்கு தள்ளப்பட்டு வருகின்றனர்.

இதேவேளை மீற்றர் வட்டிக்குப் பணம் கொடுக்கின்றவர்கள் கொடுத்த பணத்தை வாங்கி இன்னொருவருக்குக் கொடுத்து, கடைசியில் எதுவுமே இல்லாமல் நடுத்தெருவிலே நிற்கின்ற நிலைக்கு மீற்றர் வட்டிக்காரர்கள் வந்துள்ளனர்.

எனக்கு தெரிந்த அளவிலே இந்த மீற்றர் வட்டித் தொழிலுடன் சம்பந்தப்பட்ட பல பெண்கள் இன்று ஒருவேளை சாப்பிடவே முடியாத அளவுக்கு பிச்சை எடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இருந்த மானம், மரியாதை இழந்து கண்ணீருடன் காலம் கடத்துவோர்களைக் கண்முன்னே காண்கின்றேன்.

இது தேவையா?

ஆகவே, எமது இளம் சந்ததிக்கு எந்த ஒரு கெடுதியும் வராமல் பாதுகாக்க வேண்டியது சமூகத்தின் பொறுப்பு. பெற்றோரின் பொறுப்பு. பாதுகாவலரின் பொறுப்பு. இப்பொறுப்புக்களில் இருந்து எவருமே விலகாமல் பாதுகாக்க வேண்டும். இளம் சமூகம் தடுமாறினால், அவர்களின் வாழ்விலே கறைபடிந்தால், அவர்கள் குற்றவாளிகளாக, குற்ற உணர்வுடன் வாழ்ந்தால், வாழநேரிட்டால் அது முழு நாட்டுக்குமே பாதிப்பு. ஏனென்றால் அவர்கள்தான் நாளை இந்த நாட்டினை ஆளப்போகின்றவர்கள்.

அவர்கள் பாதை மாறிப்போக அனுமதிக்கலாமா?? அனைவரும் சிந்திக்க வேண்டிய காலம் இது.



# பாப்பா முரசு



வாரம் ஒரு திருக்குறள்

**கேள்வி**

**420**

**செவியிற் சுவையுணரா**
**வாயுணர்வின் மாக்கள்**
**அவியினும் வாழினும் என்.**

செவியால் நுகரப்படும் சுவையுணர்வை அறியாது. வாயினால் உண்ணப்படும் உணவின் சுவையை மட்டும் அறியும் மக்கள் இறந்தாலும், உயிர் வாழ்ந்தாலும் என்ன பயன்?

## ஆங்கிலச் சொல்லும் விளக்கமும்





லைப்ரரி என்ற ஆங்கிலச்சொல், லிபர் என்னும் இலத்தீன் மொழிச் சொல்லில் இருந்து உருவாயிற்று. லிபர் என்றால் புத்தகத் தொகுதி எனப் பொருள்படும்.


ட்ராம் என்றால் கிரேக்க மொழியில் செய்துகாட்டு என்று பொருளாம். இதிலிருந்துதான் டிராமா என்ற ஆங்கிலச் சொல் உருவாயிற்றாம்.

இலத்தீன் மொழியில் அலுமென் என்னும் சொல்லிற்கு துவர்ப்புச் சுவைகொண்ட தாது உப்பு என்பது பொருளாகும்.

ரோமன் கத்தோலிக்கர்களின் புனிதத் தந்தையாகப் போற்றப்படுபவர் போப் ஆண்டவர். இலத்தீன் மொழிச் சொல்லாகிய "பாபா" என்னும் சொல்லில் இருந்து உருவானதுதான் "போப்" என்ற சொல். அதற்கு தந்தை என்பது பொருளாகும்.

ஜிரா∴போஹ் என்னும் சொல் அராபிய மொழியில் உள்ளது. அதன் பொருள் நீண்ட கழுத்து. அந்தச் சொல்லின் அடிப்படையில் உருவானதுதான் ஜிரா∴பி என்ற சொல்.

## யார் இப்போது முட்டாள்?





அறிஞர் ஜோர்ஜ் பெர்னாட்ஷா ஒரு நாள் ஒரு குறுகலான ஒற்றையடிப் பாதை வழியாக நடந்து போய்க்கொண்டிருந்தார்.

அதே பாதையின் மறுமுனையில் இருந்து ஒரு முரட்டு ஆள் வந்துகொண்டிருந்தான். எதிரில் வருவது யார் என்று அறிந்த அந்த முரடன் வேண்டுமென்றே வழியை மறைத்துக்கொண்டு வழிவிடாமல் நின்றான். வழியை விடுங்கள் என்று பெர்னாட்ஷா அமைதியாக கேட்டார்.

அந்த முரடனோ முட்டாள்களுக்கு வழிவிடுவது என் வழக்கமில்லை என்றுகூறி வழியை மறைத்துக் கொண்டான்.

பெர்னாட்ஷா சிரித்துக்கொண்டே எனது பழக்கம் வேறுவிதமானது, " நான் முட்டாள்களுக்கு வழிவிட்டு விலகிநிற்பேன்" என்று கூறிவிட்டு பாதையில் ஒருபுறமாக விலகி நின்றார்.

மிகவும் சாதுரியமாக அவமானப்படுத்தப்பட்ட அந்த முரடன் பெர்னாட்ஷாவை முறைத்துக் கொண்டு அவரைக் கடந்து சென்றான். இது எப்படி இருக்கு?

பாப்பா முரசு சிறுகதை

## தவறு!



முகலாயச் சக்கரவர்த்தி ஔரங்கசீப், சத்ரபதி சிவாஜியை நட்பு முறையில் அழைத்து ஏமாற்றிக் கைது செய்து சிறையிலிட்டார்.

சிவாஜி மாறுவேடத்தில் அந்தச் சிறையிலிருந்து தந்திரமாகத் தப்பி தன் நாடு வந்துசேர்ந்தார்.

பின்பு தனது தாய் ஜீஜாபாயைச் சந்தித்தார். மகனைக் கட்டித் தழுவி தன் சந்தோசத்தை வெளிப்படுத்திய ஜீஜாபாய் தன் மகனைப் பார்த்து, "மகனே, நீ ஒரு தவறு செய்துவிட்டாய்..." என்றார்.

"என்ன தவறு, அம்மா அது?" சிவாஜி பணிவாகக் கேட்டார்.

"மகனே, முகலாயச் சக்கரவர்த்திகளைச் சந்திக்கச் செல்பவர்கள் செலுத்தும் வணக்கமான, முன்புறமாகச் சிறிது குனிந்து, இடதுகையைப் பின்புறமாக வைத்துக்கொண்டு வலது கையால் மூன்று முறை சலாம் செய்யும் வணக்கத்தை நீ செலுத்தவில்லை. நீ சென்றது நட்பு முறையில்தானே! நண்பனாகச் சென்ற நீ அந்த வணக்கத்தைச் செலுத்தத் தவறிவிட்டாயே..." என்றார் தாய்.

"தவறுதான் அம்மா..." என்று சிவாஜி, தன் தாய் நட்பின் பெருமையை உணர்த்தியதைப் புரிந்துகொண்டு தனது தவறை ஒப்புக்கொண்டார்.

## மீசைக்கா காசு?



எட்டயபுரம் மன்னருக்கு பாரதியார் மீசை வைத்திருப்பது பிடிக்கவில்லை. அதை அவர் ரசிக்கவும் இல்லை. அது பற்றி, பாரதியின் சிறிய தந்தையிடம், "பாரதியை மீசையை எடுக்கச் சொல்லுங்கள். எடுக்காவிட்டால் மாதந்தோறும் வழங்கப்படும் மானியப் பணம் நிறுத்தப்படும்" என்று கட்டளையிட்டார்.

பாரதிக்கு வந்ததே கோபம்! மன்னரிடம் சென்றார்.

"ஐயா, இத்தனை நாள் எனக்கு அளித்த மானியம் எனது கவித் திறமைக்கு என்று எண்ணியிருந்தேன். இன்றுதான் அது மீசைக்காக என்பதை அறிந்தேன். அது மீசைக்காக என்றால் அந்தக் காசு எனக்கு வேண்டாம்.." என்றார் படபடப்புடன் பாரதியார்.

## ரொம்ப சூடுங்கோ!



மெடிடெரேனிய பகுதியின் பல இடங்கள் உலகில் வேறு எங்கும் காணமுடியாத தாவரங்களை கொண்டுள்ளன. புவியியல் நிலையின்மை, இவற்றின் சிறிய இட அமைப்பு ஆகியவற்றால் இவை சூடான பகுதிகளாக தனிமைப்படுத்தப்பட்டு உள்ளன.

இவை உயிரின வாழ்தலை பற்றி ஆராயும் அமைப்பினரால் மிக முக்கியமான இடங்களில் ஒன்றாக குறிக்கப்பட்டு உள்ளன. உலகின் முக்கியமான சூடான பகுதிகளில் ஒன்று மெடிடெரேனிய கடல் பகுதியை ஒட்டிய நிலப்பகுதியாகும். இங்கே வேறு எங்கும் காணமுடியாத 13 ஆயிரம் தாவர வகைகள் காணப்படுகிறது. வெப்ப மண்டல ஆண்டஸ் பகுதியில் 20 ஆயிரம் தாவர வகைகள் காணப்படுகிறது. அதற்கு அடுத்த இடத்தில் மெடிடெரேனிய பகுதி உள்ளது.

இயற்கை பொக்கிசங்கள். தென் ஆபிரிக்க கடலினை ஒட்டிய மெடிடெரேனிய பகுதியில்தான் இதுபோன்ற அரிய வகை தாவரங்கள் காணப்படுகிறது.

**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.**

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள்.
சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி: 09.03.2015

**வர்ணம் தீட்டும் போட்டி இல.1085**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல:167,**
**யாழ்ப்பாணம்.**

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 1083**


டொ.சுபகா, பிரதான வீதி,
நுவரெலியா.

பரிசுக்குரியவர்: 1083

பாராட்டுக்குரியவர்கள்

01. பொ.கானுஜன், முள்ளியவளை, முல்லைத்தீவு.
02. என்.அஸீஸ், உடப்பு, புத்தளம்.
03. யோ.சுபாஷினி, சரசாலை தெற்கு, சாவகச்சேரி.
04. எம்.சாமந்தி, பூவரசங்குளம், வவுனியா.
05. தா.பாவனா, மட்டுவில், சாவகச்சேரி.
07. டொ.சுபகா, கண்டி வீதி, பளை.
08. எஸ்.லொசியா, கோப்பாய் மேற்கு, கோப்பாய்.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசு தரும் எண்ணம்



# உண்மைத் தொடர்

அதிர் இடி 79

அதேவேளையில் உலகெங்கும் இஸ்ரேலிய கொமாண்டோக்கள் நடத்திய அதிரடித் தாக்குதல் பற்றிய செய்திகள் பரபரப்பாக வெளி ஆகியிருந்தன.

இஸ்ரேலிய ஜெட் விமான நிலையத்தில் கொமாண்டோக் களை இஸ்ரேலிய துணைப் பிரதமர் வரவேற்கும் காட்சி யும் வெளியாகி இருந்தது.

அமீனுக்கு அச்செய்திகள் விமான நிலையத்திலேயே கூறப்பட்டன.

காலால் தரையைப் பலமாக உதைத்த அமீன் தன் காரில் போய் ஏறிக்கொண்டான்.

மருத்துவமனைக்கு போ என்றான். அவன் முகத்தில் குரூரமான எண்ணம் உதித்திருந்தது.

கம்பலா மருத்துவ மனை நோக்கி இடி அமீன் காரில் சென்றுகொண்டு இருந்தபோதே. அதே காரில் அவனுடன் பயணம்செய்த இராணுவ அதிகாரி நடந்த சம்பவங்கள் அனைத்தையும் விலாவாரியாக விளக்கிக் கொண்டிருந்தார்.

இடி அமீன் கருத்து எதுவும் கூறாது. வெறுமனே கேட்டுக் கொண்டிருந்தான். அவனது முகச்சாயலிலிருந்தே கோபத்தை கட்டுப்படுத்த படாதபாடுபடுகின்றான் என்பது பளிச்சென்று தெரிந்தது.

அவனது கோபத்தைக் காண அந்த அதிகாரிக்கே பயம் பிடித்துக்கொண்டது.

கம்பலா மருத்துவமனைக்கு முன்பாக கார் நின்றதும். படுவேகமாக இறங்கினான்.

அமீனைக் கண்டதும் மருத்துவமனை ஊழியர்கள் கதி கலங்கிப்போனார்கள்.

டாக்டர்களுக்கு தகவல் கொடுக்க அவர்கள் தலை தெறிக்க ஓடிவந்தனர். அதே நேரம் அவர்கள் மனதில் சந்தேகமும் உற்பத்தியானது.

எண்டபே விமான நிலையத்தில் இஸ்ரேலிய கொமாண்டோக்களுடன் வந்த போலி அமீன் பற்றிய செய்தியை அறிந்திருந்தார்கள். அதனால் இப்போது வருவது தங்கள் அதிபர்தானா என்று சந்தேகப்பட்டார்கள்.

அவர்களது சந்தேகத்துக்கு காரணம் இருந்தது.


அந்த மருத்துவமனையில் தான் பணயக்கைதிகளில் ஒரு-வரான வயோதிப மாது திருமதி டோரா புளொச் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார்.

அதனால் அவரை இஸ்ரேலிய கொமாண்டோக்களால் மீட்க முடியவில்லை. அவரையும் மீட்டுச் செல்லத்தான் இங்கும் வந்துவிட்டார்களோ என்று உள்ளூர அச்சம் கொண்டனர்.

ஆயினும் இடி அமீனுடன் வந்த இராணுவ அதிகாரியையும் ஏனைய மெய்ப்பாதுகாவலர்களை யும் கண்டதால் சந்தேகம் பெருமளவு மறைந்தது.

ஆனால். முகத்தை வைத்தே அகத்தை அறியக்கூடிய அமீனுக்கு அவர்களது சந்கேகம் புரிந்துவிட்டது.

என்ன சந்தேகமாக இருக்கிறதா? நான்தான் உங்கள் அதிபர் என்றபடியே நடந்தான்.



திருமதி டோரா புளொச் மூச்சுத் திணறினார். அவர் கண்கள் உயிர்ப் பிச்சை கேட்டு மன்றாடுவது போலத்தெரிந்தன. டாக்டர்கள் செய்வதறியாது திகைத்து நின்றனர். அவரை துவேசத் தோடு நடத்திய மருத்துவமனை ஊழியர்களுக்கு முதன் முதலாக அவர்மீது அனுதாபம் ஏற்பட்டது.

இனி...

இடி அமீன் திடீரென்று இங்கு விஜயம் செய்திருப்பது ஏனென்று அறிய டாக்டர்கள் துடித்துக் கொண்டிருந்தனர்.

எங்கே கிடக்கின்றாள். அந்த இஸ்ரேலிய நாய்? என்று அமீன் கேட்டபோதுதான் டாக்டர்களுக்கு காரணமும் புரிந்தது. விபரீதம் ஏதோ நடக்கப்போகிறது என்ற கலக்கமும் விரிந்தது.

திருமதி டோரா புளொச் கிழவியாக இருப்பார் என்று அமீன் எதிர்பார்க்கவில்லை. வயோதிப மாதுதான் அவர் என்று தெரிந்ததும் சின்னதாய் ஒரு தயக்கம் மனதில் எழ இஸ்ரேலியர்கள் மீதான கோபம் முந்திக்கொண்டது. அந்தக் கோபம் தயக்கத்தை விழுங்கியது.

வயோதிப மாதை இராட்சதன் போன்ற கோர. கோபமுகத்துடன் நெருங்கினான் அமீன்.

தன்னை நோக்கி ஒரு இராட்சதன்போல வருவது இடி அமீன் என்று திருமதி டோரா புளொச் ஓரளவு ஊகித்துக் கொண்டார்.

பத்திரிகைகளில் அமீனது படங்களைப் பார்த்திருக்கிறார். அமீன் பற்றிய பயங்கரச் செய்தி களையும் கேள்விப்பட்டிருக்கிறார்.

இஸ்ரேலிய பெண்மணியான திருமதி டோரா எண்டபே விமான நிலையத்தில் நடந்து முடிந்த சம்பவம் பற்றி அறிந்திருக்கவில்லை. அவருக்கு டாக்டர்களோ. தாதிகளோ அதனைப் பற்றிக் கூறவில்லை.

இஸ்ரேலியப் பெண்மணி



என்பதால் மருத்துவமனையிலும் கொஞ்சம் துவேசமாகவே அவருடன் நடந்துகொண்டனர்.

ஏதோ தீங்கு நேரப் போகின்றது என்பது அவரது உள் உணர்வு எச்சரித்தது.

தன்னை நோக்கி வந்த அமீனை நோக்கி அப்பாவியான புன்னகை ஒன்று அவரது உதட்டில் உதித்தது.

மரியாதை நிமித்தம் கட்டிலில் இருந்து எழுந்துகொள்ள அவர் முயன்றார்.

ஆனால் அதற்கு வாய்ப்பே இருக்கவில்லை. அருகில் வந்துவிட்ட அமீனுக்கு அந்த வயோதிப மாதுவின் புன்னகை. இஸ்ரேலியர்களது ஏளனச் சிரிப்பாகவே தெரிந்தது.

அமீன் கரம் இரண்டும் நீண்டன. வயோதிப மாதின் கழுத்தைச் சுற்றி அழுத்தியது.

இரும்புப் பிடி..

மரணப்பிடி...

திருமதி டோரா புளொச் மூச்சுத் திணறினார். அவர் கண்கள் உயிர்ப்பிச்சை கேட்டு மன்றாடுவது போலத்தெரிந்தன.

டாக்டர்கள் செய்வதறியாது திகைத்து நின்றனர். அவரை துவேசத்தோடு நடத்திய மருத்துவமனை ஊழியர்களுக்கு முதன் முதலாக அவர்மீது அனுதாபம் ஏற்பட்டது.

அமீனாக இல்லாது வேறு யாராவது அக்காரியத் தைச் செய்திருந்தால் தடுத்திருப்பார்கள்.

அமீனைத் தடுக்கும் துணிச்சல் எவருக்கும் வரவில்லை.

அந்த வயோதிப மாது துடிதுடித்து பலியாவதை காணச் சகியாது டாக்டர்களும். ஊழியர்களும் அங்கிருந்து அகன்றனர். அவர்களால் செய்ய முடிந்த மௌன எதிர்ப்பு அது மட்டும்தான்.

திருமதி டோரா புளொச் தன் இறுதி மூச்சை இழந்தார். துவண்டு கிடந்தார்.

இவளை மருத்துவமனை க்கு வெளியே கொண்டு சென்று போடுங்கள்! என்று தன் காவலர்களுக்கு உத்தரவிட்டான்.

சம்பளத்திற்காகவும். சுக போகங்களுக்காகவும் அமீனைச் சுற்றியிருக்கும் அந்த காவலர் களுக்கு நியாயம். அநியாயம் பற்றிக் கவலையே கிடையாது.

(தொடரும்)

## அற்புதன் எழுதிய

# இடி அமீன்

---

**வாசக நெஞ்சங்களே!**

**உங்கள் சிந்தனைக்குத் தீனிபோடும் வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.**

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

## குறுக்கெழுத்துப் போட்டி - 614

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | ■ | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | ■ | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | ■ | 24 |
| ■ | 26 | ■ | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | 35 | ■ |

## குறுக்கெழுத்துப் போட்டி 612 - விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சி 1 | வ 2 | ப் 3 | பு 4 | ரோ 5 | ஜா 6 |
| னே 7 | அ 8 | ■ | ரி 10 | கி 11 | ■ |
| க 13 | தி 14 | ■ | த 16 | ணி 17 | கை 18 |
| ப 19 | ■ | மே 21 | ல் 22 | ■ | கு 24 |
| ல 25 | வ 26 | ன் 27 | ■ | நே 29 | ளி 30 |
| ம் 31 | து 32 | மை 33 | ன 34 | ■ | ர 36 |

**மேலிருந்து கீழ்**

01. "அங்கண் உலகுக்கு அருந்ததி போல் இங்கண் உலகுக்கு..." என்றார் இளங்கோ.
02. என்னைக் காணவில்லையே நேற்றோடு எங்கும் தேடிப்பார்க்கிறேன் காற்றோடு.... என்று கவிஞர் வாலி எழுதியது இதற்காக. (குழம்பியுள்ளது)
04. நொடிநேரம். கடைசி எழுத்து விடுபட்டுள்ளது (திரும்பியுள்ளது)
05. தகுதி ; காதல்.
06. கற்பு என்பது ஆணுக்கும் உண்டு என்பதை உலகிற்கு வலியுறுத்தியவள். இவள் திரு நீலகண்டரின் மனைவி. (குழம்பியுள்ளது)
15. நரம்பு ; நாழிகை.
22. தாண்ட.
29. மிகச் சிறிய நிலப்பகுதி ; டில்லி. நடு எழுத்து விடுபட்டுள்ளது.

**இடமிருந்து வலம்**

01. திருமணச் சடங்கின்பொழுது மணமகள் மணமகனுக்குச் சூட்டுவது.
07. அழகு: ஓர் இடைச்சொல். (திரும்பியுள்ளது)
10. சேறு (குழம்பியுள்ளது)
13. அடக்கம் ; மதிப்பு. (குழம்பியுள்ளது)
17. வீட்டில் வளர்க்கும் பறவைகளில் ஒன்று.
19. கறிவகை ; இறுகின கூழ். (குழம்பியுள்ளது)
28. "கற்புநிலை என்று வந்தால் அதை. இரு கட்சிக்கும் பொதுவில் வைப்போம்" என்று கூறியவர் (குழம்பியுள்ளது)
31. ஒரு மனிதன் தன் மூன்று குணங்களையும் ஒருமைப்படுத்தி. இயல்பான கடவுட் பண்புடன் இணையச் செய்வது யோகம் ஆகும் என்று சொன்ன முனிவர்.

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி **08.03.2015** க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.
அனுப்பவேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல. - 614
தினமுரசு வாரமலர்.
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்
தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.
சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 1000 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 612 இற்கான சரியான விடைகளை அனுப்பி 1000 ரூபா பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி.**

**ம.இந்திரகுமார், முள்ளியவளை, முல்லைத்தீவு.**

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. சி.பாலசுந்தரம், கல்வளை, சண்டிலிப்பாய்.
02. எம்.தாமீரன், பசல்ஸ் லேன், கொழும்பு -06.
03. எஸ்.பிரியந்தி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
04. மு.தாமரா, கோப்பாய், யாழ்ப்பாணம்.
05. தி.அஜந்தன், கைதடி மேற்கு, கைதடி.
06. கா.திகாம்பரம், கோவில் வீதி, பதுளை.
07. எம்.ஆயிஷா, வலஸ்முல்ல.
08. தா.சாவித்த ிரி, ரெட்பானா, விசுவமடு.
09. து.பாமினி, கண்டி வீதி, சாவகச்சேரி.







## புரியாணி சாப்பாடு!

தமிழ் சினிமாவின் உச்ச நட்சத்திரங்கள் விஜய் மற்றும் அஜித். இவர்கள் ரசிகர்கள் பலத்தை நாங்கள் சொல்லி யாருக்கும் தெரியவேண்டியது இல்லை. இந்நிலையில் அஜித் தன் ஒவ்வொரு படத்தின் படப்பிடிப்பின் போதும் பிரியாணிசெய்து பரிமாறி அவர்களை சந்தோசப்படுத்துவார். தற்போது இதே வழியை விஜய்யும் பின்பற்றுகிறார். கத்தி படத்தில் ஆரம்பித்து தற்போது புலி படத்தின் படப்பிடிப்பு தளத்தில் அனைவருக்கும் பிரியாணி விருந்து கொடுத்துள்ளார் தளபதி.

## ஈராஸின் கைகளில் மாஸ்

விஜய், அஜித் என இருவர் போட்டிகளுக்கிடையே தன் ரூட் அமைத்து அதில் வெற்றிபெற்றவர் சூர்யா. இவரது நடிப்பில் விரைவில் மாஸ் திரைப்படம் வரவிருக்கிறது. இப்படத்தின் வெளியீட்டு உரிமையை தற்போது ஈராஸ் நிறுவனம் வாங்கியுள்ளது. ஏற்கனவே சூர்யா நடித்த மாற்றான் திரைப்படத்தை இந்நிறுவனம் தான் வெளியிட்டது. மாற்றான் படுதோல்வியடைந்தாலும், செண்டிமென்ட் மேல் தான் எனக்கு நம்பிக்கை இல்லை என்று சூர்யா உறுதியாக உள்ளார்.



## கிடைத்தது கால்ஷீட்

இளைய தளபதி விஜய் தற்போது புலி படத்தில் நடித்துக்கொண்டிருக்கிறார். இப்படம் முடிந்த கையோடு, கலைப்புலி தாணு தயாரிப்பில் அட்லீ இயக்கத்தில் ஒரு படத்தில் நடிக்கவிருக்கிறார். இதை தொடர்ந்து இவரது 60 ஆவது படத்தையும் ஒரு பிரமாண்ட நிறுவனம்தான் தயாரிக்கவுள்ளதாம். தற்போது திரையரங்குகளில் வெற்றிகரமாக ஓடிக்கொண்டு இருக்கும் அனேகன் படத்தின் தயாரிப்பு நிறுவனம் ஏ.ஜி.எஸ் தான் விஜய்யின் 60ஆவது படத்தை தயாரிக்கவுள்ளதாக கொலிவூட் வட்டாரங்களில் கூறப்படுகிறது. மேலும், விஜய்யின் கால்ஷீட்டிற்காக இந்நிறுவனம் பல ஆண்டுகள் காத்திருப்பது குறிப்பிடத்தக்கது.







தென்னிந்திய சினிமா தாண்டி பொலிவூட் வரை கலக்கிக்கொண்டிருக்கிறார் தனுஷ். இவர் நடிப்பில் சமீபத்தில் வெளிவந்த அனேகன் படம் ரசிகர்களை வெகுவாக கவர்ந்துவருகிறது. இந்நிலையில் சில வருடங்களாகவே தனுஷை சந்தித்து சிலர் உங்கள் பெயருக்கு முன்னால் ஏதாவது பட்டம் போடுங்கள் என்று கூறி வருகின்றனர்.

ஆனால், இதெல்லாம் நமக்கு வேண்டாம் என்று அவர் கூறிவந்த நிலையில், ரசிகர் ஒருவர் 'இளைய சூப்பர் ஸ்டார்' என்று தனுஷிற்கு டுவிட் செய்திருந்தார். இதை அவர் ரீடுவிட் செய்ய, எல்லோரும் தனுஷ் சூப்பர் ஸ்டார் பட்டத்தை ஏற்றுக்கொண்டார் என கமெண்ட் அடிக்க ஆரம்பித்துவிட்டனர்.





# வதந்திக்கு முடிவு

வெங்கட் பிரபு இயக்கத்தில், சூர்யா நடித்து கொண்டிருக்கும் படம் மாஸ். இப்படம் இந்த வருடம் ஏப்ரல் அல்லது மே மாதத்தில் வெளிவரும் என கூறப்பட்டு வருகிறது. இந்நிலையில் இப்படம் 3டி தொழில்நுட்பத்தில் வெளிவரும் என ஒரு செய்தி பரவிவந்தது. ஆனால், இதை வெங்கட் பிரபு மறுத்துள்ளார். 3டி தொழில் நுட்பத்தில் எடுப்பது மிகவும் கஷ்டம், மாஸ் திரைப்படத்தை அப்படி எடுக்கும் எண்ணம் இல்லை என தன் டுவிட்டர் பக்கத்தில் அவர் தெரிவித்துள்ளார்.

# நடிப்பாரா ஜெனிலியா?

போய்ஸ், சச்சின், சந்தோஷ் சுப்ரமணியம் ஆகிய படங்களின்மூலம் தமிழ் மக்கள் அனைவரையும் கவர்ந்தவர் ஜெனிலியா. இவர் பொலிவூட் நடிகர் ரித்தேஷ் தேஷ்முக்கை திருமணம் செய்து கொண்டு திரைத்துறையில் இருந்து விலகினார். சமீபத்தில் தான் இவருக்கு குழந்தை பிறந்தது. இந்நிலையில் மீண்டும் நடிப்பீர்களா? என்று கேட்டதற்கு,


“நல்ல கதாபாத்திரங்கள் வந்தால் கண்டிப்பாக நடிப்பேன். மேலும், என் கணவர் என்னை நன்றாக பார்த்துக் கொள்கிறார், அதனால் நடிக்கின்ற எண்ணம் எனக்கு வரவில்லை, அப்படியே நடித்தாலும் சொந்த தயாரிப்பில்தான் நடிப்பேன்” என்று கூறியுள்ளார்.

# நகுலுக்கு டும் டும் டும்....

‘போய்ஸ்’ படத்தின்மூலம் தமிழ் சினிமாவிற்கு அறிமுகமானவர் நகுல். இவர் பிரபல நடிகை தேவையானியின் தம்பியும்கூட. இவரது நடிப்பில் நாளை தமிழுக்கு எண் 1ஐ அழுத்தவும் படம் வெளியாகவிருக்கிறது. தற்போது இவர் தன் திருமண செய்தியை வெளியிட்டுள்ளார். இதில் “நான், கடந்த 4 வருடங்களாக ஒரு பெண்ணை காதலித்துவருகிறேன். அவருடைய பெயரை இப்போது வெளியிட விரும்பவில்லை. அந்த பெண் சென்னையை சேர்ந்தவர்தான். எம்.பி.ஏ. படித்து இருக்கிறார்.

எனது நண்பர் ஒருவரின் பக்கத்து வீட்டில் என் காதலி வசித்துவருகிறார். நண்பர்மூலம் அவர் அறிமுகமானார். நட்புக் காதலாகி, திருமணத்தில் முடிய இருக்கிறது. எங்கள் காதலை அக்கா தேவயானி உட்பட என் பெற்றோர்களும், காதலியின் பெற்றோர்களும் ஏற்றுக்கொண்டுவிட்டார்கள் என கூறியுள்ளார்.

வாழ்த்துக்கள் நகுல்.



# சாடுகிறார் சரத்குமார்

சூப்பர் ஸ்டாருக்கு தமிழகம் மட்டுமின்றி ஜப்பான் வரை ரசிகர்கள் இருக்கின்றனர். இவரது நடிப்பில் வெளி வந்த லிங்கா திரைப்படம் வசூல் ஆகவில்லை, நஷ்டஈடு கொடுக்கவேண்டும் என்று சில விநியோகஸ்தர்கள் கூறிவந்தனர். இந்நிலையில் ரஜினிகாந்தை கண்டிக்கும் விதமாக மெகா பிச்சை எடுக்கும் போராட்டம் செய்ய இருப்பதாக அவர்கள் கூறினர். இதுவரை பொறுமையுடன் இருந்து ரஜினி ரசிகர்கள் தற்போது களத்தில் இறங்கி உள்ளனர். விநியோகஸ்தர்கள் போராட்டம் செய்வதாக அறிவித்த அன்றைய தினம், தமிழகத்தில் உள்ள அனைத்து ரஜினி ரசிகர்களும் இதை எதிர்த்து போராட்டம் செய்யவிருப்பதாக ஒரு தகவல் வெளிவந்துள்ளது. எனவே, இதற்கு ரஜினி என்ன முடிவு எடுப்பார் என்பதே தற்போது எல்லோருடைய கேள்வியாக உள்ளது.

அதேவேளை, தமிழ் சினிமாவின் மூத்த நடிகர் மற்றும் நடிகர் சங்கத் தலைவர், பத்திரிகை ஆசிரியர் எனப் பல முகங்களை கொண்டவர் சரத்குமார். இவர் நடிப்பில் இன்று சண்டாமருதம் திரைப்படம் திரைக்கு வரவிருக்கிறது. இப்படம் குறித்த ப்ரோமோஷன் நிகழ்ச்சிக்காக பங்கேற்ற இவர், லிங்கா படத்தின் நஷ்டஈடு குறித்து மனம் திறந்துள்ளார். இதில் “ஒரு படத்திற்கு இலாபம் வரும்போது யாரும் வந்து அதை எங்களுக்கு கொடுப்பதில்லை, இதே நிலையில் நஷ்டம் வந்தால் மட்டும் எதற்கு வரவேண்டும்?, மனிதாபிமான அடிப்படையில் ரஜினியே பணம் கொடுப்பார். இதற்கு முன்னும் கொடுத்திருக்கிறார். அதை செய்யாமல் போராட்டம், பிச்சை போன்ற விஷயங்கள் மிகவும் மோசமான செயல்கள்” என்று கூறியுள்ளார்.



# களத்தில் நட்சத்திரங்கள்!

தமிழ் சினிமாவின் வளரும் தலைமுறை நடிகர்கள் சிம்பு மற்றும் கார்த்தி. இவர்களில் சிம்பு தன் படத்தை ரிலிஸ் செய்து சுமார் 2 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. தற்போது இவரது நடிப்பில் வாலு படம் மார்ச் மாதம் 27ஆம் திகதி வெளி-வரும் எனக் கூறப்பட்டது. இந்நிலையில் அதே தேதியில் கார்த்தி நடித்த கொம்பன் படமும் வெளிவர விருக்கிறது. சிம்பு, கார்த்தி படங்கள் ஒரே நாளில் வெளிவருவது இதுவே முதன் முறை என்பது குறிப்பிடத் தக்கது.





இளைய சூப்பர் ஸ்டார்!!

# முகவரி தேடித் திரிகின்றேன்



அன்பே!
எனதுள் எழுந்த ஓர் சொற்பனத்தில்
சுகமாய் நீ தென்பட்டு நின்றாய்
பனித்துளிபட்ட புதுமலராய்
என் வாசல் வழியே புகுந்து.

என் கனவுக் கோவைக்குள் கலந்திட்ட உன்னை
கவியெழுத சொன்னதடி என்மனமென்னை
எப்படித்தான் எழுதுவேனடி?
எவரையும் ஏங்கவைக்கின்ற எழில் உனது.

அன்பே!
உன் கருங்கூந்தலில் நீ குத்தியிருந்த
அந்த ஒத்த ரோஜாவைப் பார்த்தேனடி
ஒத்தக்கால் புதைந்து
உக்காந்திக்கின்ற அந்த ரோஜா!
உன் கூந்தலிலே(லுக்கே) தான்
பூத்தது போலிருந்தது.

கோதி முடியாமல்
குலைந்துகிடந்த கூந்தலை
ஒருபுறம் ஒதுக்கியள்ளிப்போட்டாய்
அப்பகூட காதோடொளிந்து
கிடந்த கம்மலும்
உனக்கு அழகாகத்தான்
இருந்தது.

பெண்ணே! உன்னை
மேகமிட்ட எனது பார்வைகள்
பாரினிலே பனிந்ததடி
உன் பிஞ்சுப்பாதங்களிரண்டையும்
கொஞ்சிக்கிடந்தன இந்த கால்கொலுசும்.

மறைந்(த்)திருந்த உன் முகத்தினை திருப்பினாயடி
தேனிலவு தரையிறங்கி வந்திருந்தாபோல்
உந்தன் அந்த அழகு முகம்.

M.A.நிஜாம், புல்மோட்டை - 03

# பார்த்தாலே நீ போதும்....




பார்த்தாலே நீ போதும்
என்னவளே கருவண்டுப் பார்வை
என் இதயத் துடிப்பில்
உதிர்த்ததடி உன்னால் காதல் வலி
ஒன்றை ஜடை கூடுதல் மாதுமாகி
பறித்து விட்டாய் உனக்குள்
என் உயிர் காதலை
உறவின் உரசலில் உயிர் பெற்றவளே
உன் ஊர் மண்ணில் என் காதல் வீசும்
ஏன் பேசினாய் என்னோடு
உன் விழி வார்த்தைகளை
நெடிப் பொழுதில் உன் கன்னக் குழிக்குள்
என் இதயம் சிறைப்பட்டுக் கொண்டதடி.

நினைவிருக்கிறதா அந்திப்
பொழுதில் அவசர முத்தம்
காதல் கனவே நனவாகும் பொக்கிஷம் அது
என் உள்ளத்தில் இருந்து உரைக்கின்றேன்
நீயே என் காதற் சண்டைக்கோழி.

பிரான்சிஸ் கிருபாகரன். கொக்குவில் மேற்கு.

# நட்பும் பிரிவும்

தேன்



நட்பு என்ற குடையின் கீழ்
நாம் இருவரும் பழகிய ஞாபகங்கள்
பல திசைகளிலே பிறந்தோம்
பள்ளிதனில் ஒன்றாகவே
இணைந்தோம்
நட்பு என்ற ஒரு சொல்லிற்கு
பல இலக்கணங்களை கண்டோம்
நட்பு எனும் மழையிலே நனைந்து
தற்போது பிரிவு எனும் துயரினிலே
மூழ்குவது ஏனோ?
உன்னை விட்டு நான் பிரிந்தாலும்
நம் நட்பு என்றென்றும் வளரும்
நண்பனே!
நம் நட்பின் ஆழம் நாளெல்லாம்
வளரட்டும்.

வி.அஜந்தன், வவுனியா.



# ச (சி) ந்திப்போமோ?






சந்திப்போமா என்கிறாய்
சந்தித்தால் உடன் போகவேண்டும்
எனப் பதறுகிறாய்.
பத்து நிமிடங்கள் என்னோடிருக்க
பயந்து நடுங்குகிறாய்.
வந்ததும் வராததுமாக
ஓடி விடுகிறாய்.
திடீரென நம் திருமணம்
எப்போதென்றும்
நச்சரிக்கின்றாய்.
பத்து நிமிடம் என்னோடு
சேர்ந்திருக்கத் தயங்கும் நீ
வாழ்நாள் முழுக்க என்னோடு
எப்படி இருக்கப் போகிறாய்
சிந்திப்போமா...?

அ.சந்தியாகோ, கண்டி.

# பிடிவாதம்






கைவிடப் போறாய் என்று
காதல் பிடிவாதத்தில்
கண்ணீரோடு
அலைந்தேன் நான்
உனைக் கணவனாக்க
வேண்டும் - என
ஏன் வெறுத்தாய்...?
இன்னும்தான்
புரியவில்லை...?
தாலி கட்டத் தலை அசைத்தாய்
தத்தளித்தேன் சந்தோசத்தில்.
தங்கமான புருசன் என
உன்மானம் காக்கவென
எம் இனம் முன்னிலையில்
நீ தந்த தாலி என்று அதுவரை
தெரியாது. இன்றுதான் புரிகிறது
ஊருக்கு நான் மனைவி
உள்ளுக்குள் இன்னொருத்தி
எல்லோரும் எதிர்த்தார்கள்
வாழ்விழக்கப் போறாய் என்று
பிடித்தேன் பிடிவாதம் - நீ
எனக்கு வேண்டும் என்று
ஆனால் தலைகுனிந்து
நிற்கிறேன்
என்னிடமே நான்...!
கல்லானாலும் கணவன்
புல் ஆனாலும் புருசன் என்று.

ந.பிரசன்னா புதுக்குடியிருப்பு.

# 2015 உலகக் கிண்ணம்




**சிம்பாவே Vs ஐக்கிய அரபு எமிரெட்ஸ்**
**ஆட்டத்தின் பின் (8 ஆவது ஆட்டம் வரை)**
**அதிக ஓட்டங்கள்:-**

| | | |
|---|---|---|
| டேவிட் மில்லர் | (தெ.ஆ) | 138* |
| ஆரோன் பின்ச் | (அவுஸ்) | 135 |
| டுமினி | (தெ.ஆ) | 115* |
| கோஹ்லி | (இந்தியா) | 107 |
| லென்டல் சிமன்ஸ் | (மே.இ) | 102 |

**பந்துவீச்சு**
**அதிக விக்கெட்டுகள்**

| | | |
|---|---|---|
| மிச்சல் மார்ஷ் | (அவுஸ்) | 5 |
| சொகெய்ல் கான் | (பாக்) | 5 |
| ஸ்ரீபன் பின் | (இங்கிலாந்து) | 5 |
| கோரி அன்டர்சன் | (நியூ) | 5 |
| வெட்டோரி | (நியூ) | 5 |

**திறமையான பந்துவீச்சு**

| | |
|---|---|
| 5/33 | மிட்சல் மார்ஸ் (அவுஸ்) Vs இங்கிலாந்து |
| 5/55 | சொஹெய்ல் கான் (பாக்) Vs இந்தியா |
| 5/ 71 | ஸ்ரீபன் பின் (இங்கிலாந்து) Vs அவுஸ்திரேலியா |
| 4/35 | மொஹமட் ஸமி (இந்தியா) Vs பாகிஸ்தான் |
| 3 /18 | கோரி அன்டர்சன் (நியூ) Vs ஸ்கொட்லாந்து |

**உச்ச ஓட்ட எண்ணிக்கை**

| | | | |
|---|---|---|---|
| 138* | டேவிட் மில்லர் (தெ.ஆ) | Vs | சிம்பாவே |
| 135 | ஆரோன் பின்ச் (அவுஸ்) | Vs | இங்கிலாந்து |
| 115* | டுமினி (தெ.ஆ.) | Vs | சிம்பாவே |
| 107 | கோஹ்லி (இந்தியா) | Vs | பாகிஸ்தான் |

## இனி வரும் நாட்களில் ஆட்டங்கள்

| | | | |
|---|---|---|---|
| 26.02.2015 | ஆப்கானிஸ்தான் | Vs | ஸ்கொட்லாந்து |
| 26.02.2015 | பங்களாதேஷ் | Vs | இலங்கை |
| 27.02.2105 | தெ.ஆபிரிக்கா | Vs | மே.இ.தீவுகள் |
| 28.02.2015 | நியூசிலாந்து | Vs | அவுஸ்திரேலியா |
| 28.02.2015 | இந்தியா | Vs | ஐக்கிய அரபு எமிரெட்ஸ் |
| 01.03.2015 | இங்கிலாந்து | Vs | இலங்கை |
| 01.03.2015 | பாகிஸ்தான் | Vs | சிம்பாவே |
| 03.03.2015 | அயர்லாந்து | Vs | தெ.ஆபிரிக்கா |
| 04.03.2015 | பாகிஸ்தான் | Vs | ஐ.அரபு. எமிரெட்ஸ் |
| 04.03.2015 | அவுஸ்திரேலியா | Vs | ஆப்கானிஸ்தான் |
| 05.03.2015 | பங்களாதேஷ் | Vs | ஸ்கொட்லாந்து |

# இப்படிச் செய்யலாமா?



**இங்கிலாந்து** எதிர் அவுஸ்திரேலிய உலகக் கிண்ண முதல் போட்டி பெருத்த சர்ச்சையைக் கிளப்பியதொன்றாக முடிவடைந்துவிட்டது. அவுஸ்திரேலியா 111 ஓட்டங்களால் மகத்தான வெற்றிபெற்றது என்பது உண்மை என்றாலும், ஒரு அற்புதமான சதம் ஒன்று ஜேம்ஸ் டெய்லருக்கு மறுக்கப்பட்டுவிட்டது என்பது கசப்பான உண்மை. இதற்குக் காரணம், அந்த ஆட்டத்திற்கு பங்களிப்புச் செய்த அத்தனை நடுவர்களும் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

42 ஆவது ஓவரில் ஜேம்ஸ் அன்டர்சன் ரண் அவுட் கொடுக்கப்பட்டதே பெருஞ்சர்ச்சையைக் கிளப்பியுள்ளது. முன்னதாக 98 ஆடிக்கொண்டிருந்த ஜேம்ஸ் டெய்லர் எதிர்கொண்ட பந்தொன்று LBW என்று அலீம் டார் அவுட் கொடுக்கிறார். ஜேம்ஸ் டெய்லர் முறைப்பாடு செய்கிறார். அந்த முடிவுக்கு முன்பே, முன்சென்று அன்டர்சன் ரண் அவுட் ஆக்கப்படுகிறார்.

இங்கு ஜேம்ஸ் டெய்லருக்கு அவுட் கொடுத்தபோதே அது DEAD BALL ஆகிவிட்டது என்பதே உண்மை. மேன்முறையீட்டில் ஜேம்ஸ் டெய்லர் அவுட் இல்லையென்று அறிவிக்கப்பட்டது. ஆனால் பந்து DEAD BALL நிலையில் இருக்கும்போது நடுவர் எப்படி அவுட் கொடுக்கலாம் என்பதே அந்தக் கேள்வி.

அந்தவகையில் நடுவர் தவறு செய்தது ஒப்புக்கொள்ளப்பட்டு ஐ.சி.சி இந்தத் தவறுக்கு மன்னிப்புக் கேட்டுக்கொண்டது.ஆனால் இந்த உலகக் கிண்ணத்தின் கன்னிச்சதம் பெறவிருந்த ஜேம்ஸ் டெய்லருக்கு அந்தச் சந்தர்ப்பம் மறுக்கப்பட்டதுதான் துயரமான விடயம். இருந்தாலும் இவர் நடுவர்களிடம் புன்சிரிப்புடன் விடயத்தை விளங்கப்படுத்தியும் நடுவர்கள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. ஜேம்ஸ் டெய்லர் மிகுந்த வேதனையாக இருந்தாலும் புன்சிரிப்புடன் மைதானத்தை விட்டகன்றார். அத்துடன் அவுஸ்திரேலியாவிற்கு வெற்றி என்பதுடன் ஆட்டம் முடிந்தது. அவுஸ்திரேலிய வெற்றியைத் தடுத்திருக்க முடியாதுதான். ஆனால் ஜேம்ஸ் டெய்லருக்கு அற்புதமான கன்னிச்சதம் பெறவிருந்த வாய்ப்பு???

# வாழ்க்கை மலர் அல்ல



**ஆப்**கானிஸ்தான் கிரிக்கெட் அணி உலகக் கிண்ண வரலாற்றில் முதன்முறையாக இறுதிச் சுற்றுப்போட்டியில் கலந்து கொள்கின்றது. ஆப்கான் கிரிக்கெட் பாகிஸ்தான் அகதி முகாம்களில் வளர்ந்தது என்கிறார்கள். ஆனால் இவ்வளவு விரைவில் உலகக் கிண்ண இறுதிப் போட்டி களுக்கு தகுதிபெற்றது பெரிய சாதனை என்றே கருதுகிறார்கள். இந்தவகையில்தான் ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணியின் தலைவர் மொஹமட் நபியும் தனது பத்தாவது வயதில் பாகிஸ்தானுக்குச் சென்று அங்கு தனது கிரிக்கெட் விளையாட்டை ஆரம்பித்தவர். இவரது கிரிக்கெட் வாழ்க்கையிலும் பல ஏற்றஇறக்கங்கள் உண்டு.

2001இன் பின் ஆப்கானிஸ்தான் மண்ணிலேயே கிரிக்கெட் வளர்ச்சிபெறும் சந்தர்ப்பங்கள் வந்ததும், அதன்பின் மிகவேகமான பாய்ச்சலுடன் அந்த நாட்டின் முதன்மை விளையாட்டாக கிரிக்கெட் திகழ்வதும் வரலாறு.

ஒரு தடவை நபி கிரிக்கெட் பயிற்சிக்காக ஜலாலாபாத்தில் இருந்து சென்று கொண்டிருக்கும்போது இவரது தந்தையின் வாகனம் தெருவோரத்தில் அநாதரவாக நின்றிருக்கிறது. இவரது தந்தை கடத்தப்பட்டதாக அப்போது அவர் அறிந்துகொண்டார். உடனடியாக இதுபற்றி அண்ணனிடம் கூறியபோது, பதட்டம் அடையாதே. நீ பயிற்சிக்குப் போ என்று உறுதியாக இவரிடம் அண்ணன் கூறியுள்ளார். இதன்காரணமாக இரண்டு மனதுடன் பயிற்சிக்குச் சென்றாலும், தந்தைக்கு என்ன நடந்தது என்று தமையனிடம் கேட்டுக்கொண்டே இருந்திருக்கிறார்.

ஆனால் உடனடியாக எதுவும் நடக்கவில்லை. மூன்று மாதத்தின் பின்பே தந்தை விடுவிக்கப்பட்டதுடன் கடத்தியவர்களும் கைதுசெய்யப்பட்டனர். நான் ஒரு கிரிக்கெட் வீரராக இருப்பதால் மிகுந்த செல்வத்தை உடையவனாக இருப்பேன் என்றெண்ணியே இவர்கள் தந்தையைக் கடத்தி வைத்திருந்திருக்கிறார்கள் என்பதையும், அப்படியொன்றும் நான் செல்வந்தன் அல்ல என்பதே உண்மை என்றும் நபி தற்போது கூறுகின்றார். இப்படியாகப் பல்வேறு பட்ட வித்தியாசமான அனுபவங்களை பல கிரிக்கெட் வீரர்கள் பெற்றிருப்பார்கள். இவற்றையெல்லாம் தாண்டித்தான் ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணி இன்று உலகின் அதிபிரபல்ய மேடையில் நிற்கிறது.

அப்படி ஒரு அசுர வளர்ச்சி கண்ட ஆப்கானிஸ்தான் அணியை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

# ஊரதேச நட்சத்திரம்



நியூசிலாந்து கிரிக்கெட் வீரர் கேன் வில்லியம்சன் அந்த நாட்டின் அதிசிறந்த கிரிக்கெட் வீரராகத் திகழ்வார் என்கிற எதிர்வுகூறலைச் செய்கிறார். அணியின் தலைவர் பிரெண்டன் மெக்கலம் 2010ஆம் ஆண்டு நியூசிலாந்து கிரிக்கெட் அணிக்குள் நுழைந்த கேன் வில்லியம்சன் தொடர்ச்சியாகத் தன் திறமையை வெளிப்படுத்திக் கொண்டே வந்திருக்கிறார்.

இதுவரையில் 39 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள இவர் 3000 ஓட்டங்களுக்கு மேல் பெற்றுள்ளார். 66 ஒரு நாள் போட்டிகளில் விளையாடியுள்ள இவர் 2509 ஓட்டங்களைக் குவித்துள்ளதோடு அதிகூடிய ஓட்டங்களாக ஆட்டம் இழக்காது பெற்ற 145 ஓட்டங்களையும் தன்னகத்தே வைத்துள்ளார். நியூசிலாந்தைப் பொறுத்தவரை முன்னாள் அணித்தலைவர் ஸ்ரீபன் பிளெமிங், டெஸ்ட் போட்டிகளில் 7172 ஓட்டங்கள், மற்றும் ஒருநாள் போட்டிகளில் 8007 பெற்று இன்றுவரை நிலையில் இருக்கிறார். இந்த வருட உலகக் கிண்ணப் போட்டிகளின் முதல் ஆட்டத்தில் இலங்கைக்கு எதிராக விரைவாக 57 ஓட்டங்களை கேன் வில்லியம்சன் பெற்றதைத் தொடர்ந்தே மெக்கலம் இவர் பற்றிய கருத்துக்களை முன்வைத்துள்ளார். இவர் மேலும் கூறும்போது இந்திய கிரிக்கெட் வீரர் விராட் ஹோலியுடன் இவரை ஒப்பிட்டுப் பேசுகின்றார்.

இந்திய சுப்பர் ஸ்ரார் ஹோலி போலவே வில்லியன்சனும் விளையாடுகிறார். இற்றை வரைக்குமே ஹோஹ்லியின் துடுப்பாட்டச் சராசரிகள் மிகவும் திறமையானவை. இவரைப் போலவே திறமைகளை வெளிப்படுத்திவருகிறார் வில்லியம்சன். இந்தவகையில் நியூசிலாந்து அணியின் எதிர்கால சுப்பர் ஸ்ராராக வில்லியம்சன் வருவார் என்று மெக்கலம் எதிர்பார்ப்பது தெரிகிறது.

# மகிழ்ச்சி இல்லை



**2011** உலகக் கிண்ணப் போட்டிகளில் கிண்ணம் வெல்லும் வாய்ப்பை இழந்த நிலையில் அந்த அணியின் தலைவர் எவ்வித துக்கமும் இன்றி தனது காதலியை (பெண்தோழியை) சந்திக்க நேராக அயர்லாந்து சென்றது பெருத்த அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தது. இருந்தாலும் அந்தப் பெண்மணியையே திருமணம் செய்துகொண்டு குடும்ப வாழ்வில் சிறந்தது மனமகிழ்ச்சியாகவும் இருந்தது.

ஆனால் இந்த உலகக் கிண்ணப் போட்டிகள் நடைபெறும்வேளை வெளிவரும் செய்திகள் மகிழ்ச்சியாக இல்லை. அதாவது இருவரும் பிரியத் தீர்மானித்துவிட்டார்களாம். இவர்களது சட்டத்தரணி கருத்துக்கூறும் போது, இவர்கள் இருவரும் விவாகரத்து பெற இருப்பதை அறிவிக்கவேண்டிய நிலையில் இருக்கின்றேன். தமக்கும் தமது பிள்ளைகளுக்காகவும் வேண்டி இந்த அந்தரங்க விடயத்தை விளங்கிக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

கிரேம் ஸ்மித் அட்டகாசமான துடுப்பாட்ட வீரர். அணித்தலைவர். 34 வயதாகும் ஸ்மித் தெ.ஆபிரிக்க கிரிக்கெட்டில் ஏற்படுத்திய பதிவுகள் கனதியானவை. இருந்தாலும் 3½ வருடங்களில் தம்பதிகள் பிரிந்தமை மகிழ்ச்சியான ஒன்றல்ல.

# புயல் அல்ல தென்றல்





**உலகக்** கிண்ண இந்திய அணிக்கு யுவராஜ்சிங் வேண்டப்படாமற் போனமை விசித்திரமானதுதான். அவர் அணியில் சேர்க்கப்படாமைக்கு, கிரிக்கெட் தவிர்ந்த வேறு காரணங்களும் இருக்கின்றன என்பது கசப்பான செய்தி. இதில் எந்தளவு உண்மை இருக்கிறதோ தெரியவில்லை. ஆனால் யுவிக்கு ஒரு கதவுமூடினால் மறுகதவு திறந்திருக்கிறது. கடந்த வாரம் நடைபெற்ற இவ்வருடத்துக்கான ஐ.பி.எல் ஏலத்தில் அதிகூடிய முதன்மைத் தொகையான இந்திய ரூபாய்கள் பதினாறு கோடிக்கு யுவராஜ், டெல்கி டெயார் டெவில்ஸ் அணியில் வாங்கப்பட்டுள்ளார்.

கடந்த வருடம் ஏலத்தில் அதிகூடிய தொகைக்கு வாங்கப்பட்டவர் யுவிதான் என்பது எல்லோரும் அறிந்த விடயம். இதேவேளை இலங்கை அணித்தலைவர் ஏஞ்சலோ மெத்தியூஸ் ஏழரைக் கோடி இந்திய ரூபாய்களுக்கு டெல்கி டெயார் டெவில்சால் வாங்கப்பட்டுள்ளார். இதனை அடுத்த தினேஸ்கார் றோயல் செலன்ஜர்ஸ் பெங்களூர் அணியால் பத்தரைக் கோடி ரூபாவிற்கு வாங்கப்பட்டுள்ளார்.

இருந்தாலும் குமார் சங்கக்காரா, மஹேல ஜயவர்த்தன, டில்சான், ஹஸிம் அம்லா போன்ற வீரர்கள் கண்டுகொள்ளப்படவில்லை என்பது சிறிது மனவருத்தத்திற்குரிய செய்திதான். மொத்தம் 45 வீரர்கள் 8 அணிகளால் ஏலத்தில் வாங்கப்பட்டுள்ளார்கள். எனினும் இந்த ஐ.பி.எல். ஏலத்தில் பேசுபொருளாகிப் போனவர் யுவராஜ் சிங்தான். கடந்த 2011இல் உலகக் கிண்ணத்தை வென்றபோது யுவி ஆட்டத்தொடர் நாயகன். பின்னாளில் ஓட்டக்குவிப்பு சிறிது குறைந்தாலும்கூட உலகக் கிண்ண அணி வீரர்கள் தெரிவுசெய்யப்படும் தறுவாயில் இரண்டு, மூன்று சதங்களுடன் எல்லோருடைய பார்வையையும் தன்பக்கம் திருப்பினார்.

இருந்தாலும் உலகக் கிண்ண அணியில் ஒரு இடம்பிடித்துக் கொள்ள அவரால் முடியாமல் போனமை பல்வேறு தரப்பார் மத்தியிலும் பெரும் விசனத்தையும் கவலையையும் ஏற்படுத்தி இருந்தது. இருந்தாலும் யுவியின் திறமைக்கான அங்கீகாரம் வேறு வழியில் கிடைத்துவிட்டது. சிலவேளைகளில் எதிர்வரும் மாதங்களில் யுவராஜ்சிங் பற்றி பல கருத்துக்கள் மிகச் சாதகமாக வெளிவரக்கூடும்.




**பெண்கள் பக்கத்திற்குரிய தரமான ஆக்கங்கள் வாசகர்களிடமிருந்து வரவேற்கப் படுகின்றன.**

# கழுத்தில் தாலி
## பெண்களுக்கு ஏற்படும் முதல் பயம்

நம் வாழ்க்கையை வேறு ஒரு நிலைக்கு எடுத்துச் செல்லும் பொறுப்பு திருமணத்திற்கும் உள்ளது. திருமணம் என்றாலே ஆண் மற்றும் பெண்ணின் வாழ்க்கையில் பல மாற்றங்கள் ஏற்படும். குறிப்பாக பெண்களில் வாழ்க்கையில், சந்தோசம், பதற்றம், படபடப்பு, குதூகலம், கொண்டாட்டம் என பல உணர்வுகளை அள்ளிக் கொடுப்பதுதான் திருமணம்.

பெண்ணின் வாழ்க்கையில் திருமணம் ஏகப்பட்ட மாற்றங்களை கொண்டுவரும். புதிதாக திருமணமான ஒரு பெண்ணின் மனதில் பல எண்ணங்கள் ஓடும். நீங்கள் விரைவில் திருமணம் செய்துகொள்ள போகும் பெண்ணா? அப்படியானால் திருமணம் முடிந்த கையோடு உங்கள் மனதில் எழும் பல விஷயங்களை பற்றி இப்போது பார்க்கலாம்.

• நீங்கள் உங்கள் வீட்டில் காலையில் தாமதமாக எழுந்து கொள்ப வராக இருக்கலாம். காலையில் தாமதமாக எழுந்து உங்கள் மாமனார் மாமியாரிடம் கண்டிப்பாக கெட்டபெயரை வாங்க நீங்கள் விரும்பமாட்டீர்கள். அதனால் நீங்கள்தான் கடைசியாக எழுந்துள்ளீர்கள் என்ற எண்ணமே உங்களை சில நிமிடங்களுக்கு நடுங்க வைத்துவிடும்.

• புகுந்த வீட்டில் எந்த மாதிரி ஆடை அணிவது என்ற எண்ணம் உங்களிடம் நிலவும். ஒவ்வொரு முறை நீங்கள் ஒரு ஆடையை எடுக்கும் போதும் ஏதாவது கேள்விகள் கண்டிப்பாக உங்கள் மனதில் எழும். உதாரணத்திற்கு, "புதிதாக திருமணமானதால் இதை அணிவது சரியாக இருக்குமா?", "நான் சாதாரண ஆடைகளை தேர்ந்தெடுக்கிறேனா?" போன்ற கேள்விகள்.

• முதல் நாள் மாமனார், மாமியாரிடம் நல்ல பெயரை எடுக்கவேண்டும். அவர்களுக்கு என்னை பிடிக்கவேண்டும். நான் சமைத்த உணவுகள் அவர்களுக்கு பிடிக்கவேண்டும்." இப்படியெல்லாம் உங்கள் எண்ணத்தில் ஓடும்தானே!

• மாமியார் நம்மிடம் எவ்வாறு நடந்துகொள்வார். மகளாக நினைப்பாரா? அல்லது மருமகளாக நினைப்பாரா. மாமியாருக்கு பிடித்தபடி எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் என்ற சிந்தனைகள் கழுத்தில் தாலி ஏறிய உடனேவே வரத்தொடங்கிவிடும்.



# வன்புணர்ச்சி என்பது ஒரு தாக்குதலா?

உடலில் ஏற்படும் ஹோர்மோன் மாற்றங்கள் காரணமாக ஒரு ஆண் வன்புணர்ச்சியில் ஈடுபட்டார் என்று கருதுவது முற்றிலும் தவறு. தெரு வில் இருக்கும் ஒரு மனிதன் ஒரு பெண்ணை திடுமென வன்புணர்ச்சி செய்துவிடுவதில்லை.

அப்படி செய்வது தவறு என்ற எண்ணம் இருப்பதால்தான் இத்தகைய செயல்கள் மறைவாக, யார் கண்ணிலும் படாமல் செய்யப்படுகின்றன. பாலியல் வன்புணர்ச்சி என்பது ஒரு பாலியல் இச்சை தொடர்பான செயற்பாடு கிடையாது. வன்புணர்ச்சி என்பது ஒரு தாக்குதல். வெற்றி என்பது இதன் நோக்கமாக இருக்கிறது.

சக்தியைக் கொண்டு ஒரு பொருளை அபகரிக்க நடக்கும் நடவடிக்கை. இங்கு பெண் பொருளாக கருதப்படுகிறாள். ஒரு சிலர் இந்த செயலில் இன்பமடையலாம். வன்புணர்ச்சி என்பது மிகமோசமான குற்றமாகக் கருதப்படுகிறது. இருந்தும் ஆண்கள், வேறு பல தாக்குதல்களையும் செய்கின்றனர். மனரீதியான வன்முறைகள், உடல்ரீதியான வன்முறைகள், பொருளாதார வன்முறைகள், பெண்கள் உரிமைகள் புறக்கணிக்கப்படுவது போன்ற விடயங்கள் சாதாரணமான விடயங்களாக சமூகத்தால் ஏற்கப்படும்போது பாலியல் வல்லுறவுகள் நடக்கின்றன.

திருமணத்துக்கு முன் உடலுறவு கூடாது. பாலியல் விஷயத்தை மறைவாகத்தான் பேசவேண்டும் போன்ற கருத்துக்கள் நிலவும் சமூகங்களில் பாலியல் தாக்குதல்கள் மிகவும் குறைந்த அளவில்தான் பதிவுசெய்யப்படுகின்றன. இந்த விடயங்களை பாலியல் தாக்குதலில் ஈடுபடும் நபர்களும் சாதகமாக பயன்படுத்திக் கொள்கின்றனர்.

இதை வைத்து பாதிக்கப்பட்ட பெண்ணை மிரட்டுகின்றனர். அப்பெண்ணை மேலும் மேலும் பயன்படுத்திக் கொள்ளும் நோக்கில், நடந்த விடயத்தை நண்பர்களிடமும் மற்றவர்களிடமும் சொல்லிவிடப் போவதாக மிரட்டலாம். வன்புணர்ச்சிக்கு உள்ளான பெண் சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன், உளவியல் ரீதியான மற்றும் சமூகரீதியான உதவிகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

நடந்த சம்பவம் குறித்து நம்பிக்கை மிக்க நண்பர்கள் மற்றும் உறவினர்களிடம் பேசலாம். அமைதியாக இருப்பதன்மூலம் பாலியல் தாக்குதல் சம்பவம் ஏற்படுத்திய பாதிப்புகளில் இருந்து மீண்டுவிட முடியாது. சிலநேரங்களில், பாலியல் தாக்குதல்கள் காரணமாக உடல்ரீதியான உபாதைகள் ஏற்படலாம்.

உடல் உறவால் பரவும் நோய்களும், கர்ப்பம் தரிப்பதும் ஏற்படலாம். எனவே பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட பெண் விரைவில் மருத்துவரைப் பார்த்து அடுத்தகட்ட நடவடிக்கைகள் என்ன என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டும்.



## சிறந்த பேஷ் வோஷ் எது?



பலர் முகம் கழுவுகிறேன் என்று ஏனோதானோவென்று கண்ட கண்ட பேஷ் வோஷ் பயன்படுத்தி கழுவுவார்கள். முகம் கழுவும்போது அதிக கவனம் எடுத்துக் கொள்ளவேண்டும். முக்கியமாக பெண்கள் கவனமாக இருக்கவேண்டும்.

ஏனெனில், ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வகையான சருமம் என்பதால், ஒவ்வொருவரும் தங்களின் சருமத்திற்கு ஏற்றதை தேர்ந்தெடுக்கவேண்டும்.

குளிர்காலத்தில் தினமும் 2 முறை பேஷ் வோஷ் பயன்படுத்தியும், அதுவே கோடைக்காலமாக இருந்தால் மூன்று முறையும் பேஷ் வோஷை பயன்படுத்தி முகத்தை கழுவவேண்டும். முக்கியமாக கழுவியபின் மாய்ஸ்சுரைசர் பயன்படுத்தவேண்டும்.

மேலும் பேஷ் வோஷை பயன்படுத்திய உடனே வெயிலில் செல்லக் கூடாது. முகத்தை கடுமையாக தேய்த்து கழுவக்கூடாது. கழுவி முடித்த பின் மென்மையாக முகத்தை துடைக்கவேண்டும்.

## பிரசவ வலி பயத்தை போக்குங்கள்

தாயின் உடல்நலன் எவ்வளவு முக்கியமோ மனநலனும் அவ்வளவு முக்கியம் சுகப்பிரசவத்துக்கு. இன்றைய காலகட்டத்தில் சுகப்பிரசவத்துக்கு மிகப்பெரிய எதிரி பெண்களுக்குப் பிரசவ வலி மீது உருவாகி இருக்கும் பயம்.

இந்தப் பயத்தை எதிர்கொள்வதற்கு தாயும் தன்னளவில் தயாராகவேண்டும். குடும்ப உறுப்பினர்களும் தாயைத் தயாராக்க வேண்டும். "இது ஒரு பிரச்சினையே இல்லை. உனக்கு எதுவென்றாலும் உதவ நாங்கள் எல்லோரும் இருக்கிறோம்" என்று ஒவ்வொரு கட்டத்திலும் தாய்க்கு நம்பிக்கை அளிக்க குடும்பத்தினர் தவறக்கூடாது.

தாயின் மனநிலையை எப்போதும் சந்தோசமாக வைத்துக்கொள்ள வேண்டும். தாயும் நல்ல உணவைப் போலவே நல்ல இசை, நல்ல புத்தகங்கள் என மனதை இதமாக வைத்துக் கொள்ளும் விஷயங்களில் கவனம் செலுத்த வேண்டும்.



கூடுமானவரை தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைத் தவிர்த்தல் நலம்.

தியானம் மனதை ஒருமுகப்படுத்த உதவுவதோடு தேவையில்லாத பயம் - கவலைகளை நீக்கி பிரசவத்தைத் தன்னம்பிக்கையோடு எதிர்கொள்ள உதவும்.

## கண்களுக்கு கீழே கருவளையமா?

1. கண் கருவளையம் நீங்க சந்தனக் கல்லில் சாதிக்காயை அரைத்து பூசிவந்தால் கருவளையம் விரைவில் மறையும்.

2. நந்தியாவட்டை பூவை நீரில் கழுவி வெள்ளைத் துணியில் சுற்றி கண்களின் மேல் வைத்து கட்டிவர கண்கள் பிரகாசமாகும்.

3. வெண்ணெயுடன் கொத்தமல்லி சாற்றைக் கலந்து கண்களுக்கு பேக் போட கண்கள் கருவளையம் நீங்கி பிரகாசமாக இருக்கும்.

4. வெள்ளரிக்காயை அரைத்தோ அல்லது வட்டமாக நறுக்கியோ கண் களின் மீதும் கண்களைச்சுற்றியும் பேக் போட்டுவர கண்ணிற்கு குளிர்ச்சியைத் தரும்.

5. கண்கள் பளபளப்பாகவும் பொலி வுடனும் இருக்க தினமும் இரவில் கண் இமைகளில் விளக்கெண்ணெயை ஒன்று அல்லது இரண்டு சொட்டுகள் விட்டுவர வேண்டும்.

6. உடல் சூட்டினால் ஏற்படும் கண் எரிச்சல் மற்றும் கண் சிவப்பு இவற்றிற்கு கருஞ்சீரகம் 100 கிராம் நல்லெண்ணெயை கண்ணின் மேலும், கண்ணைச் சுற்றியும் தேய்த்து கழுவி-னால் கண் எரிச்சலும் சிவப்பும் மாறும்.

7. தினமும் காலையில் எழுந்தவுடன் உள்ளங்கைகளைக் கொண்டு கண்களை மூடிக்கொண்டு கண்களை இடது வலதாக மேலும் கீழுமாக சுற்றவேண்டும், இவ்வாறு 5-6 முறை செய்யவும்.

**250/= பரிசு வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**

**பரிசுப் போட்டி இல :-460**

**கேள்வி:** பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளில் மிகமோசமான குற்றம் எது?

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- 09 .03. 2015

விடையை கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பிவைக்கவும். அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 460
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167,
யாழ்ப்பாணம்.

பரிசுப் போட்டி இல :- 458 இற்கான விடை :- மண்டை ஓட்டில் நன்கு பதியும்படி சீவவேண்டும்.

பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி :-
ப.அபிராமி,
லோட்டஸ் றோட், லைமன் வீதி,
மானிப்பாய்.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

460

பெயர் : ..............................
முகவரி : ..............................
..............................
தே.அ. அட்டை இல : ..............................
விடை : ..............................
..............................
கையொப்பம் : ..............................

> **த**மிழ்த் தேசியக் கூட்டமைப்போ, எடுத்தோம், தொடுத்தோம், வீழ்த்தினோம் என்றரீதியில் செயற்படக்கூடிய அதிரடி அரசியலை இப்பொழுது நடத்த முடியாது. விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடன் கூடிய நெகிழ்வுத் தன்மையால் பெரிதாக நன்மையேதும் பெறமுடியாது என்றநிலை தோன்றினால் மட்டுமே அவர்கள் வேறு வழிகளை நாடமுடியுமே தவிர அதற்கு இது தருணமும் அல்ல என்பதே அரசியல் அவதானிகளின் கருத்தாகும். இதிலிருந்து வேறுபாடான கருத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இயங்க முயலுமாயின் இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகளின் அழுத்தம்கூட கூட்டமைப்பின்மீது பிரயோகிக்கப்பட இடமுண்டு.



# கூட்டமைப்பின் இன்றைய நிலையும் விமர்சனங்களும்!

கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் கூட்டமைப்பின் கடைசி நிமிடம் வரையிலான மௌனமும் இறுதிநேர முடிவும் சுயநிர்ப்பந்தத்தின் பாற்பட்டது என்பது யாவருமறிந்ததே. புலிகளின் காலத்தில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் அதன் தலைவர் பிரபாகரன் எடுத்த முடிவு அபத்தமானது என்பது பலரின் ஆதங்கமாக இருந்தது. இதை மனதில்கொண்டும், புதியதொரு மாற்றம் வேண்டியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்த முடிவானது சரியானதும் தவிர்க்க முடியாததுமாகும் என்பது நிதர்சனம்.

இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த அரசாங்கத்தின் ஓர் அங்கம் அல்ல. ஆனால் அரசாங்கத்துடனான இணக்கப்பாட்டு அரசியலை அது நடத்துகிறது. இதில் அரசியல் சாணக்கியம் இருக்கலாம். இந்த அடிப்படையிலேயே கடந்த சுதந்திர தின விழாவிலே கூட்டமைப்புத் தலைவர்களான இரா.சம்பந்தனும், சுமந்திரனும் கலந்துகொண்டிருக்கவும் கூடும்.

மேடையில் இவர்கள் அமர்ந்திருந்ததை சிங்களத் தொலைக்காட்சிகள் தலைப்புச் செய்திகளில் காட்டின. இதேவேளை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அரசுடனான அணுகுமுறையை விமர்சிப்பவர்களும் இருக்கிறார்கள். மாகாண சபை உறுப்பினர்களான சிவாஜிலிங்கமும் அனந்தி சசிதரனும் இவர்களில் முக்கியமானவர்கள்.

இந்த விடயத்தில் புலம்பெயர் தமிழர்கள் மதில் மேல் பூனை நிலையில் இன்றும் இருப்பதை நாம் உணரலாம். ஏனெனில் முப்பது வருட கோர யுத்தத்தின் விளைவுகளும் இறுதிக்கட்டப் போரில் முள்ளிவாய்க்கால் இழப்புக்களும் இவர்களைச் சட்டென ஒரு தீர்மானத்துக்கு வர முடியாதபடி செய்திருக்கலாம். ஆனால் வடகிழக்கு மக்களின் சுயநிர்ணய உரிமைகள் அங்கீகரிக்கப்பட்டு அவர்களின் வாழ்வாதாரம் மேம்படும் வகையில் ஜனாதிபதி மைத்திரிபால அரசாங்கம் எதையாவது செய்யலாம் என்ற எதிர்பார்ப்பும் இவர்களிடம் இருப்பது என்னவோ உண்மைதான்.

தற்போது அரசில் அங்கம் வகிக்கும் ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தற்போதைய போக்கில் ஒரு மாற்றத்தினை அவதானிக்க முடிகிறது. தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்று அத்துரலிய ரத்ன தேரரும், இராணுவம் தேவைக்கதிகமாக கையகப்படுத்தி வைத்துள்ள தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களை மீளவும் அவர்களிடம் கையளிக்கப்பட வேண்டும் என்று அமைச்சர் பாட்டலி சம்பிக்கவும் பேசுமளவுக்கு அக்கட்சியின் நிலைப்பாடு மாறியுள்ளது. தமிழ் மக்களைப் பொறுத்தவரை தேசிய அரசியலில் இதுவொரு சாதகமான அம்சம்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க, விஜித்த ஹேரத் போன்றோர் விசாரணைகளின்றி சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை உள்ளிட்ட பல பிரச்சினைகளில் தமிழ் மக்களுக்காக குரல் கொடுப்பது ஆரோக்கியமான சங்கதி. இன்வாதம் பேசி அரசியல் செய்ய விழையும் தெற்கு அரசியல்வாதிகளுக்கு ஜாதிக ஹெல உறுமய, மக்கள் விடுதலை முன்னணியின் தற்போதைய போக்கானது ஜீரணிக்கமுடியாத விடயமாக இருக்கும்.

நூறுநாள் திட்டங்களை நிறைவேற்றுவதில் இருக்கும் சங்கடங்களை ஆட்சிக்கு வருவதற்கு முன்னரே புரிந்துகொண்டிருந்தார்களோ தெரியாது. ஆயினும் சளைக்காத ஒரு முனைப்பில் அரசாங்கம் இயங்குவதாகவே தெரிகிறது. குறிப்பாக நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க அத்தியாவசிய உணவுப் பொருட்கள், எரிவாயுப் பொருட்களின் விலைகளைக் குறைத்ததன்மூலம் மக்களுக்கு ஆறுதலான ஒரு நிவாரணத்தை வழங்கியுள்ளார்.

இதேவேளை வடக்கு, கிழக்கு மக்களின் மீள்குடியேற்றம், காணிப் பிரச்சினை, சிவில் நிர்வாகம் ஏற்படுத்தல், இராணுவ செறிவினை அகற்றுதல் அல்லது குறைத்தல் போன்ற பிரச்சினைகளை கொள்கையளவில் ஏற்றுக்கொண்டுள்ளது அரசாங்கம். இதன் அடிப்படையிலேயே ஆட்சிக்குவந்த வேகத்திலேயே கூட்டமைப்பின் கோரிக்கையை ஏற்று வட மாகாண ஆளுநரை மாற்றியது. மாகாணசபை செயலாளரையும் மாற்றி திரு.பத்திநாதனை நியமித்தது. இவைகள் நம்பிக்கைகளுக்கான அடையாளங்கள் மட்டுமே. இதைவிட அவசியமானதும் அவசரமானதும் நடவடிக்கைகளுக்கான தேவைகள் இருக்கவே செய்கின்றன.

ஆனால் இவற்றுள் எதையாவது உடனடியாகச் செய்யப்போய் அது தெற்கில் இருக்கும் இனவாதச் சக்திகளுக்கு தீனிபோடும் சமாச்சாரமாக ஆகிவிட்டால் அது தமது இருப்புக்கே ஆப்பு வைத்துவிடும் என்ற அச்சம் அரசாங்கத்துக்கு இருக்கவே செய்யும். இந்த ஆட்சியைத் தக்கவைக்க வேண்டுமானால் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவு தேவை. தமிழ், முஸ்லிம் மக்களை அனுசரித்துப்போகும் போக்கும், நீதியான ஆட்சிக்கான கட்டமைப்பு என்ற நம்பிக்கையும் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் மனங்களில் பதியவைக்க வேண்டியது இவர்களைப் பொறுத்தவரை அவசியமானது. இதனடிப்படையிலேயே வட மாகாண முதலமைச்சர் சி.விக்னேஸ்வரனின் காரசாரமான விமர்சனத்தைக்கூட அரசாங்கம் பெரிதுபடுத்தாமல் இருந்துவருகிறது. மாகாண சபை உறுப்பினர் மனோகணேசன் வழக்கம்போலவே துணிச்சலாக தமது கண்டனத்தைத் தெரிவித்திருந்தார்.

வடமாகாண முதலமைச்சர் பேச்சில் அவ்வப்போது முரண்கள் காணப்படுவது வழமை என்பதால் பலரும் இதுபற்றி அலட்டிக்கொள்ளாமல் இருந்திருக்கலாம். ஆனால் சிவாஜிலிங்கம் போன்றோருக்கு இவரது பேச்சு ஆறுதலாக இருக்கும். சிவாஜிலிங்கமோ, அனந்தி சசிதரனோ தமிழ்பேசும் மக்களின் அபிலாஷைகளுக்கு எதிரானவர்கள் அல்ல. கடந்த காலங்களில் பெற்றுக்கொண்ட அனுபவங்களே அவர்களை இப்படி பேசவைக்கிறது. ஆனால் ஒரு விடயம் இங்கு முக்கியமானது. இவர்களின் விமர்சனங்கள் விளைவுகள் இன்றியே அடங்கிப்போகலாம். வடமாகாண முதலமைச்சரின் கருத்துக்கள் அப்படி போய்விடாது. அவை எதிர்க் கருத்தியல்களை உற்பவிக்கும்.

தோல்வி கண்ட மகிந்த ராஜபக்ஷவும் அவரது குடும்பத்தினரும் மீண்டுமொரு சந்தர்ப்பத்துக்காக தயாராகிவருவதை அவர்களின் முனைப்புகள் உணர்த்துகின்றன. அரசியலில் இது புதிய விடயமல்ல. அவர்களுக்கு அந்த உரிமை இருக்கிறது. எனவேதான் மைத்திரிபால சிறிசேன மிக மிக நிதானமாக நகர்வுகளை மேற்கொள்ள வேண்டியவராக இருக்கிறார். ஏனெனில் மகிந்த தேர்தலில் போட்டியிட முன்வந்தால் அதற்கு அங்கீகாரம் தரவேண்டிய கட்சித் தலைமையில் மைத்திரிபால இருக்கிறார். உண்மையில் வரப்போகும் பொதுத் தேர்தல் கட்சிகளுக்கு மட்டுமின்றி பொது மக்களுக்கும் குழப்பமானதாகவே இருக்கப் போகிறது. அத்தோடு இனவாதமே பிரதான பிரசார தொனிப்பொருளாகவும் அமைந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.


தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ, எடுத்தோம், தொடுத்தோம், வீழ்த்தினோம் என்ற ரீதியில் செயற்படக்கூடிய அதிரடி அரசியலை இப்பொழுது நடத்தமுடியாது. விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடன்கூடிய நெகிழ்வுத்தன்மையால் பெரிதாக நன்மையேதும் பெறமுடியாது என்றநிலை தோன்றினால் மட்டுமே அவர்கள் வேறு வழிகளை நாடமுடியுமே தவிர அதற்கு இது தருணமும் அல்ல என்பதே அரசியல் அவதானிகளின் கருத்தாகும். இதிலிருந்து வேறுபாடான கருத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இயங்க முயலுமாயின் இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகளின் அழுத்தம்கூட கூட்டமைப்பின்மீது பிரயோகிக்கப்பட இடமுண்டு.

எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தற்போது கடைப்பிடித்து வரும் பொறுமை, நிதானம், நெகிழ்வு தன்மை இன்னும் சில காலத்துக்குத் தொடரவேண்டியது அவசியம். ○

# இனவாத அரசியலை கிழக்கிலிருந்து அகற்ற அறைகூவல்

— ஏ.எச்.ஏ. ஹுஸைன் —

**கிழக்கு மாகாணம் பிரிவது தீர்வல்ல. வடக்கையும் கிழக்கையும் பிரிக்குமாறு அஸ்ரப் சொல்லவில்லை. நானும் அதைத்தான் இன்றளவும் பகிரங்கமாகச் சொல்கின்றேன். முஸ்லிம் சமூகத்துக்கு எதிராக ஒரு சிங்கள வரைக் கொண்டுவருவது, தமிழ் சமூகத்திற்கு எதிராக ஒரு சிங்களவரைக் கொண்டு வந்து ஆள நினைப்பது இப்படியான போக்குகளுக்கு இனி மேலும் இடமளித்து யாரும் இழிந்த அரசியல் செய்ய முற்படவேண்டாம் என்று நான் வினயமாகக் கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு நடந்தால் அது ஒரு தவறான முன்மாதிரியாகத்தான் இருக்கும்.**



இனவாத அரசியலைப் பற்றி நான் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் எச்சரித்தேன். பொதுபலசேனா மற்றும் கடும்போக்கு வாத அமைப்புக்களுக்கு அனுசரணை வழங்கிவருவது சிறுபான்மைச் சமூகங் களினது வெறுப்பை மட்டுமல்ல, நேர்மையான சிங்கள மக்களின் வெறுப்பையும் நீங்கள் சம்பாதித்து அதன் விளைவுகளைச் சந்திக்க வேண்டிவரும் என்று கூறினேன் என முன்னாள் உற்பத்தித் திறன் ஊக்குவிப்பு அமைச்சர் பஷீர் சேகுதாவூத் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூரில் ரூபி முஹைதீன் மாதிரிக் கிராம வீட்டுத் திட்டம் ஞாயிறன்று மாலை வைபவரீதியாக மக்களிடம் கையளிக்கப்பட்ட நிகழ்வில் முன்னாள் வீடமைப்பு பிரதியமைச்சரும், முன்னாள் உற்பத்தித் திறன் ஊக்குவிப்பு அமைச்சருமாக இருந்த பஷீர் சேகுதாவூத் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றினார்.

தமிழ், முஸ்லிம் அரசியல்வாதிகள் கிழக்கு மாகாணத்தில் முதலமைச்சர் என்கின்ற பதவியை வைத்துக்கொண்டு கீரியும் பாம்பும் போல அரசியல் செய்யும் நிலைமைகளைத் தவிர்க்க வேண்டும்.

இது எங்கே போய் முடியும்? இந்த ஒரு அற்பப் பதவிக்காகவா இந்தப் போராட்டம்.?

இனப்பிரச்சினைத் தீர்விலே வடக்கு, கிழக்குப் பிரிப்பு தீர்வுக்கான முன்மாதிரியல்ல என்று நாங்கள் நம்புகின்ற விடயம் இருக்கத்தக்கதாக தமிழர் அரசியல் சக்திகளும் முஸ்லிம் அரசியல் சக்திகளும் ஒரு பகுதியை நோக்கி முரண்பட்டுக் கொண்டு கீழ்த் தரமாக விமர்சிப்பதென்பது இந்த இரண்டு சிறுபான்மைச் சமூகங்களின் எதிர்கால அரசியலுக்கும் இருப்புக்கும் எதிரானது என்று நான் அச்சப்படுகின்றேன்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் ஏனைய கட்சிகளும் பாராளுமன்றத் தேர்தலிலே வெற்றியடைந்து மத்தியிலே போய் ஏதாவதொரு பெரும்பான்மை சிங்களக் கட்சிக்கு ஆதரவு தெரிவித்து பதவிகளைப் பெற்றுக் கொள்கின்றன.

ஆனால் தமிழர் தரப்பு அவ்வாறில்லை. அவர்கள் சிங்களக் கட்சிகளோடு சேர்வதுமில்லை, அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக் கொள்வதுமில்லை.

வடக்கு, கிழக்கிலே அரசியல் நடத்துகின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புதிய ஜனாதிபதியைக் கொண்டு வருவதிலே பாரிய பங்களிப்பைச் செய்திருக்கின்றது.

சுதந்திரத்திற்குப் பிற்பட்ட இவ்வளவு காலமும் மத்திய அரசு என்பது சிங்களப் பேரினவாதத்தின் தெரிவு, நிறைவேற்று அதிகார முறைமையிலே எங்களுக்கு உடன்பாடு கிடையாது என்று எதிர்ப்பு அரசியல் மட்டுமே செய்துகொண்டு வடக்கு, கிழக்கு தாயகக் கோட்பாட்டுடன் இருப்பவர்கள் இப்பொழுது மத்திய அரசு எங்களுக்கும் சொந்தமானது. ஜனாதிபதி யைத் தெரிவுசெய்ததில் எங்களது பங்கும் காத்திரமானது என்றிருக்கின்ற சூழ்நிலை வந்திருக்கிறது.

கிழக்கு மாகாணத்திலே தமிழரும் சிங்களவரும் சரிசமமாக வாழுகின்றோம். நாம் எமக்குள் பிளவுபட்டுக் கொண்டு மத்திய அரசில் பெரும்பான்மை சிங்களக் கட்சிகளுடன் சேர்ந்து ஆட்சியமைப்பிற்கு உதவுவதுபோல கிழக்கிலே பெரும்பான்மை யாகவுள்ள இரு சிறுபான்மை இனங்களை யும் மீறி வந்து பெரும்பான்மை சிங்களக் கட்சி ஆட்சியமைத்துவிட தமிழர்களும் முஸ்லிம்களும் இடமளித்துவிடக் கூடாது.

தமிழ்பேசும் மக்களைப் பெரும்பான்மை யாகக் கொண்டதுதான் கிழக்கு மாகாண மண். இந்த மண்ணிலே தமிழ், முஸ்லிம் ஆகிய இரண்டு சமூகங்கள் மத்தியிலே பலவிதமான பிரச்சினைகள் இருக்கின்றன.

ஆனால் முதலமைச்சர் என்கின்ற ஒரு பதவி நிலையை வைத்து நாம் முரண்படுவோமாக இருந்தால் எதிர் காலத்தில் கிழக்கில் வாழப்போகின்ற தமிழ், முஸ்லிம் சந்ததிக்கு நாம் துரோகமிழைத்தவர்களாக ஆகிவிடுவோம்.

இது பற்றி நாம் சுயநல அரசியலுக்கு அப்பால் விழிப்புணர்வுடன் நின்று நிதானித்துச் சிந்திக்கவேண்டும்.

வடக்கு, கிழக்கு மாகாணத்திலே எதிர்காலத்தில் ஒரு தீர்வுவருகின்ற பொழுது இந்த மாகாணத்துக்கு முஸ்லிம்கள் சொந்தக்காரர்கள் அல்ல என்ற நிரூபணத்துக்கு தமிழர் தரப்பு வந்துவிடவும் கூடாது என்ற தூரநோக்கு எல்லோருக்கும் இருக்கவேண்டும்.

நம்முடைய கெண்டைக் காலுக்குக் கீழே மட்டும் நோக்காது பல மைல்களுக்கப்பால் பல பிரதேசங்களுக்கு அப்பால் பல ஆண்டுகளுக்கப்பால் பல இன மொழி மத வேறுபாடுகளைக் கடந்து நாம் சிந்திக்கவேண்டும். அதுதான் உண்மையான, மனிதர்களை நேசிக்கின்ற அரசியலாக நீடித்து நிற்கும். அற்பத் தனமான பதவிகளுக்கு அடிமைப்படுகின்ற அரசியல் அழிந்துபோகும்.

• கிழக்கு முதலமைச்சர் பதவி என்பது தமிழருக்கும் முஸ்லிமுக்கும் சொந்த மானது என்பதை நான் பகிரங்கமாகக் கூறுகின்றேன்.

எனது 34 வருடகால அரசியல் வரலாற்றிலே இனவாதமோ, பிரதேச வாதமோ பேசியது கிடையாது.

யாழ்ப்பாணத்தான், மட்டக்களப்பான், மலையகத்தான், தமிழன், முஸ்லிம் சிங்களவன் என்று இழித்துரைக்கவில்லை.

என் அரசியல் நாகரிகமானது. மூன்றாந்தர இழிநிலை அரசியலுக்கு என்னை நம்பிய சமூகத்தை நான் இட்டுச் செல்லவில்லை.

கிழக்கு மாகாணம் பிரிவது தீர்வல்ல. வடக்கையும் கிழக்கையும் பிரிக்குமாறு அஷ்ரப் சொல்லவில்லை. நானும் அதைத்தான் இன்றளவும் பகிரங்கமாகச் சொல்கின்றேன்.

முஸ்லிம் சமூகத்துக்கு எதிராக ஒரு சிங்களவரைக் கொண்டுவருவது, தமிழ் சமூகத்திற்கு எதிராக ஒரு சிங்களவரைக் கொண்டு வந்து ஆள நினைப்பது இப்படியான போக்குகளுக்கு இனிமேலும் இடமளித்து யாரும் இழிந்த அரசியல் செய்ய முற்படவேண்டாம் என்று நான் வினயமாகக் கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு நடந்தால் அது ஒரு தவறான முன்மாதிரியாகத்தான் இருக்கும்.

அரசியல் சூழ்நிலை மாற்றத்தின் முக்கியமான ஒரு காலகட்டத்திலேதான் நாம் தற்பொழுது இருந்துகொண்டு இருக்கின்றோம். பஷீர் சேகுதாவூத் தமிழர், முஸ்லிம்கள், சிங்களவர் என்ற இன அடிப்படையிலான அரசியலை ஒரு போதும் செய்ததில்லை.

இனவேறுபாடுகளுக்கு அப்பால், மனுக்குல அரசியலில் மானுடத்தை நிமிர்த்துகிற அரசியலில் தலைநிமிர்ந்து நிற்கிற அரசியலில், ஒரு கணிசமான பங்களிப்பைச் செய்துகொண்டிருப்பேன் என்பதில் பெருமைப்படுகின்றேன்.

இனவாதம், பிரதேசவாதம் கடந்தது தான் வெற்றியளிக்கும் அரசியல் என்கிற வரலாற்றைச் சாதித்துக் காட்டவேண்டும் என்று கங்கணம் கட்டி நிற்பவன்தான் நான்.

இனவாதம் ஊட்டி, பிரதேச வாதம் காட்டி சமூகங்களை ஊர் ஊராகப் பிரிக்கின்ற உதவாக்கரை அரசியலைச் செய்தவனல்ல என்ற முன்னுதாரணமாய் திகழ்வதிலும், யாருக்கும் சோரம்போகாத துரோக அரசியல் செய்து பிழைப்பு நடத்தியவனல்ல என்கின்ற செய்தியையும் நாட்டுக்குச் சொல்லி வைக்க விளைகின்றேன்.

முஸ்லிம்களின் தேசிய அரசியலை அழிக்க முற்படாமலும் தனிப்பட்ட அரசியல் ஒழுக்கக் கேடுகளுக்கும் உட்படாமலும் உட்கட்சிப் பூசல் களுக்கு இடங்கொடாமலும் உன்னத அரசியலுக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்து கொண்டிருப்பதில் பெருமைப் படுகின்றேன். எதிர்க்கட்சியிலே இருந்து எதுவும் செய்யமுடியாது என்பது மக்களின் ஆதங்கமாக இருக்கின்றது.

சிறுபான்மையினரின் அரசியலைக் கையாள்வதில் நான் எப்பொழுதும் மிக நிதானமாகவும் அவதானமாகவும் இருந்து வந்திருக்கின்றேன்.

அதில் ஒரு பாகம்தான் கடந்த ஜனாதிபதித் தேர்தல் கடைசித் தறுவாயிலே நான் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எழுதிய கடிதம். இந்த விவகாரம் எல்லா ஊடகங்களிலும் சமூகங்களின் மத்தியிலும் சிலாகித்துப் பேசப்பட்டது.

சிறுபான்மை இனங்களைக் காப்பாற்றுகிற சாணக்கியமும் வியூகமும் என் கடிதத்தில் உள்ளடக்கமாக இருந்தது இதனை அப்போது யாரும் கண்டு கொள்ளவில்லை.

நான் தனிநபர் விசுவாச அரசியல் செய்து பழக்கப்பட்டவனல்ல. நான் மனுக்குலத்தின் விசுவாசியாக இருப்பதில் தான் பெருமைப்படுகின்றேன்.

சிறுபான்மைச் சமூகங்களைக் காப்பாற்றுகின்ற கருத்துக்களை நேரடியாகவும் வெளிப்படையாகவும் சொல்வதில் நான் என்றுமே பின்நின்றதில்லை.

எனது சொந்த அரசியலைக் காப்பாற்ற வேண்டுமென்பதற்காக ஜனரஞ்சகமான கருத்துக்களை நான் ஒருபோதும் சொல்லி ஏமாற்றியதும் கிடையாது.

நான் யாருக்கும் வங்குரோத்து அரசியல் செய்து சிறுபான்மை இனங்களுக்குத் துன்பம் விளைவிக்க ஒருபோதும் நினைப்பவனல்ல.

எல்லா இனங்களையும் இணைத்து இணக்கப்பாட்டு அரசியலைச் செய்து தனித்துவம் பேணுகின்ற எனது அரசியல் பணி எதிர்காலத்திலும் தொடரும். இதில் எந்த சவாலையும் சாவகாசமாகச் சமாளிக்க நான் தயாராக இருக்கின்றேன்.

# கட்டுப்பாட்டில் இருக்கிறதா நீரிழிவு நோய்!



நீரிழிவு நோயாளிகளில் பெரும்பாலானோர் தங்கள் நோய் கட்டுப்பாட்டில் இருப்பதாக நம்பினாலும், உண்மை நிலை வேறாக இருப்பது ஒரு ஆய்வில் தெரியவந்துள்ளது.

நீரிழிவு பரிசோதனையை வழக்கமாகச் செய்து கொள்ளாமலேயே, நூறு பேரில் 94 பேர் தங்களுடைய இனிப்பின் அளவு கட்டுப்பாட்டில் இருப்பதாக நம்புவதாக அந்த ஆய்வில் கூறியுள்ளனர். உண்மை நிலைமை அப்படி இல்லை. அதனால் நீரிழிவு நோய் தொடர்பில் எல்லோரும் கூடுதல் கவனம் செலுத்தவேண்டியது அவசியம் என்று தெரியவந்துள்ளது.

கட்டுப்படுத்தப்படாத நீரிழிவு நோய் உடலின் முக்கிய உறுப்புகளான இதயம், சிறுநீரகம், கண்கள் மற்றும் நரம்பு மண்டலத்தைப் பாதிக்கக்கூடியது. அத்துடன் நீரிழிவு நோயாளியின் பொருளாதார நிலையையும், வேலைத்திறனையும்கூடப் பாதிக்கும்.

ஒருவர் தனக்கு நீரிழிவு நோய் இருப்பது தெரியவந்த பிறகு, அதைத் தொடர்ந்து கண்காணிக்கவேண்டியது அவசியம். இனிப்பின் அளவை பொறுத்து நீரிழிவு நோயைக் கட்டுப்பாட்டில் வைப்பதற்கு, மருத்துவர்களும் திட்டமிடவேண்டும்.

உடல்நிலை நன்றாக இருக்கிறது என்று உணர்வதாலேயே நீரிழிவின் அளவு கட்டுக்குள் இருப்பதாகப் பெரும்பாலான நோயாளிகள் நம்புகின்றனர். எடைக்குறைவு மற்றும் காயங்கள் சீக்கிரம் ஆறுவதைக் கொண்டு இனிப்பின் அளவு இயல்பாக இருப்பதாக அவர்கள் நினைக்கின்றனர்.

நாட்டில் ஏற்கெனவே 6.50 கோடி நீரிழிவு நோயாளிகள் இருக்கிறார்கள். அத்துடன் நோயின் விளிம்பில் 7.70 கோடி பேர் இருக்கின்றனர் என்ற விவரங்களை வைத்துப் பார்க்கும்போது, மேற்கண்ட கண்டறிதல் முக்கியமானதாகிறது.

சரியான மருந்துகளை உட்கொள்வது, திட்டமிட்ட வாழ்க்கை முறை, முறையான இரத்தச் இனிப்புப் பரிசோதனை மற்றும் உடற்பயிற்சிகளின்மூலம் நீரிழிவைச் சிறப்பாகக் கட்டுக்குள் வைத்திருக்க முடியும்.

சாப்பிடுவதற்கு முன்பு வெறும் வயிற்றில் இனிப்பின் அளவு 70 முதல் 130 வரை இருக்கலாம். சாப்பாட்டுக்குப் பின்னர் இரண்டு மணிநேரத்தில் 180-க்குக் குறைவாக இருக்க வேண்டியது அவசியம்.

# அறிவைப் பெருக்கும் வல்லாரை



இலங்கை சமையலில் சோறு குழம்புடன் சேர்த்து வல்லாரை சாப்பிடப்படுகிறது. அரைக்கப்பட்டுப் பானமாகவும் அருந்தப்படுகிறது. தெற்காசியச் சமையலில் சாலட், பானங்கள் செய்வதற்குப் புகழ்பெற்றது.

இதில் உள்ள ஏசியாடிகோசைட் தோல், கூந்தல், நகங்களைப் புனரமைக்கும். காசநோய்க்கு மருந்து, அறிவு வளர்ச்சிக்கு விருந்து. இதன் இலைகளைக் கீரையாகச் சமைத்து உண்டால் ஞாபகசக்தி அதிகரிக்கும்.

அது மட்டுமல்லாமல் வாய்ப்புண், பேதி, வீக்கம், காய்ச்சல், படை போன்ற பல்வேறு உடல் கோளாறு-களைக் குணப்படுத்த உதவும். இலை, தண்டு, வேர், விதைகள் மருந்தாகப் பயன்படுகின்றன.

வல்லாரை இலைகளைப் பாலுடன் அரைத்துத் தினமும் 2 கிராம் அளவு வெறும் வயிற்றில் குழந்தைகளுக்குக் கொடுத்து வந்தால், ஞாபகச் சக்தி, அறிவாற்றல், நோய் எதிர்ப்புத் திறன் பெருகும்.

வல்லாரை இலை, துளசி இலை, மிளகு, சீரகம் ஆகியவற்றைச் சம அளவில் எடுத்து, மை போல அரைத்து, மிளகு அளவு மாத்திரைகளாகச் செய்து, நிழலில் உலர்த்திப் பத்திரப்படுத்தவேண்டும்.

இது காய்ச்சல், சளி, இருமல், சிறுநீர் கட்டுதல், உடல் சூடு, தோலில் ஏற்படும் அரிப்பு முதலியவற்றுக்கு மருந்தாகப் பயன்படுகிறது.

# சீரகத்தின்
## மருத்துவ குணங்கள்



**சீரகத்தை** வாழைப் பழத்துடன் பிசைந்து காலை வெறும் வயிற்றில் சாப்பிட்டால் எடையும் குறையும். சீரகத்தையும், உப்பையும் சேர்த்து தண்ணீர் குடித்தால் வயிற்றுவலிக்கு உடனடியாக தீர்வு தரும். சீரகத்துடன் கற்கண்டை கலந்து மென்று தின்றால் இருமல் போகும். சீரகப்பொடியோடு தேன் கலந்து சாப்பிட்டால் விக்கல் நிற்கும். சீரகத்தை அரைத்து உடம்பில் பூச அரிப்பு நின்றுவிடும். சீரகத்தை மென்று தின்றாலே வயிற்று வலிநீங்கி செரிமானம் நன்றாக ஏற்படும். சீரகப்பொடியோடு எலுமிச்சை சாறு சேர்த்து குழைத்து சாப்பிட்டால் பித்தம் அகலும்.

நல்லெண்ணெயில் சீரகத்தைப் போட்டு காய்ச்சி எண்ணெய் தேய்த்து குளித்தாலும் பித்தம் நீங்கும். சீரகப்பொடியோடு தேன், உப்பு, நெய் சேர்த்து தேள் கொட்டிய இடத்தில் பூசினால் விஷம் முறிந்துவிடும். சீரகத்தை வறுத்து சுடுநீரில் போட்டு பால் கலந்து சாப்பிட பசிகூடும். மிளகுப்பொடியோடு கலந்து காய்ச்சி வடிகட்டிக் குடித்தால் அஜீரணம் மந்தம் நீங்கும். சீரகம் வில்வவேர்ப்பட்டை இரண்டையும் அரைத்து பாலில் கலந்து காலையில் குடித்து வர தாது பலம் கூடும்.

பெண்களுக்கு ஏற்படும் வெள்ளைபடுதல் நோய்க்கு சிறிது சீரகத்துடன் சின்ன வெங்காயம் வைத்து நன்றாக அரைத்து எலுமிச்சை சாறில் சேர்த்து பருகிவர கல்லீரல் கோளாறு குணமாகும். சீரகத்தை தேயிலைத் தூளுடன் சேர்த்து கஷாயம் செய்து குடித்தால் சீதபேதி குணமாகும். கொஞ்சம் சீரகமும், திப்பிலியும் சேர்த்துப் பொடி செய்து குடித்தால் சீதபேதி குணமாகும். தேனில் குழைத்து சாப்பிட்டால் தொடர் விக்கல் விலகும்.


தினம்தோறும் கல்விமுரசு இணைப்பு

தினமுரசு நாளிதழ்

ரூ.10/= மட்டுமே

A/L, O/L மற்றும் புலமைப் பரிசில் மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன் தினமும் வெளியாகின்றன!

இப்போது நீங்கள் அறிய விரும்பும் அன்றாடச் செய்திகள் அனைத்துக்கும்

- உள்நாட்டு - வெளிநாட்டு - விளையாட்டுச் செய்திகள்
- உள்நாட்டு - உலக - இந்தியச் செய்திகள்
- கனதிமிக்க கட்டுரைகள்
- தேடித் தொகுத்த பல்சுவை அம்சங்கள்
- சினிமா
- நாள் ராசி பலன்
- வேலைவாய்ப்புத் தகவல்கள்
- மருத்துவக் குறிப்புகள்
- பத்திகள் - "பரமர் சங்கமம்", "பதிவிறக்கப் பெட்டகம்"

வடபுலத்தான் எழுதும் நாட்டு நடப்பு குறிப்புகளும் விமர்சனங்களும்

வடபுலத்தான் எழுதுவது...




# தகுதி



ரோஜாப்பூ பந்தாய் குழந்தைக் கம்பித் தொட்டிலில் கிடந்திருந்தது. பிறந்து இரண்டு மணிநேரமே ஆகியிருந்தது. இரத்தக் கவிச்சியைப் போக்க நன்றாகக் குளிப்பாட்டி எடுத்துத் திண்ணமாய் பவுடரைப் பூசிவிட்டிருந்தாள் நேர்ஸ். இன்னும் கண் திறக்கவில்லை. உதடுகள் இறுக்கமாய் ஒட்டிக்கொண்டு கிடந்தன. தான் பிறந்திருப்பதற்கும் தனக்கும் சம்பந்தமில்லாதது மாதிரி முகத்தில் அலட்சியம் தொனிக்க அசைவின்றிக் கிடந்திருந்தது. ஜீவிதத்தின் சாட்சியாய் நடுவயிறு ஏறி இறங்க, சுவாசத்தை மட்டும் நாசிகள் வழியே சுவாரஸ்யமாய் வெளியேற்றிக் கொண்டிருந்தது.

தொட்டிலின் அருகில் நின்று குழந்தையை இமைகொட்டாமல் பார்த்து ரசித்துக்கொண்டிருந்தாள் அமுதவல்லி. அவளின் அடிவயிறு "சில்"லென்று குளிர்ந்திருந்தது. கல்யாணம் முடிந்து பத்து ஆண்டுகளாகியும் இதுவரை ஒரு குழந்தைப் பாக்கியத்திற்குக்கூட இடம்கொடுத்திராதிருந்தது அவள் வயிறு. இப்போது தன் தங்கைக்குக் குழந்தைப் பிறந்திருந்தாலும் அதைத் தான் பெற்றிருந்ததைப் போல நினைத்து சந்தோசப்பட்டாள். வறண்ட பூமியில் மழைபெய்து குளிப்பாட்டியது போன்ற புத்துணர்ச்சி.

கட்டிலில் படுத்திருந்த மலர்க்கொடியின்மீது நெகிழ்வாய் அவள் பார்வைத் தாவியது. அவளுக்கும் இன்னும் மயக்கம் தெளிந்திருக்கவில்லை. காற்றுப்போன பலூன் மாதிரி வெறுமையாகக் கிடந்திருந்தாள். முகத்தில் வேதனையின் மெல்லிய ரேகைகள், மின்னல் வெட்டுக்களாய் தோன்றி மறைந்துகொண்டிருந்தன. காலிலிருந்துத் தொடங்கி கழுத்துவரை போர்த்தியிருந்த வெள்ளைக் கச்சை அவளை ஒரு சிலையாகக் காட்டிக்கொண்டு இருந்தது. மல்லாக்கப் படுக்க வைத்திருந்தார்கள் சிலையை. ஒரு குழந்தைக்குப் பிறப்புத் தந்திருந்த உணர்வில்லாமல் இறுக்கமாகக் கிடந்திருந்தது சிலை.

"அய்" தங்கச்சிப் பாப்பா கருணாநிதியை முந்திக்கொண்டு ஓடிவந்த அவனின் அண்ணன் பிள்ளைகள் குழந்தையைப் பார்த்ததும் கைதட்டிச் சிரித்தார்கள். டவுசரும் டீ-சர்ட்டும் அணிந்திருந்த சிறுவனும், குட்டைப் பாவாடையும், "தொளதொள"வென்று மேல்சட்டையும் அணிந்திருந்த சிறுமியுமே அண்ணனின் பிள்ளைகள்.

தொடர்ந்து அண்ணனும் அண்ணியும், அப்பாவும், அம்மாவுமாகச் சேர்ந்து பெருமிதத்துடன் உள்ளே வந்தனர். அவர்களைக் கண்டதும் தன் பார்வையை வெட்கப்பட்டுத் தாழ்த்தியவாறு நாசூக்காய் நகன்றுகொண்டு நின்றாள் அமுதவல்லி.

"நம்ம அம்மாவை மாதிரியே பேபி இருக்குலாடா, கருணா?"

"ஆமா" ஆமாண்ணே"

"நல்ல கவனிச்சுப் பாருங்க" அப்பாவோட முகச்சாடைத் தெரியுது"

"இல்லம்மா. உங்க முகச்சாடை தான்"

"அடி சக்கைன்னேனாம்" அத்தைப் "பிகு"பண்றதப் பாருங்களேன"

தங்கள் குடும்பத்திற்குப் புது வாரசு ஒன்று வந்த மகிழ்ச்சியில் மிகவும் சந்தோசப்பட்டார்கள் அவர்கள். அவர்களின் சந்தோசத்தில் கலந்துகொள்ள மனமில்லை அமுதவல்லிக்கு. மலர்க்கொடிக்குப் பக்கத்தில் வந்து நின்று கொண்டாள். அவர்களுக்கும் தனக்கும் சம்பந்தமில்லாதது மாதிரி பார்வையை மலர்க்கொடிமேல் படரவிட்டிருந்தாள். ஆயினும் அவளின் காதுகள் அவர்கள் சிதறியிருந்த வார்த்தைகளை உள்வாங்கிக் கொள்ளாமல் இல்லை. தன் இதயத்தில் சன்னமாய் கீறல் விழுந்திருந்ததை உணர்ந்தாள். எட்டு வருடங்களுக்கு முன்னால் அநியாயமாய் மரித்துப்போயிருந்த தன் உயிருக்கு உயிரான அம்மாவின் மறுபிறப்பாகவே குழந்தையை நினைத்திருந்தாள் அவள்.

கருணாநிதியின் குடும்பத்தார் அதை வேறுவிதமாய் பெருமையடித்துக் கொண்டதில் மனம் கலவரப்பட்டுப் போயிருந்தது அவளுக்கு. சிறுவயதிலே விதவையாய் ஆகியிருந்த அம்மா, எத்தனைச் சிரமப்பட்டு அவர்கள் இருவரையும் வளர்த்திருந்தாள். அமுதவல்லியின் திருமணம் வரைக்கும்தான் அம்மாவின் உயிர் நிலைத்திருந்தது. மலர்க்கொடிக்கு வாழ்க்கையை அமைத்துத் தந்தது, அமுதவல்லியும் அவள் கணவனும் தான். குழந்தையில்லாது போயிருந்த அவர்களுக்குக் குழந்தையாகிப் போயிருந்தாள் மலர்க்கொடி. கல்யாணமாகி பத்து வருடங்களாகியும் தங்கள் கைகளில் ஒரு குழந்தைப் பாக்கியம் தவழ்ந்திராதிருந்த வெறுமையை மலர்க்கொடியைச் சீராட்டுவதன் மூலம் நிறைவு செய்துகொண்டிருந்தார்கள் அவர்கள்.

வங்கிப் பணியிலிருந்த கருணாநிதி தன் குடும்பத்தாருடன் மலர்க்கொடியைப் பெண் கேட்க வந்ததில் பெரும்மகிழ்ச்சி அவர்களுக்கு. செலவு அதிகமானதைப் பற்றிக் கவலைகொள்ளவில்லை. தரிசாய்க் கிடந்த சிறிய நிலத்தை விற்றும், முகம் தெரிந்தப் புண்ணியவான்களிடம் கடன்களை வாங்கியும் ஊரே பொறாமைப்படும்படி கல்யாணத்தை நடத்தி வைத்திருந்தார்கள்.

இரண்டொரு மாதங்களில் மலர்க்கொடி கருத்தரித்துக் கொண்டதில் இதயம் கொள்ளாத மகிழ்ச்சி அவர்களுக்கு. மாதா மாதம் ஊரிலிருந்து வந்துப் பார்த்து விட்டுப் போனார்கள். தானே கருத்தரித்துக் கொண்டதுபோன்ற சந்தோசம் அமுதவல்லிக்கு. பிரசவத்துக்கு ஒரு மாதம் மீதமிருந்த நாட்களில் மலர்க்கொடிக்கு உதவி யாய் வந்து உட்கார்ந்துக் கொண்டாள்.

"என்னங்க எல்லாரும் சும்மா பார்த்துக்கிட்டு நிக்கிறிங்க? சீனி வச்சிருக்கீங்களா?"

"இல்லம்மா"

"வெந்நீ"

"இப்போ வாங்கிட்டு வந்திர்றேம்மா"

"போங்க. மொதல்ல அதச் செய்யுங்க. எல்லாரும் இப்படிக் கூட்டம் போட்டுக்கிட்டு நின்னா பெரிய டாக்டர் வந்து எங்களைத் தான் சத்தம் போடுவாங்க.

எல்லாரும் சலசலத்துக் கொண்டு அறையை விட்டு வெளியேறினார்கள். அமுதவல்லி மட்டும் ஃப்ளாஸ்க்கைத் தூக்கிக் கொண்டு துரிதவேகத்தில் படிகளில் இறங்கிக் கடைத்தெருவுக்கு ஓடினாள். தேனீர் போட்டுக்கொண்டிருந்த ஒடிசலான மனிதரிடம் ஃப்ளாஸ்க்கை நீட்டி வெந்நீர் வாங்கிக்கொண்டாள்.

மலர்க்கொடிக்குத் தலைப்பிரவசம் என்பதால் மிகவும் அக்கறையுடன் அந்த மருத்துவமனையில் கொண்டு வந்துச் சேர்ந்திருந்தான் கருணாநிதி. வங்கியில் காசாளர் பணி, அவனுக்குக் கைநிறையச் சம்பளம் தந்தது. அவனின் அப்பாவும் அனல்மின் நிலையத்தில் தலைமை எழுத்தராய் பணிசெய்து ஓய்வுப் பெற்றிருந்தார். அண்ணன் உப்பளங்களை வைத்து நடத்திக் கொண்டிருந்தான். வறுமையை அனுபவித்திராத நடுத்தர வர்க்கத்தைச் சார்ந்த குடும்பம். அமுதவல்லியின் குடும்பத்தைப் போல அரக்கப்பரக்கப் பாடுபட்டு, வயிற்றைக் கழுவி, வாழ்க்கைக்குச் சேமித்துவைக்கும் எளிய குடும்பம் அல்ல. மலர்க்கொடி அழகாய் இருந்ததும், அமுதவல்லியிடம் கொஞ்சம் பணம் இருந்ததுமே கருணாநிதியிடம் கைபிடித்துக் கொடுக்க தோதுவாகப் போயிருந்தன.

வேர்க்க விறுவிறுக்க அமுதவல்லி வந்துகொண்டிருந்தாள். "என்ன வெந்நியும் சீனியும் வாங்கியாச்சா?" பரிகாசம் இழையோடக் கேட்டாள் கருணாநிதியின் அம்மா. "ஆமாங்க" ஒற்றை வார்த்தையில் பதில் சொல்லிக்கொண்டே அறையை நோக்கி வேகமாய் நடைபோட்டாள் அமுதவல்லி.

மலர்க்கொடி விழித்திருந்தாள். இமைகளை முழுவதும் விரித்துத் திறந்து கொள்ள முடியாத கிறக்கத்தில் மேம்போக்காகப் பார்த்தாள். அவளின் தலைமாட்டில் முகமலர்ச்சியுடன் அமர்ந்திருந்த கருணாநிதி அமுதவல்லியைக் கண்டதும் நாகரிகம் கருதி அவசரமாய் எழுந்து நின்றான்.

"வாங்கிட்டு வந்திட்டிங்களா அண்ணி?" "ஆமாங்க." மலர்க்கொடியின் பார்வை இப்போது அமுதவல்லியின் கண்களைச் சந்தித்தது. வறட்சியில் ஒட்டியிருந்த தன் உதடுகளைச் சிரமப்பட்டுத் திறந்தாள் மலர்க்கொடி. என்னக்கா?

"கொழந்தைக்குச் சேனக் குடுக்கணுமில்லாம்மா? அதான் வெந்நியும் சீனியும் வாங்கிட்டு வந்திருக்கேன்."

குழந்தை இன்னும் விழித்திருக்கவில்லை. தரையில் வரைந்த ஓவியமாய் அசைவின்றியே கிடந்திருந்தது. அதன் உதடுகள் மட்டும் ஈரத்துக்காக தவித்தது போல மேலும்கீழும் காற்றைப் பிசைந்தன.

அமுதவல்லி சன்னமாய் அதிர்ந்து போனாள். "குழந்தைக்குப் பசிக்குதுப் போலம்மா. சீக்கிரம் சீனிய கலக்கிக் குடுக்கணும். நேர்ஸுக்கு கூட்டிக்கிட்டு வர்றேன்." அவளை அலைய வைக்க வில்லை நேர்ஸ். பணியின்நிமித்தம் தற்செயலாக உள்ளே கொண்டிருந்தாள். "வாங்கிட்டு வந்தாச்சா? தம்ளர்லக் கொஞ்சமா வெந்நீர் எடுத்து அதுக்குள்ள சீனிப்போட்டுக் கலக்குங்க."

மேசைமேல் தனித்திருந்த தம்ளரைக் எடுத்து வெந்நீரால் தம்ளரின் கால் பகுதியை நிறைத்தாள் அமுதவல்லி. பொட்டலத்தை அவிழ்த்து. சொற்ப அளவில் சீனியை அள்ளியெடுத்து வெந்நீருக்குள் போட்டாள். கொஞ்ச நேரம் தம்ளரைக் குலுக்கிவிட்டுப் பார்த்தபோது வெந்நீருக்குள் சீனி முழுவதுமாய் தன் உருவத்தை இழந்திருந்தது தெரிந்தது.

பாந்தமாய் குழந்தையைத் தூக்கி மடியில் சாய்த்துக் கொண்டு ஸ்டூலில் அமர்ந்தாள் நேர்ஸ். குழந்தை இப்போது நெளிந்துகொடுத்தது. பலநாள் உழைப்பின் அசதியைப் போக்கும் பாவனையில் மிகவும் சிரமப்பட்டு உடலை அசைத்தது. அதன் உதடுகளிலிருந்து சன்னமாய் அழுகுரல் வெளிப்படத் துவங்கிற்று.

"வாங்க உறவுக்காரங்கதான் சேனக் கொடுக்கணும்."

"கொஞ்சம் பொறுங்க சிஸ்டர். வராந்தாவுல கொழந்தையோடப் பாட்டி நிக்கிறாங்க. கூட்டிக்கிட்டு வந்திர்றேன். அமுதவல்லி வெளியே போக முற்பட்டாள்.

மலர்க்கொடி அவசரமாய் அவளைத் தடுத்தாள். "சேனையை நீ குடுத்தா என்னக்கா? குழந்தையை நா பெத்து எடுக்கறதுக்கு நீதான் கஷ்டப்பட்ட?"

கருணாநிதியும் தன் மனைவிக்கு ஒத்துவாசிக்கத் தொடங்கினான்.

"ஆமா அண்ணி. நீங்க குடுத்தா என்ன? உங்களுக்கு அந்தத் தகுதி இல்லையா என்ன?"

அமுதவல்லிக்கு ஆற்றாமையாய் இருந்தது. மனம் பேதலிப்பில் திணறியது. "அப்படிச் சொல்லாதீங்க. உங்க அம்மாவுக்குத்தான் எல்லாத் தகுதியும் இருக்கு. புள்ளக்குட்டிங்கப் பெத்தெடுத்து பேரன் பேத்திகளக் கண்டவங்க. என் தங்கச்சி மகளும் அவுங்கள மாதிரி குடும்பம், குழந்தையின்னு ஆகறதுதான் எனக்குச் சந்தோசம்."

விறுவிறுவென்று வாசலை நோக்கி ஓடினாள் அமுதவல்லி. அவர்கள் நின்றிருந்த இடத்தில் வெறுமை நிறைந்திருந்தது. வராந்தாவின் அற்றம்வரை போய் தேடினாள். ஏமாற்றமே மிஞ்சியது.

மடத்தடியான்

# பலதும் பத்தும்




பாராளுமன்றத்தில ஒரு சட்டமூலம் கொண்டு வாறது பற்றி பேசினவ குற்றச்செயல் களால் பலியாக்கப்பட்டோருக்கும், சாட்சியங்களுக்கு மான உதவி மற்றும் பாதுகாப்பு சம்மந்தமான சட்டமூலம். இதில பேசின பிரேமச்சந்திர சுவாமிஜி சொல்லுறார். இது பல ஆண்டுகளுக்கு முன்கொண்டு வரப்பட்டிருக்க வேண்டியது. பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் பல்லாயிரம் பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள், இது சம்மந்தமான சாட்சியங்களை கொண்டுவந்த போது அந்த சாட்சியங்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லாமல் இருந்தது எண்டு.

நல்ல பட்டறிவோட அவர் பேசி இருக்கிறார். இதை 2012இல் கொண்டுவர முயற்சித்து முடியவில்லை. கொண்டுவந்திருந்தா பலரை கூண்டில் ஏற்றி தண்டனை கொடுத்திருக்கலாம் எண்டார். சத்தியமான வாக்கு.

ஆனா விசாரணை காலத்தை 1988இல் இருந்து ஆரம்பிக்க சொல்லி இருக்கலாம். அப்பிடி எண்டாத்தான் பாதிக்கப்பட்ட எங்களைப் போன்ற பலருக்கு உதவி கிடைக்கும். இந்தியப் படை காலத்தில மண்டையன் குழு நடத்தினவை, என்னை போட்டு உழக்கினவைய கூண்டில ஏத்தலாம். மேலும் அப்ப நான் பாத்த படுபாதக சம்பவங்கள் பற்றி சாட்சி சொல்லமுடியும்.

பிரேமச்சந்திர சுவாமிஜிட்ட நான் கேட்கிறது அனாவசிய கைது தடுத்துவைப்பு அநியாயம் எண்டு பேசினியள். அசோக வனத்திலயும் அதுக்கு முன்னால இருந்த வீட்டிலயும் எத்தனையோ பேரை தடுத்து வைத்திருந்த நீங்கள் செய்தது நியாயமா?

இப்ப கோத்தபாய முகாமை விசாரிக்க சொல்லுறியள், உங்கட மண்டையன் முகாம் பற்றி விசாரிப்பம் வாங்கோ. பாதுகாப்பு உத்தரவாதம் தந்தா நாங்கள் திகதி, மாதம், வருடம், குற்றம் நடந்த இடம் சம்மந்தப்பட்டவர்களின் பெயர் எல்லாம் தரத் தயார்.

இப்ப ஊர் உலகுக்கு காட்டம வைச்சிரிக்கினம் எண்டு அவங்களை சொன்னியள். அப்ப நீங்கள் பிள்ளையளைப் பிடிச்சுப் போய் பயிற்சி கொடுக்கேக்க பெத்த தாய்க்குக்கூட காட்டமத்தானே வைச்சிருந்தனியள்.

உங்கட பதவிவெறிக்கு தங்கட பிள்ளையளை பறிகுடுத்த கனசனம் காத்துக் கொண்டிருக்குது உங்களை கூண்டில் ஏற்றி சாட்சி சொல்ல. கடந்த அரசால் நியமித்த குழு பல இடத்தில விசாரித்தது எண்டியள். அது ஏன் மண்டையன் குழுவை அதன் தலைவனை விசாரிக்கவில்லை?

நீங்கள் பாராளுமன்றத்தில் பேசினதெல்லாம் அலசி ஆராஞ்ச நாங்கள், நீங்கள் ஒரு வேதம் படித்த சாத்தான் எண்டும் பெருமாள் கோவில இடிச்சுப்போட்டு இராமாயணம் படிக்கிற பாவி எண்டும் வேதம் ஓதி வெண்நீறு அணிந்து எருமை ஏறி பதவிக்காய் பல உயிர்களை பலியெடுத்த, பலிகொடுத்த மகாபாவி என்பதை நன்கறிவோம்.

இனமோதல காரணம் காட்டி நடந்த அனைத்து அநியாயங்களும் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படவேண்டியவை. அதுக்கான சட்டமூலம் கொண்டுவாங்கோ நல்லது. ஆனா அது நடந்த அனைத்து விடையங்களையும் விசாரிக்கவேணும்.

முக்கியமாய் புலித்தோல் போத்தி பதவிக்குவந்த நீங்கள் இப்ப ஜனநாயகம் பேசிற கூட்டின்ர பேச்சாளர் சர்வதேச விசாரணை வேணுமெண்டு கேக்கிற நீங்கள் முதலில எங்கட மக்கள் மன்றத்துக்கு வாங்கோ.

ஆதாரத்தோட அவையள் நீங்கள் செய்த, செய்விச்ச துன்பியல் சம்பவங்களுக்கு நியாயம் கேட்கட்டும். வாற தீர்ப்பு உங்களை தண்டிக்கட்டும். மற்ற இனத்தவன் எங்களுக்கு அநியாயம் செய்ததுக்கு சர்வதேச விசாரணை கேளுங்கோ.

அதேநேரம் மண்டையன் குழு நடத்தி சொந்த மக்களுக்கு நீங்கள் செய்த அநியாயத்துக்கு உள்ளூர் விசாரணை வேணும். உங்கட தம்பிய கொண்டு மாகாணசபையில ஒரு தீர்மானம் கொண்டுவாங்கோ. விசாரணை கொமிசனை முன்னாள் நீதிபதி எங்கட முதலமைச்சர் தலைமை தங்கட்டும் தீர்ப்பு வழங்கட்டும்.

சட்டமூலம் வரட்டும், உங்களை விசாரணை கொமிசனில் நிக்க வைப்போம். தங்களின்ர பிள்ளையளை பிடிச்சு பலிகொடுத்த உங்களை கூண்டில் ஏற்ற மக்களும், நாங்களும் காத்திருக்கிறம். வீ வில் சீ யூ சூன்.

# உடையாற்ற திருவிழாவில சடையார் வெடி கொளுத்துறார்...

**நாட்டிலை இப்ப நடக்கிற சம்பவங்களை பார்த்தால், உடையாற்ற திருவிழாவில சடையார் வெடி கொழுத்தின கதைதான் ஞாபகத்திற்கு வருகுது.**

முதலிலை கதையை கேளுங்கோ!

தடல்புடலா வெடி கொளுத்தி திருவிழா நடத்துறதெண்டால் உடையாருக்கு அலாதிப்பிரியம். சீனவெடிகள், சீறுவாணங்கள், வேடிக்கை வெடிகள் என்று காதைப் பிளக்கும்.

காசை காசென்று பாராமல் உடையார் நல்லா செலவழிச் சுத்தான் தன்ரை திருவிழாவை நடத்துவார். எப்ப உடையாரின் திருவிழா வருப்போகுது என்று மூக்கை நுழைக்கக் காத்திருப்பார் சடையார்.

தான் செலவு செய்யாமல் உடையார் பணத்திலை வேட்டியை மடிச்சு கொடுக்கு கட்டிக்கொண்டு வெடி கொழுத்தி விலாசம் மட்டும் காட்டுவார் சடையார்.

சனம் பார்த்துப்போட்டு சடையார் நல்லா வெடி கொழுத்துறார். திருவிழா என்றால் இப்படித்தான் பாருங்கோ இருக்கோணும் என்று சடையாரை புகழ்ந்து பேசுவினம்.

பிறகென்ன...? உடையாற்ற செலவிலை வெடி கொழுத்தின சடையார் நெஞ்சை நிமிர்த்தி நடை ஒன்று நடப்பார்.

இனி விசயத்துக்கு வருவம். போர்க்குற்ற விசாரணை அறிக்கையை பிற்போடாமல் உடனடியா வெளியிடச் சொல்லி யாழ்.பல்கலைக்கழக சமூகத்தினர் பேரணி நடத்தினவை.

இந்த பேரணிக்கு தார்மீக ஆதரவுகூட வழங்க தகுதியற்று வெட்கித்தலைகுனிந்து நிண்டவை தமிழ் தேசியகூட்டமைப்பு.

ஆட்சிமாற்றத்திற்கு வாக்களியுங்கோ எண்டு கேட்டிச்சினம். ஏதோ காகம் இருக்க பனம் பழமும் விழுந்த கதையா ஆட்சியும் மாறிப்போச்சு...,

போதாக்குறைக்கு புதிய அரசாங்கத்திலை தேசிய நிறை வேற்று சபை ஒன்று உருவாக்கப்பட்டு அதிலை தமிழ் தேசிய கூட்டமைப்பு பிரதிநிதிகளும் அங்கம் வகிக்கினம்.

வெளியுலகத்தின்ரை பார்வையிலை தமிழ் தேசியக் கூட்டமைப்புக்காரரும் புதிய அரசிலை அங்கம் வகிக்கினம் என்றுதான் நினைக்கினம்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு அமைச்சரவையிலை அங்கம் வகிக்க மறுத்தாலும், அதைவிட உயர்ந்த ஸ்தானத்திலை இருக்கிற தேசிய நிறைவேற்று குழுவிலை இவையள் இருக்கினம் எண்டது வெளியுலகத்தாருக்கு தெரிஞ்சு போச்சு பாருங்கோ.

அதுதான் பாருங்கோ ஐ.நா விசாரணை அறிக்கை இப்போதைக்கு தேவையில்லை என்று வெளியுலகம் தள்ளிப்போட்டிருக்கு.

தாங்களே ஐ.நா விசாரணை அறிக்கை தள்ளிப்போறதுக்கு காரணமா இருந்துகொண்டு, அதே ஐ.நா விசாரணை அறிக்கையை துரிதப்படுத்தச்சொல்லி தமிழ் தேசிய கூட்டமைப்பு எந்த முகத்தோடைதான் குரல்கொடுக்க முடியும்...?

அதுதான் பாருங்கோ யாழ்.பல்கலைக்கழக சமூகத்தினர் நடத்துற பேரணிக்கு ஆதரவளிக்கிற தகுதியைக்கூட தமிழ் தேசியக் கூட்டமைப்பார் இழந்துபோய் நிற்கினம்.

பல்கலைக்கழக சமூகம், இது விடயத்திலை கடுப்பிலைதான், இருக்கினம். அதுதான் பாருங்கோ தாங்களே இந்த பேரணியை நடத்துறம் எண்டு சொல்லிப்போட்டினம்.

ஆனாலும் பாருங்கோ, பேரணி நடத்துற காரியத்தை பல்கலைக்கழக சமூகத்தினர் கையிலை எடுத்ததும் தமிழ் தேசிய கூட்டமைப்புக்காரார் கொதிகஞ்சி குடிச்ச நாய்கள் மாதிரி ஓடித்திரிஞ்சவை.

தமிழ் தேசிய கூட்டமைப்பின்ரை தலையும் வாயும் புதிய அரசாங்கத்திலை தேசிய நிறைவேற்று குழுவென்று சொல்லி ஒட்டிக் கொண்டிருக்கினம். மறுபுறத்திலை நறுக்கிவிட்ட வாலுகள் போல கிடந்து துடிக்கிறவை, தாங்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பு எண்டும், தாங்களும் இந்த பேரணிக்கு ஆதரவு எண்டும் அறிக்கைவிட்டிருக்கினம்.

போதாக்குறைக்கு நாற்பதினாயிரம் சவப்பெட்டி புகழ் கூட்டத் தாரும் பேரணிக்கு ஆதரவு எண்டு சொல்லி திரிஞ்சவை. ஆனாலும் பாருங்கோ, யாரும் தங்கடை பேரணிக்குள்ளை மூக்கை நுழைக்கக் கூடாது எண்டதிலை பல்கலைக்கழக சமூகத்தினர் கவனமாத்தான் இருந்தவையாம்.

கட்சிக்கொடிகள், பொது அமைப்புகள் எண்டு பதாதைகள் அடையாளங்கள் எதுவும் கொண்டுவரக்கூடாது. துண்டுப் பிரசுரங்கள் ஒண்டும் விநியோகிக்கக்கூடாது. ஒழுங்கமைப் பாளர்கள் தயாரித்த சுலோக அட்டைகளைத் தவிர வேறு எவரும் சுலோக அட்டைகள் கொண்டுவரக்கூடாது.

இப்படி கட்டுப்பாடுகள் போட்டு தமிழ் தேசிய கூட்டமைப் பாரையும், நாற்பதினாயிரம் சவப்பெட்டிக்காரர் கூட்டத்தையும் கதிகலங்க வைச்சுப்போட்டினம் பல்கலைக்கழக சமூகத்தினர்.


வீட்டுக்கு வெளியாலை நில்லுங்கோ என்று பிடிச்சு விட்டுருக்கு. ஆனாலும் பாருங்கோ அழையாதை வீட்டுக்குள் நுழைந்த விருந்தாளிகள் போல பேரணிக்குள்ளை புகுந்து கூனிக்குறுகி நிண்டவையாம்.

எங்கை ஒரு போராட்டம் நடக்கிறதோ அங்கை வந்து மூக்கை நுழைத்து, தாங்கள் சொல்லித்தான் பேரணி நடக்குது எண்டு உரிமை கொண்டாடுகிறதிலை விண்ணாதி விண்ணர்கள்.

வெட்கம் கெட்டதுகள்! உடையாற்ற திருவிழாவிலை சடையார் வெடி கொழுத்தினது மாதிரி பல்கலைக்கழக சமூகத்தின்ரை பேரணியிலை இவையளும் கொடுக்கு கட்டிக்கொண்டு வெடி கொழுத்தியிருக்கினம்.

**நன்றி:இணையம்**

# இன்பத்தின் ஊற்று!





மகிழ்ச்சி எங்கே வருகிறது?
மனத்திலா
மனம் எங்கே இருக்கிறது?
மூளையிலா?
அப்போ மகிழ்ச்சி எங்கே
மூளையிலிருந்தா வருகிறது?

எங்கிருந்து வந்தாலென்ன?
மனம் பொங்குவது மூளைக்குத்
தெரிகிறது. அது மட்டுமா?
மகிழ்ச்சி என்று வந்துவிட்டால்
நரம்பு, தசை, இரத்தம்
உடம்பு முழுவதும்தானே நிலை
கொள்ளாமல் பூரித்துத்
துடிக்கின்றன!

மூளையா, நரம்பா, உடலா,
மனமா... நான் இன்பத்தில்
துள்ளுவது எதனால்?
உலுக்கியெடுக்கிற இந்த
இன்பத்தைத் தாங்கமாட்டாமல்
உடல் நடுங்குகிறது.
கண்ணில் கண்ணீர் பொங்குகிறது
இதயம் படபடவென அடித்துக்
கொள்கிறது. நரம்புகள்
அதிர்கின்றன. இரத்தத்துக்கு
பதில் தேன் ஓடுவதாக மனம்
இனித்து இலேசாகி சிறகடித்து
விண்ணில் பறக்கிறது.
மூளைக்குள் மில்லேனிய பிறப்பு
நாளில் வானவேடிக்கைகள்
தெரிகின்றன.
எல்லாவற்றையும், மூளைதான்
கட்டுப்படுத்துகிறதா?

மூளையின்
கொண்டாட்டம்
தானா இந்த இன்பம்?
அப்படியானால்,
எதனால் இந்த இன்பம்
என்று ஏன் இந்த மூளை
பகுத்தறிய மாட்டாமல்
இருக்கிறது?

உடலெல்லாம்
உழுதுசெல்லும்
இன்பத்தின் ஏர்முனை
உள்ளத்தில் களி துள்ள
தேன் தடவிய
மயிலிறகு
எண்ணமெல்லாம்
ஒளிநிரம்பிய
பாலமுதுச் சந்திரன்...

இவையெல்லாம் யாரால்? எப்படி?
எங்கிருந்து வந்து என்னை
இப்படி ஆட்டுவிக்கின்றன என்று
இந்த மூளை பகுத்துணராதது ஏன்?

சரி, இந்த இன்பப் பெருக்கை
வேறு யாரிடமாவது பகிர்ந்து
கொள்ளவாவது இந்த மூளை
துணை செய்கிறதா? தான்
அனுபவிப்பதை எடுத்துச்
சொல்லுமளவுக்கு இதனிடம்
வார்த்தைகள் கிடையாது
வழிவகையும் தெரியாது.

எப்படி நாம் வலியை பிறருக்கு
உணர வைத்துவிட முடியாதோ,
அப்படியேதான் அளவற்ற
இன்பமும் யாருக்கும்
தெரியப்படுத்திவிட முடியாத
திண்டாட்டம். உள்ளுக்குள்
மூச்சுத் திணறலை ஏற்படுத்தும்.

நண்பர்களிடம் சொல்லிப்
பகிர்ந்துகொள்ளக் கூடிய
இன்பங்களும் உண்டுதான் - அது
பரவாயில்லை ஆசுவாசப்படுத்திக்
கொள்ளலாம் ஆனால்...

காதல்! அந்த இருவரைத் தவிர
வேறு யாரிடமும் பகிர்ந்து
கொள்ளப்பட முடியாதது.
எப்படிச் சொல்லமுடியும்?

அதற்குரிய வார்த்தைகள்
உலகத்துப் பாஷைகள்
எவற்றிலேனும் இருக்கின்றனவா?
போகட்டும் அந்த மூச்சுத்
திணறலில் ஒரு துளியைத்தானும்
வெளிப்படுத்திவிடச் சொல் உண்டா?

உடலில், நரம்புகளில், இரத்தத்தில்,
சித்தத்தில் பரவும் சுகமான
வாதையை... சொல்ல முடியா
அந்தரத்தை... இந்த உலகிலிருந்து
கழற்றி வீசப்பட்டுவிட்டதான அந்த
விண்வெளி நீச்சலை... மனதின்
மாய்ச்சலை மூன்றாம் நபருக்கு
எப்படிக் கடத்த முடியும்?

துளையிடப்பட்ட மூங்கில்
இசையாக அழும் சுகம்போல்
ரணப்பட்ட இதயம் வலியில்
துடிப்பதே இன்பமாகும்.
இன்பமாகும் விந்தை!
வயிற்றுக்குள்ளிருந்து
சிறகடித்துக் கிளம்பும்
பட்டாம்பூச்சிகள்...
தொண்டைக்குள் பறந்து,
மூச்சைத் திணறவைத்து,

தலைக்குள் நிரம்பி படபடத்து
கும்மாளமிடும் வேதனை!
அடடா வலியில் இத்தனை
சுகமா? ஒரு பார்வையில்
நுழைந்து இதயத்தினுள்
புகுந்து கொண்டவள்
தருகின்ற இன்ப வாதை!

வண்டுகளின் குடியிருப்பு
அவள் கூந்தல் அந்த அடர்
இருளை அகற்றிவிடும்
ஒளிவிளக்கு அவள் வதனம்!
அந்த வெளிச்சத்திலேயே
ஆற்றங்கரைக் கருமணலாகப்
பளபளக்கின்ற அவள் கூந்தலின்
இழைகள், பார்த்தாலே
தெரிந்துவிடுகிறது அதன் மணமும்
குளிர்ச்சியும். அவள் உலவிய
இடங்களிலெல்லாம் காற்று
உற்சாகத்துடன் அசைவதிலிருந்து
புரிகிறது. குளிர்ச்சியும்
வாசனையுமாய் நடந்துலவுகின்ற
நந்தவனத்தைப் பார்த்தால்
காற்றுக்கே களிப்பேறிப்
பாடத்தோன்றாதா?
காற்று பாடுகின்றது.

சந்தேகமில்லை அதோ! மரங்கள்
எல்லாம் தலையாட்டுகின்றனவே!

அந்தப் பெண்தான் அவன்
விரும்பித் தன் நெஞ்சினுள்
வைத்திருப்பவள், காற்று
அகன்ற வெளியில் விட்டு
விடுதலையாகிக் களிப்பில்
துள்ளுகிறது அவன் என்ன
செய்வான். நெஞ்சில்
குடியிருப்பவள் அவனுக்குள்
இன்பக் காட்டாற்றை பொங்கிச்
சுழித்தோட வைக்கின்றாள்.
வெளியேயும் சொல்லி ஆற்றிக்
கொள்ள முடியாத மகிழ்ச்சித்
திணறல்.

**யான் நயந்து உறைவோள்
தேம்பாய் கூந்தல்
வளம்கெழு சோழர்
உறந்தைப் பெருந்துறை
நுண்மணல் அறல்
வார்ந்தன்ன
நன்னெறி யவ்வே
நறும் தண்ணியவே.**
(குறுந்தொகை: 116)

## சிந்தியா பதில்

**சிந்தியா! சர்வதேச புலி அமைப்புக்களைப் பலப்படுத்தவே புதிய அரசாங்கம் போர்க்குற்ற விசாரணைகளை நடத்தவுள்ளதாக சிலர் கூறுகின்றனரே?**

**எம்.மதிமலர், மாத்தறை.**

தற்போதைய பிரதமர் காய்நகர்த்தும் பாணியே தனியானது. அதை தெரிந்து கொள்ளாதவர்கள் பட்டியலில்தான் நீங்கள் சொன்ன சிலர் இருக்கின்றார்கள்.

எனவே இன்னும் கொஞ்சநாட்களில் புதிய அரசாங்கத்தின் திட்டம் என்ன என்பதை நீங்கள் புரிந்துகொள்வீர்கள்.

**சிந்தியா! முன்னாள் ஜனாதிபதி மீண்டும் அரசியலுக்குள் நுழைவாரா?**

**எம்.சமித், கேகோலை.**

எழுபதுகளிலிருந்து அவர் அரசியலுக்குள்தான் இருக்கிறார். மீண்டும் தேர்தல் அரசியலில் ஈடுபடுவாரா? என்பதுதான் உங்களின் கேள்வியாக இருக்கும் என நினைக்கிறேன்.

அதற்கான பதில், களநிலவரங்களை கூர்மையாகத் தட்டிவிட்டு பார்க்கிறார். சாதகமான சூழல் இருந்தால் வரலாம் என்பது அவரது விருப்பம்.

ஆனால், அவரை வெளியேற்ற வேண்டும் என்ற கங்கணம் கட்டிய தரப்புக்களின் கரங்கள் இன்னும் மேலோங்கி இருப்பதாகவே தெரிகிறது.



**சிந்தியா! விசிலடிச்சான் குஞ்சுகள் இப்போதும் இலங்கையில் இருக்கின்றனவா?**

**ச.தவமணிதேவி, மட்டுவில் தெற்கு.**

விசிலடிச்சான் குஞ்சுகளை தேடி இலங்கை என்ற பெரிய வளையத்துக்குள் செல்ல வேண்டிய அவசியம் இல்லை. நீங்கள் வாழுகின்ற பிரதேச பத்திரிகைகளை பார்த்தீர்கள் என்றாலே புரிந்து கொள்வீர்கள்.

யார்?, என்ன நோக்கத்திற்காக?, எதைச் சொல்கிறார்கள்?, அதனால் நாம் சார்ந்த சமூகத்திற்கு என்ன பலன்? போன்ற எதுவித ஆராய்ச்சியும் இல்லாமல் வீதிகளில் இறங்குகிற ஒரு பிரிவினர் இப்போதும் இருக்கிறார்கள் தானே! இப்படியானவர்களை விசிலடிச்சான் குஞ்சுகள் என்று சொல்லாமல் எப்படிச் சொல்வது.

**சிந்தியா! ஐ.எஸ். ஐ.எஸ் தீவிரவாதிகள் கூண்டுக்குள் வைத்து எரிக்கிறார்களே?**

**எஸ்.மானா, கொழும்பு–16.**

யுத்தத்தின் வெற்றி, தோல்வி கொலைகளிலேயே தங்கியிருக்கிறது என்ற நிலைமை வந்தபின்னர் அந்த யுத்தத்தில் ஈடுபடுகின்ற தரப்புக்கள் வெவ்வேறுவிதமான பாதகச் செயல்களில் ஈடுபடுகின்றன.

அதில் ஒரு வகை தான் நீங்கள் சொன்ன விடயம். இவ்வாறான அருவருப்புக்கள் மனித குலத்திடம் இருந்து அப்புறப்படுத்தப்படவேண்டுமாக இருந்தால், யுத்தம் என்பது அர்த்தமற்றது என்ற தெளிந்த பார்வை சகல மட்டங்களிலும் ஏற்படும் வகையிலான வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படவேண்டும். அதுவரையில்......!

**சிந்தியா! உலகக் கிண்ணப் போட்டிகளில் இலங்கையின் வெற்றி தொடருமா?**

**என்.ரொனி, புத்தளம்.**

ஆப்கானிஸ்தானுக்கு எதிரான போட்டியில் போராடி வென்றது இலங்கை அணி. இனிவரும் போட்டிகளிலும் வெல்லவேண்டுமாயின் கடுமையாகப் போராடவேண்டுமென்ற நிலையில்தான் இலங்கையின் தற்போதைய ஆட்டத்திறன் காணப்படுகின்றது.

**சிந்தியா! மரணத்தை எண்ணி நீங்கள் பயப்படுவதுண்டா?**

**து.யாழினி, தெல்லிப்பளை.**

மரணம் என்பது நமது ஓர் உண்மையான நண்பன். நமது அறியாமைதான் அதனை எண்ணி கலங்கவைக்கிறது.

எனவே "கவலைப்படாதே சகோதரா" என்று பாடும் வகை நான்.

**சிந்தியா! ஆண்கள் எப்போது விழிப்பாக இருக்கவேண்டும்?**

**கே.அன்ரன், அச்சுவேலி.**

"பெண்கள் அன்போடு நெருங்கி வரும் போது....." என்று மட்டும் உங்கள் கேள்விக்கு நான் பதில் அளித்தால் பெண் வர்க்கம் கோவித்துவிடும்.

ஆகவே, பெண் வர்க்கம் எப்போது விழிப்பாக இருக்கவேண்டும் என்றால், "நெருங்கி வருகின்ற ஆண்கள் முகத்தில் எப்போது அசடு வழியத் தொடங்குகிறதோ அப்போது உஷாராகிவிட வேண்டும்."

# காதிலை பூகந்தசாமி

வணக்கமுங்கோ! மைத்திரி ஐயா அரியணை ஏறினதைத் தொடர்ந்து நிறைய அரசியல் மாற்றங்கள் திடுபுடன்று நடந்தது. அதிலை ஒரு அங்கமா எங்கட கூத்தமைப்புக்காரற்ற ஆட்டங்களும் இருந்தது. ஆர் எதைச் சொன்னாலும் கமக்கட்டுக்கப் போர்வாளைத் தூக்கிப்பிடிச்சுக் கொண்டு சுடலையாட்டம் ஆடுற வையள் மைத்திரி ஐயாவோட கொஞ்சம் கொம்புறமைஸ் பண்ணுறமாதிரிக் காட்ட வெளிக்கிட்டவை. ஆனா இப்ப இப்ப வாற செய்தியளைப் பார்த்தா வேதாளம் திரும்பவும் முருக்கமரத்தில ஏறின கதையாட்டம் ஒவ்வொரு குழுவன் மாடுகளும் ஒவ்வொரு பக்கத்தால இழுத்துக்கொண்டு நிக்குது. இதைப் பற்றிக் கதைக்கிறதெண்டா நாங்கள் இப்ப முத்துத்தம்பி அண்ணையத்தான் பிடிக்கோணும். மனுசன் விஷயங்களைப் புட்டுப்புட்டு வைக்கும். ஆனபடியால வாங்கோ அவரிட்டப் போவம்.

**கா.பூ:-** வணக்கம் முத்துத்தம்பி அண்ணை. என்ன திரும்ப மேதாவிகள் தங்கட சுயரூபத்தைக் காட்டத் தொடங்கிட்டினம் போலக் கிடக்கு.

**மு.தம்பி:-** இஞ்ச நானறியக் கனபேர் தங்கட சுயரூபங்களைக் காட்டத் தொடங்கியிருக்கினம். அதில் நீ எதைச் சொல்ல வாறாய் எண்டு விளக்கமாச் சொன்னாத்தானே நான் அதுகளைப் பற்றிக் கதைக்க முடியும். அவசரப்பட்டு வேறென்னத்தையும் தள்ளிப்போடக் கூடாது எண்டு.

**கா.பூ:-** ஓம்... ஓம்... அண்ணை வலு அலேட்டாகத்தான் இருக்கிறியள். நான் சொல்ல வந்தது எங்கட கூத்தமைப்புக்காரரின்ர அறிக்கைகளை யு... கதையளப்புக்களையும் பற்றி ஐ... விசாரணையாளர்கள் இங்க வந்து விசாரணை நடத்துவினம் எண்டால் அறிக்கையைத் தாமதப்படுத்தலாம். அது நோப் ப்ரப்ளம் எண்டு சட்டம் படிச்ச "சுமந்திரன் தம்பி சொல்லுறார். அவர் வாய் மூடேல்ல. கூட்டமைப்பின்ர பேச்சாளர் சுரேஸ் தம்பி சொல்லுறார். நோ நோ அது கூட்டமைப்பின்ர கட்சி முடிவில்லை. அது அவற்ற தனிப்பட்ட முடிவு எண்டு.

நாளைக்கு வேறை யாராவது வந்து தம்பி சுமந்திரன் சொன்னது அவற்ற சொந்தக் கதை எண்டு சுரேஸ் சொன்னது கட்சியின்ர கருத்தில்ல. அது சுரேசற்ற சொந்தக் கருத்து எண்டு சொன்னாலும் ஆச்சரியப்படுறதுக்கில்லை.


**மு.தம்பி:-** ஓமடா தம்பி! உந்தக் கேவலத்தை நினைச்சு எந்தக் கல்லிலை கொண்டு போய் மண்டைய மோதுறதெண்டு தெரியாமல்தான் நான் கொஞ்சநாளாய் திரியிறன். தமிழ்ச் சனத்தின்ர பெரும்பான்மை ஆதரவைப் பெற்ற கட்சி என்று பீத்திக் கொள்ளற ஒரு கட்சி நிலைப்பாடுகள் என்ன? அதை யார் சொன்னா ஏற்றுக் கொள்ளலாம்? எண்டு சனம் குழம்பிப் போயிருக்கு. ஒருதர் ஒண்டச் சொல்லுவார். அடுத்தநாள் மற்றவர் வந்து நோ நோ அது அவற்ற சொந்தக் கதை. சோகக்கதை. அதுகளை கட்சியின்ர கொள்கைக் கதையாய் ஏற்றுக் கொள்ளாதையுங்கோ எண்டு கதை அளப்பார். இப்பிடியான அரை வேக்காட்டுத்தனங்களை எல்லாம் பார்த்துச் சகிச்சுக்கொண்டு இருக்கோணும் எண்டு எங்கட சனத்தின்ர தலையெழுத்து.

**கா.பூ:-** உந்த சுத்துமாத்துக்கள், சில்லெடுப்புகள் எல்லாத்துக்கும் எங்கட சனத்தின்ர சிந்தனையற்ற முடிவுகள்தான் அண்ணை காரணம். தாங்கள் என்னத்தைச் சொன்னாலும் சனம் கேட்டுச் சிரிச்சுப் போட்டு புள்ளடியைப் போடும் எண்டு வறட்டுத் தைரியம்! அதை எண்டைக்குச் சனம் இல்லாமச் செய்யுதோ அண்டைக்குத்தான் சனத்துக்கு விடிவு. ஆனா இப்போதைக்கு...

**"யாவும் கலப்படமற்ற கற்பனை"**

வரலாறு படைத்த வல்லுநர்கள்

# பிதோவன்



வியன்னாவுக்கு 1792 இல் இடம்பெயர்ந்த பிதோவன், தன் வாழ்நாள் முழுவதையும் வியன்னாவிலேயே கழித்தார். பாடலாசிரியராக ஏற்கப்படாவிட்டாலும் பியானோ இசைப்பவராக அங்கீகரிக்கப்பட்டார் உயர்குடி மக்களால். அலங்கோலமான உடலமைப்பும் இடர்பாடான பேச்சும் தாழ்வு மனப்பான்மையும் கொண்டிருந்த போதிலும் சமூகத்தில் வெற்றிகரமாக முன்னேறியவர் பிதோவன். காலப்போக்கில், அவருடைய செவிட்டுத்தனம் மிக மோசமானபோது, எல்லோரிடமும் சண்டை போடலானார். பிறருடன் பழகாமல் தனிமையை நாடி ஒதுங்கியவர். உயர்குடிமக்களோடு குலாவுவதை வழக்கமாக்கிக் கொண்டார். அவர்களும் பிதோவனை ஏற்றுக்கொண்டார்.

பிதோவனின் இசைக் கல்வி வியன்னாவில் முன்னேற்றமடைந்தது. ஹேடனிடம் சில இசைப்பாடங்களைப் பயின்றார். அவரோடு ஒத்துப்போக முடியவில்லை. பிதோவனால் பிறகு தம் ஆசானாக மதிப்புமிக்க ஆல்பிசிட்பெர்கர் என்பவரிடம் பயிலலானார். எப்போதும் யாருடனும் ஒத்துப்போகாத குணம் கொண்டவர் பிதோவன். இக்காலகட்டத்தில் தான் பிதோவனின் இசைக் குறிப்புக்கள் பிரசுரமாயின. மூன்று பியானோ குறிப்புக்களும், மூன்று பியானோ ஸானடோஸும் ஹேடனுக்கு அர்ப்பணிக்கப்பட்டன.

பிதோவனின் பாணியில் 1802 வரை அதிக மாற்றம் ஏற்படவில்லை. பிதோவனின் செவிட்டுத்தனம் 1798 இல் தான் அறியப்பட்டது. இக்குறை 1802 இல் தீவிரமடைந்தது. மூன்றாவது சிம்பனியான எராய்காவை 1804 இல் எழுதினார். மேதைகளின் வரிசையில் ஒரு உறுதியான இடத்தைப் பிதோவனுக்கு உருவாக்கிக் கொடுத்தது இந்த சிம்பனிதான். இந்த சிம்பனியை நெப்போலியனுக்கு அர்ப்பணித்தார். நெப்போலியன் தன்னைச் சக்கரவர்த்தியாக (பிரான்ஸ்) பிரகடனப்படுத்திக் கொண்டதும் ஆத்திரமடைந்தது. தன் கையெழுத்துப் பிரதியின் தலைப்புப் பக்கத்தைக் கிழித்தெறிந்தார்.

பிதோவனின் பொருளாதார நிலை 1809 களில் ஒரு நிலையில் உறுதியாயிற்று. பெருங்குடி மக்கள் இணைந்து 4000 ஆஸ்திரிய பிளோரின்களை வழங்கினர். இதன் பிறகும் சிக்கல்கள் உருவாயின. குடும்பத்தினரில் சகோதரனும் அவருடைய பிள்ளைகளுக்கும் கூட்டுப்பாதுகாப்பாளராக விளங்கிய பிதோவனின்மீது மற்ற காப்பாளர்கள் வழக்குத் தொடர்ந்தனர்.

(தொடரும்)

# இந்தவாரம் உங்கள் பலன்

(26.02.2015 தொடக்கம் 04.03.2015 வரை)

## மேடம்

உத்தியோகத் துறையினர்களுக்கு ... இடநிரந்தரமும் சம்பள உயர்வுகளும் உண்டாகும். நீண்டநாட்களாக நடைபெற்றுவந்த சொத்து சம்பந்தமான வழக்கு விசயங்களில் காவல்துறையினர்கள் உதவிகளால் திரும்பக் கிடைக்கும். நீண்டகாலமாக வராத கடன்கொடுத்து இருந்த பணங்கள் மற்றும் பொருட்கள் நண்பர்களின் உதவியால் திரும்பக் கைக்கு வந்துசேரும். திருமண விசயங்கள் போன்ற சுபகாரிய நிகழ்ச்சிகளைச் சற்று தள்ளிப் போடுவது நல்லதாகும். ரேஸ் லோட்டரி போன்ற வற்றின்மூலமாக பணம் மற்றும் பொருட்களை ஏமாற்றம் அடையாமல் இருக்கவும். அலுவலகங்கள் மற்றும் வீடுகளை இடமாற்றம் செய்யப்போட்டிருந்த திட்டங்களில் சற்று பின்னிடைவு உண்டாகலாம்.

## இடபம்

உற்றார் உறவினர்களின் திடீர் வரவுகளால் பொருட்செலவுகள் வந்தாலும் அவர்களால் சில ஆதாயம் அடைவீர்கள். உடம்பில் நரம்பு இரத்தம் போன்ற சில உபாதைக்ள வந்துபோகலாம். கடன்கொடுப்பதைத் தவிர்க்கவும். காதல் சம்பந்தமான விசயங்களில் நல்ல செய்திகள் வந்துசேரும் காலமாகும். மற்றவர்களின் விசயங்களில் அநாவசியமாகத் தலையிட்டு வீண் சிக்கலில் மாட்டிக்கொண்டு மனநிம்மதியை இழக்கவேண்டாம். விவசாயம் செய்பவர்களுக்கு சுமாரான விளைச்சல் உண்டாகும். குடும்பத்தில் சுபகாரிய நிகழ்ச்சிகளுக்காக புதிய கடன்வாங்க முயற்சிப்பீர்கள். நீண்டகாலமாக வராத பணம் காவல்துறையினரின் உதவிகளால் திரும்பி வந்துசேரும்.

## மிதுனம்

தாயின் உடல்நிலையில் இதுநாள் வரையில் இருந்து வந்துள்ள பாதிப்புகள் குறைந்து நிம்மதி அடைவீர்கள். பங்காளிகளுடன் சேர்ந்து புதிய தொழில் முயற்சிகளைச் செய்வதில் நல்ல பலன் அடைவீர்கள். குலதெய்வ ஆலய வழிபாடுகளைச் செய்துவர முயற்சிப்பீர்கள். மற்றவர்களை நம்பி பணம் மற்றும் பொருட்களைக் கடன்கொடுத்து ஏமாற்றம் அடையவேண்டாம். அரசியல்வாதிகளுடன் எதிர்பாராத தொடர்புகள் ஏற்பட்டு அவர்களால் சிற்சில ஆதாயம் அடைவீர்கள். வெளிநாடு சென்றுவருதல் போன்ற முயற்சிகளில் எதிர்பார்த்து இருந்த நபர்களின் ஆதரவுகள் கிடைக்கும்.

## கடகம்

புதிய நண்பர்களின் சேர்க்கையைத் தவிர்ப்பதால் வீண் பிரச்சினைகளில் இருந்து விடுபடலாம். பழைய வீடு மற்றும் வாகனங்களை விற்று புதிய வீடு வாகனம் வாங்குவதற்காக முயற்சிப்பீர்கள். தீராத நோய்கள் தீருவதற்காக நீண்டதூர பயணங்களை மேற்கொள்ளுவீர்கள். திடீர் அதிர்ஷ்டம் மூலமாகப் பணம் வந்துசேரலாம். நீண்டகாலமாகத் திருமணம் ஆகாதவர்களுக்கு உறவினர்களின் ஆதரவுகளால் திருமணம் நடைபெறும். கணவன், மனைவி உறவுகளில் மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்துகொள்வது நல்லது. விட்டுப்போன பழைய உறவுகள் மீண்டும் தொடரும் காலமாகும்.

## சிங்கம்

புதிய ஆடை ஆபரணங்களை வாங்குவதன்மூலம் பொருட்செலவுகள் உண்டாகலாம். வெளிநாட்டில் வசிப்பவர்கள் தாய்நாடு சென்று திரும்ப வாய்ப்பு உள்ளது. கணவன், மனைவி உறவுகளில் இருந்துவந்த கருத்து வேறுபாடுகள் நீங்கி மனநிம்மதி அடைவீர்கள். வங்கிகளில் இருந்து வெகுகாலமாக எதிர்பார்த்து இருந்த உதவித்தொகை கிடைக்கும். உறவினர்களின் எதிர்பாராத திடீர்வரவுகளால் வீண் பொருட்செலவுகள் உண்டாகலாம். சொத்து விசயமாகக் கோர்ட் வழக்கு போன்றவற்றில் நல்ல சாதகமான முடிவுகளை எதிர்பார்க்க காலதாமதம் ஆகலாம். கணவன், மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும். விவசாயம் சுமாராகப் பலிதமாகும்.

## கன்னி

மாணவர்கள் கல்வியில் மிகுந்த கவனமுடன் பயின்றுவருதல் நல்லது. வேலையாட்களால் சிற்சில மனநிம்மதி இன்மையும் பொருட்செலவுகளும் வந்துசேரும். வேண்டாத விசயங்களில் தலையிட்டு மனநிம்மதி இழக்காதிருங்கள். நண்பர்களால் வீண் பொருட்செலவுகள் வந்துசேரலாம். தந்தைவழியிலான சொத்துக்கள் கைவந்துசேர வாய்ப்பு உள்ளது. நாட்பட்ட பழைய பிரச்சினைகள் மீண்டும் தலைதூக்கும். வீடு மாற்றம் செய்வதற்கான புதிய முயற்சிகளில் வங்கிகளின் ஆதரவு-கள் கிடைக்கும். நாட்பட்ட பழைய கடன்கள் அடைபடும். சமுதாய வளர்ச்சிகளுக்கான விசயங்களில் ஈடுபட்டு மனமகிழ்ச்சியும் பரிசு மற்றும் பாராட்டுக்களையும் பெறுவீர்கள்.

## துலாம்

உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்களிடம் இருந்து எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்க இன்னும் சற்று காலதா-மதம் ஆகலாம். செய்யாத குற்றங்களுக்கு அவப்பெயர் சேர வாய்ப்பு உள்ளதால் கவனமுடன் இருக்கவும். சொத்து விசயமாகப் புதிய பிரச்சினைகளைச் சந்தித்து வெற்றிபெறுவீர்கள். உடம்பில் எலும்பு மற்றும் நரம்பு போன்ற உபாதைகள் வந்துபோகும். பிள்ளைகளின் உடல்நிலையில் கவனமுடன் இருப்பது நல்வது. பிரிந்துபோன கணவன், மனைவி திரும்ப ஒன்றுசேருவார்கள். குடும்பத்தில் நடக்க இருக்கும் சுபகாரிய நிகழ்ச்சிகளைச் சற்று தள்ளிப்போடுவது சிறந்ததாகும். நீண்டகாலமாக உத்தியோகம் இல்லாத படித்த இளைஞர்களுக்குப் புதிய உத்தியோகம் கிடைக்க வாய்ப்புகள் உள்ளது.

## விருச்சிகம்

உடல்நிலையில் கண், காதுகளில் மிக கவனமாய் இருப்பது நல்லது. உற்றார் மற்றும் உறவினர்களின் எதிர்பாராத திடீர்வரவுகளால் பொருட்செலவுகள் ஏற்பட்டாலும் அவர்களால் ஆதாயங்களை அடைவீர்கள். அரசு சம்பந்தமான வழக்கு விசயங்களில் சாதகமான நல்ல தீர்ப்புகள் கிடைக்கும். குடி இருக்கும் வீட்டில் காரணமில்லாத சில பிரச்சினைகள் ஏற்பட்டு புதிய வீடு மற்றங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. தாயின் உடல்நிலையில் மிக கவனமுடன் இருப்பது நல்லது. அண்டை அயல் வீட்டுக்காரர்களுடன் வீண் பிரச்சினைகள் வர இருப்பதால் எச்சரிக்கையுடன் பேசிப்பழகுதல் நல்லதாகும். பொருளாதாரத்தில் இருந்துவந்துள்ள நெருக்கடிகள் சற்றுக் குறைந்து காணப்படுவதன் மூலம் நிம்மதி அடையலாம்.

## தனுசு

கணவன், மனைவி உறவுகளில் இருந்துவந்த நீண்டகால மனக்கசப்புகள் தீர்ந்து ஒற்றுமையுடன் காணப்படுவார்கள். குழந்தைகளின் மனமகிழ்ச்சிக்காக நீண்டதூர உல்லாசப் பயணங்களை மேற்கொள்ளுவீர்கள். தந்தை, மகன் உறவுகளில் இருந்துவந்துள்ள மனக்கசப்புகள் குறைந்து ஒற்றுமையுடன் காணப்படுவார்கள். பிள்ளை இல்லாதவர்களுக்கு இறையருளால் புத்திரபாக்கியம் கிடைக்கும் காலமாகும். வரவேண்டிய மனைவி வழிச் சொத்துக்களும் மற்றும் பணமும் கை வந்துசேரும் காலமாகும். புதிய வேலை வாய்ப்புகளுக்காக மற்றவர்களை நம்பிப் பணம்கொடுத்து ஏமாற்றம் அடையவேண்டாம்.

## மகரம்

மனைவி வழியிலான சொந்த பந்தங்களுடன் சிற்சில கருத்து வேறுபாடுகள் வந்துபோகலாம். குடும்பத்தில் இதுநாள்வரை தடைப்பட்டுவந்த திருமணம் போன்ற சுபகாரிய நிகழ்ச்சிகள் நடைபெறும். பொருளாதாரம் சுமாராகக் காணப்படும். விளையாட்டுத் துறை சார்ந்தவர்களுக்குப் பரிசு மற்றும் பாராட்டுதல் கிடைக்கும். புதிய ஆடை ஆபரணங்களை வாங்குவதைச் சற்று தள்ளிப்போடவும். விட்டுப்போன பழைய பிரச்சினைகள் மீண்டும் தலைதூக்கும். பிள்ளைகளால் தொல்லைகள் ஏற்பட்டாலும் அவர்களால் பெயர், புகழ் போன்றவை கிடைக்கும். புதிய ஆடை மற்றும் ஆபரணங்களை வாங்குவீர்கள்.

## கும்பம்

உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு எதிர்பார்த்த இடங்களுக்கு இடமாற்றம் ஏற்படலாம். ஒரு சிலருக்கு வீடு மற்றும் தொழிற்சாலைகளைத் திருத்திக்கட்ட வாய்ப்பு உள்ளது. கைவிட்டுப் போன பொருட்கள் நண்பர்களின் உதவியால் திரும்பக் கிடைக்கும். தீராத நாட்பட்ட நோய்களுக்கு புதிய மருத்துவரின் உதவிகளை நாடுவீர்கள். கணவன், மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும். பழைய வீடு வாகனங்களைப் பழுதுபார்ப்பதன் மூலமாகப் பொருட்செலவுகள் வந்துசேரும். நில புலன்கள் சம்பந்தமான பழைய வழக்குகள் மீண்டும் தொடரும். காதல் விசயங்களில் பெண்களிடம் மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்துகொள்வது நல்லது.

## மீனம்

பிரிந்துபோன கணவன், மனைவி திரும்ப ஒன்றுசேருவதற்கான வாய்ப்பு உள்ளது. மாணவர்கள் கல்வியில் மிகுந்த எச்சரிக்கையுடன் பயின்றுவருவது நல்லது நண்பர்களின் வீட்டுச் சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்ளுவீர்கள். காதல் சம்பந்தான நல்ல செய்திவந்துசேரும். விவசாயிகளுக்கு நல்ல இலாபம் கிட்டும். நாட்பட்ட தீராத நோய்கள் தீருவதற்காக புதிய மருத்துவர்களின் உதவிகளை நாடுவதன்மூலம் நோய் தீரும். வெளிநாட்டில் வசிப்பவர்கள் தாய்நாடு சென்று திரும்பி வருவதற்கான வாய்ப்புகள் உள்ளது. புதிய கடன்வாங்கிப் பழைய கடன்களை அடைப்பதற்கு முயற்சிப்பீர்கள்.

Regd. as a News paper at the G.P.O.(QD/86/NEWS/2012)

## மகிழ்ச்சி



கார்ட்டூன் திரைப்படமொன்றில் நடித்து திருமணம் செய்துகொண்ட குள்ளத் தம்பதியினருக்கு தற்போது அழகிய குழந்தையொன்று பிறந்துள்ளது. ஸ்னோவைட் அண்ட் செவன் ட்வார்ப்ஸ் (Snow White and the Seven Dwarfs) கார்ட்டூனில் க்ரம்பி மற்றும் தொம்போ எனும் குள்ள இன கதாபாத்திரத்தில் நடித்த ஜோடியே தற்போது கையில் குழந்தையுடன் வலம் வருகின்றனர். இவர்கள் ஸ்னோவைட் அண்ட் செவன் ட்வார்ப்ஸ் கார்ட்டூனில் வரும் முக்கிய கதாபத்திரத்தில் நடித்தவர்கள். நடிக்கும்போது இவர்கள் இருவருக்குமிடையில் காதல் மலர்ந்தது. பின்னர் இருவரும் கடந்த வருடம் ஏப்ரல் மாதத்தில் திருமணம் செய்துகொண்டார்கள்.

தற்போது, குழந்தையை குழந்தை பராமரிப்பு நிலையமொன்றில் பராமரிப்புக்காக வைத்துவிட்டு, அபிநய நாடகங்களுக்காக மேடையேறும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். "நான் முதல் முறையாக வைட்பீல்டை கண்டபோது, எனக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது. அவரைப் போன்ற எவரையும் எனது வாழ்க்கையில் நான் சந்தித்ததில்லை. நான் கர்ப்பமாக இருக்கும்போது, மிகவும் வருத்தப்பட்டேன். ஆனால் தற்போது நானும் எனது குழந்தையும் சந்தோஷமாக இருக்கின்றோம்" என்று திருமதி வைட்பீல்ட் தெரிவித்துள்ளார்.






## இரக்கம்

குதிரைகளை ஓட்டப் பந்தயங்களுக்காக மாத்திரமே பலர் வாங்குவதுண்டு. அந்த குதிரைகளை பயன்படுத்தி பலவாறு வருமானத்தை உழைத்துக்கொண்டாலும் அது ஏதேனும் சுகவீனமுற்று, அதனால் ஓடமுடியாது என்று தெரிந்தால் குதிரையை சுட்டுக்கொல்வது வழக்கமாகிவிட்டது.

எனினும் குதிரைகளை செல்லப்பிராணியாக வீட்டில் வளர்த்து வருபவர்களும் உண்டு. இவ்வாறு ஒரு வீட்டில் செல்லமாக வளர்க்கப்பட்டுள்ள குதிரையொன்று சுமார் 2 மீற்றர் ஆழமான கிணற்றுக்குள் விழுந்து அழுதுகொண்டிருந்த சம்பவம் பலரை கண்கலங்கச் செய்துள்ளது. கிணற்றுள் விழுந்து அழுதுகொண்டிருந்த குதிரையை அவ்வழியே சென்ற பொலிஸ் அதிகாரி ஒருவர் எதேச்சையாக பார்த்துள்ளதுடன், அதன்மீது இரக்கம் கொண்டு குதிரையின் உரிமையாளர்களிடம் அது தொடர்பில் அறிவித்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து தெரியவந்ததும் குதிரையின் உரிமையாளர்கள் விலங்கு பாதுகாப்பு மையத்துக்கும் தீயணைப்பு படையினருக்கும் தெரிவித்துள்ளனர். பல மணிநேர போராட்டத்துக்குப் பின்னர் குதிரை மீட்கப்பட்டுள்ளது. எனினும் குதிரையின் பின்னங் கால்களில் காயங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் மீட்டெடுப்பதற்கு 20,000 பவுண்ட் செலவழிக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## இப்படியும் ஒரு மனிதரா?



அமெரிக்காவின் பிரபல தொழில் நகரமான Detroit-il சேர்ந்தவர் ஜேம்ஸ் ராபர்ட்சன்(வயது 56). இவர் வேலை செய்துவரும் நிறுவனத்தில் கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பே பேருந்து வசதியை நீக்கிவிட்டனர். ஆனாலும் சிறிதும் மனம் தளராத ஜேம்ஸ், தினமும் வெயில், பனி, மழை போன்ற எந்தப் பாதிப்பையும் பொருட்படுத்தாமல் 12 ஆண்டுகளாக நடந்து பணிக்கு சென்றுவருகிறார்.

தற்போது இந்த செய்தி சமூக வலைத்தளங்களில் பரவவே, ஜேம்ஸுக்கு பலர் ஆதரவுதர முன்வந்தனர். தொடர்ந்து பல முகம்தெரியாத நபர்கள் ஜேம்ஸ் கார் வாங்குவதற்காக நிதி திரட்ட தொடங்கியதில் தற்போது அவருக்கு சுமார் 3,00,000 அமெரிக்க டொலர்கள் நிதியுதவி கிடைத்துள்ளது. இந்நிலையில் கார் நிறுவனம் ஒன்று 37,000 அமெரிக்க டொலர்கள் மதிப்பிலான கார- ...ினை




## மனிதாபிமானம் மறத்துப்போகவில்லை





இங்கிலாந்தின் அல்விச் என்ற நகரில் வாழ்ந்து வரும் நான்கு வயதுடைய சிறுவன் பிறக்கும்போதே மாற்றுத்திறனாளியாக பிறந்துள்ளான். ஆனால் சமீபத்தில் இவருக்கு ஏற்பட்ட காக்காய் வலிப்புநோய் காரணமாக, சிறுவனால் இனி நடக்கமுடியாது என்றநிலை ஏற்பட்டுள்ளது. இதனால் அவருக்கு சக்கர கதிரையும் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால், சக்கர கதிரையை பயன்படுத்தி வீடுமுழுவதும் வலம்வரும் அளவுக்கு வீட்டின் அமைப்பு இருக்கவில்லை. இதனால், சிறுவனின் பெற்றோர் அவருக்கென்று புதிய வீடொன்றை வடிவமைப்பதாக முடிவெடுத்துள்ளனர். வீட்டை நிர்மாணிப்பதற்கு அதிகூடிய பணமோ, அதற்கான வசதி-களோ இல்லாத நிலையில், கட்டடப் பணியாளர்கள், 100,000 பெறுமதியான வேலையை இலவசமாக செய்து கொடுத்துள்ளனராம். அதற்கும் மேலதிகமாக வேலை செய்பவர்கள் பணம் செலுத்தி பொருட்களையும் வாங்கியுள்ளனராம்.

## கடதாசிகளினாலான திருமண ஆடை

திருமணம் என்பது வாழ்க்கையில் ஒரு தடவை மாத்திரம் நடைபெறுவது என்பதால், திருமணத்தின்போது திருமணத் தம்பதிகள் அவர்களுக்கான ஆடைகளை நேரத்தை செலவுசெய்து தேடி எடுத்துக்கொள்வர்.

இது இவ்வாறிருக்கையில், உக்ரேன் நாட்டைச் சேர்ந்த கலைஞர் ஒருவர் கடதாசிகளினாலான திருமண ஆடைகளை தயாரித்துள்ளார்.

அஸ்யா கொசினா என்பவர் பண்டைய கால ஓவியங்கள் பற்றியும் மொங்கோலிய திருமண ஆடைகள் பற்றியும் படித்துள்ளார். இதனூடாக அவர், திருமண ஆடைகளை புதிதாக வடிவமைப்பதை பழக்கப்படுத்திக் கொண்டுள்ளார்.



## கல்லிலே கலை வண்ணம்

பொதுவாகவே இயற்கை என்பது மனித வாழ்விற்கு ரம்மியம் சேர்ப்பது. கடும் உழைப்பினால் சோர்வுற்று இருக்கும் மனித மனங்களை கிளர்ந்தெழச் செய்யும் வல்லமை படைத்தது. இவ்வாறான இயற்கை வனப்புக்களில் மலைத்தொடர்களுக்கு பங்குண்டு. அப்படிப்பட்ட மலைக்குன்று ஒன்றைச் செதுக்கி சிவனாகவும் யானையாகவும் உருமாற்றி இருக்கின்றார் ஒரு சிற்பி. இதனைக் காண்கின்றவர்கள் மத வேறுபாடுகளையும், நாத்தீகக் கருத்துக்களையும் கடந்து சிற்பியின் கை வண்ணத்திற்காக மரியாதை செய்கின்றார்கள். ஆம் தகுதியான மரியாதைதான்.





இப்பத்திரிகை 373, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அற்புதன் அச்சகத்தில் டி.டி எண்டபிரைஸஸ் (பிரைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் பெப்ரவரி 26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Registered as a News Paper in Sri lanka

இலவச இணைப்பு

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும் உயர்தரத்துடனும் குறைந்த செலவுடனும் குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி, பஸ்ரியன் சந்தி, யாழ்ப்பாணம்.

முரசு - 05 | திருவள்ளுவர் ஆண்டு 2046 | மாசி 14 | வியாழக்கிழமை (26.02.2015) | பக்கங்கள் IV | ஓசை - 149

## அபிவிருத்திகளின் தடைகளுக்கு கூட்டமைப்பே பொறுப்புக் கூற வேண்டும்

### ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகம் தெரிவிப்பு



கடந்த காலங்களில் மக்களுக்கு எதையும் பெற்றுக்கொடுக்காத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எதிர்காலங்களிலும் எதையும் பெற்றுக் கொடுக்க மாட்டார்கள் என்பதுடன் இருக்கிறதை இல்லாமல் செய்வதும் பலவீனப்ப டுத்துவதுமே அவர்களின் சுயலாப அரசியல் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி யின் தலைமையலுவலகத்தில் அண்மையில் இடம்பெற்ற தொகுதி அமைப்பாளர்கள் மற்றும் முக்கியஸ்தர்களுடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

(IV) ஆம் பக்கம் பார்க்க

## ஐ.நா. செயலாளரின் பிரதிநிதி இலங்கைக்கு விஜயம்

(கொழும்பு)



ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் அரசியல் அலுவல்களுக்கான பிரதிநிதி ஜெப்ரி பெல்ட்மன் எதிர்வரும் 28ஆம் திகதி சனிக்கிழமை இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார் என ஐ.நா. செயலாளர் நாயகத்தின் ஊடகப் பேச்சாளர் ஸ்டெபான் டுஜாரிக் தெரிவித்துள்ளார்.

இவ்விஜயத்தின் போது ஜெப்ரி பெல்ட் மன் இலங்கையின் பல உயர்மட்ட அதி காரிகளையும், அரசியல் கட்சி பிரதிநிதி கள், சிவில் சமூக பிரதிநிதிகளையும் சந்திக்கவுள்ளார்.

ஜெப்ரி பெல்ட்மன் மேற்கொள்ளும் முதலாவது விஜயம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

# அரை நிர்வாணப் போராட்டம்

## வடமாகாண விவசாயிகள் மாகாண சபைக்கு எச்சரிக்கை

வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனிடம் 3 கோரிக்கைகளை முன்வைத் துள்ளோம். இரண்டு வாரங்களு க்குள் அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றாவிட்டால் அரைநிர் வாணப் போராட்டம் நடத்தப் போவதாக போரால் பாதிக்கப் பட்ட மக்கள் இயக்கத்தின் தலை வர் வி.சகாதேவன் நேற்றுத் தெரி வித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

வடமாகாணத்தில் நெல்லுக்கு உத்தரவாத விலை நிர்ணயிக் கப்பட்டிருந்தும் நிர்ணயிக்கப் பட்ட விலையில் கொள்முதல் செய்யப்படவில்லை. இதனால் விவசாயிகள் பெரும் நட்டத்தை எதிர்நோக்கியுள்ளனர். இது தொடர்பாக விவசாய அமைச்சர் பொன்னுத்துரை ஐங்கரநேசனும், அதிகாரிகளும் நடவடிக்கை எடு க்க வேண்டும்.

இரணைமடு குடிநீர் விநியோ கத் திட்டத்துக்கான விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்தால் 3,450 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. அதில் 1,200 மில்லியன் ரூபாவுக்கு வேலைத் திட்டங்கள் நடைபெற்ற தாக கூறப்படுகின்ற போதிலும், நடை பெற்ற வேலைத்திட்டங்க ளுக்கு உரிய அறிக்கை வெளி யிட வேண்டும்.

கமநல சேவை உதவி ஆணையாளர் ஊடாக வறட்சி நிதிக்கு ஒதுக்கப்பட்ட 150 மில்லி யன் ரூபாவில் 60 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டதாகக் கூறப்பட்டு மிகுதி 90 மில்லியு ரூபா எங்கு என்று மக்களுக்கு தெரிவிக்க வேண்டும்.

இரண்டு வாரங்களுக்குள் இந்தக் கோரிக்கைகள் நிறை வேற்றப்படாவிட்டால், வட மாகாண விவசாயிகள் ஒன்றி ணைந்து அரை நிர்வாணப் போராட்டம் நடத்தவுள்ளதாக அவர் கூறினார். (25)

## அரசியல் நாடகம்

(கொழும்பு)


தேசிய அரசாங்கம் என்ற ஐக்கிய தேசியக் கட்சியின் திட்டமானது ஓர் அரசியல் நாடகமாகவே நோக்கப்பட வேண்டுமென ஜனநாயக இட துசாரி முன்னணியின் தலை வர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினை மலினப் படுத்தும் ஐக்கிய தேசியக் கட் சியின் சூழ்ச்சித் திட்டமாகவே இதனை நோக்கப்பட வேண் டும்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பிரதமர் வேட் பாளராக மகிந்த ராஜபக் ஷவை நியமிக்குமாறு விடுக் கும் கோரிக்கை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிளவுப டுத்தும் நோக்கில் அல்ல என அவர் தெரிவித்துள்ளார்.

## தமிழரசுக் கட்சியின் கொள்கை பிடிக்கவில்லை

### கூறுகிறார் வித்தியாதரன்



(சூரிச்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியில் இருந்து விலகி விட்டேன். அவர்களின் கொள்கை பிடிக்க வில்லை என சிரேஷ்ட ஊடகவியலாளர் வித்தி யாதரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, சுவிஸ் பழைய மாணவர் சங்கம் அமைப்பின் தலைவர் த.நீதி ராஜா தலைமையில் வித்தியின் 'என் எழுத்தாயுதம்' நூலின் அறிமுக விழா சுவிஸின் சூரிச் நகரில் இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியி லேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

## மனித உரிமை மீறல் தொடர்பாக புதிய அரசின் நடவடிக்கை அவசியம்

### சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்து

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து புதிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என சர்வதேச மன் னிப்புச்சபை வலியுறுத்தியுள் ளது. லண்டனைத் தளமாகக் கொண்டியங்கும் சர்வதேச மன் னிப்புச்சபை 2014 ஆம் ஆண்டு குறித்த தனது ஆண்டறிக்கையை வெளியிட்டுள்ளது. அந்த அறிக் கையிலேயே மேற்படி விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் குறித்து ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் 29 நாடுகள் உட்பட 160 நாடு களில் நிலவிய போக்குகள் குறி த்து சர்வதேச மன்னிப்புச் சபை தனது அறிக்கையில் சுட்டிக்காட் டியுள்ளது. அதில் இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்த நீண்ட பட்டி யலை மன்னிப்புச்சபை வெளி யிட்டுள்ளது. இலங்கையில் கார ணமற்ற கைதுகள், சித்திரவதை கள், பயங்கரவாதத் தடைச்சட் டத்தின் கீழான நடவடிக்கைகள், காணாமற்போனோரின் உறவு களை அச்சுறுத்துதல், மதச் சிறு பான்மையினர் மீதான அபாய கரமான தாக்குதல்கள் போன் றன இடம்பெற்ற வண்ணமே

(IV) ஆம் பக்கம் பார்க்க

## நிலத்தடி நீரில் கழிவு எண்ணெய்; ஆராய நோர்வே குழு வருகை

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் பிரதேசத்தில் நிலத்தடி நீரில் கழிவுஎண்ணெய் கலந்துள்ளமை தொடர்பாக ஆராய்வதற்காக நோர்வே நாட்டு நிபுணர்கள் வருகை தந்துள்ளனர். இவர்கள் இப்பிரச்சினை தொடர்பாக வடக்கு விவசாய அமைச்சர் பொ.ஐங்கர நேசனை அவரது அலுவலகத்தில் நேற்று சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்கள்.

நிலத்தடி நீரில் கழிவு எண்ணெய் கலந்துள்ளமை பற்றி ஆராய்வதற்காக வடக்கு முதல்வர் க.வி.விக்னேஸ்வரனின் அறிவுறுத்தலுக்கமைய நிபுணர் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கிழக்குப் பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழகம் மற்றும் கொழும்புப் பல்கலைக்கழக கத்தைச் சேர்ந்த துறைசார்ந்த வல்லுநர்களைக் கொண்ட இந் நிபுணர்குழு நிலத்தடியில் எண்ணெய் மாசின் மூலம், அது பரவும் திசை, நிலத்தடி நீரில் கலந்துள்ள எண்ணெய் மாசின் அளவு, எண்ணெய் மாசில் அடங்கியுள்ள

(IV) ஆம் பக்கம் பார்க்க

## இனப்படுகொலை தீர்மானம் கூட்டமைப்பின் தேர்தல் தந்திரம்

### நீதியமைச்சர் குற்றச்சாட்டு

(லண்டன்)

வடமாகாண சபையினால் நிறைவேற்றப்பட்ட இனப்படுகொலை தொடர்பான தீர்மானத்திற்கு சட்ட அந்தஸ்து கிடையாது. தேர்தல் வரும் நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல் செய்ய முயற்சிக்கின்றது.

போர் குறித்த உள்நாட்டு விசாரணை ஒன்றை ஆரம்பிப்பதற்கான முடிவை இன்னமும் அரசாங்கம் எடுக்கவில்லை என நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அதிகாரபூர்வ விஜயமாக லண்டனுக்கு விஜயம் செய்துள்ள அவர், பி.பி.சி. செய்திச் சேவைக்கு வழங்கிய நேர் காணல் ஒன்றிலேயே இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

(IV) ஆம் பக்கம் பார்க்க

# வாளால் வெட்டி நகைகள் கொள்ளை

## கப்பூது பகுதியில் துணிகரம்

(கரணவாய்)

சாவகச்சேரி நகரசபை உத்தியோகத்தர் ஒருவரை வாளால் வெட்டி நகைகள் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் கப்பூது பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கரவெட்டியில் இருந்து சாவகச்சேரிக்கு திங்களன்று இரவு மோட்டார் சைக்களில் சென்ற வேளையில் கப்பூது பகுதியில் இனந்தெரியாதோரால் வாளால் வெட்டப்பட்டதுடன் அவர் அணிந்திருந்த நகைகளும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரியைச் சேர்ந்த எஸ்.உதயகுமார் என்பவரே இவ்வாறு வாள் வெட்டுக்கு இலக்காகியதுடன் வைத்தியசாலையில் சிகிச்சையும் பெற்றுள்ளார். இது குறித்து பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

(18)

அனைவருக்கும் பகிரப்பட்ட, விஸ்தரிக்கப்பட்ட, சமனான பரிசமைப்பு



**நியத்த ஜய**

உத்தியோகபூர்வ முடிவு

| | |
|---|---|
| வெற்றி வாரம் - | 337 |
| திகதி - | 2015.02.24 |
| வர்ணம் - | மஞ்சள் |

வெற்றி இலக்கங்கள் — ஆங்கில எழுத்து

**15 57 62 64 O**

பரிசுத் தொகை ரூபா. **23,749,720/-** வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுக்கு | 1,000,000/- | 01 | 1,000,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 50,000/- | 18 | 900,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்களுக்கு | 1,000/- | 198 | 198,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 1,000/- | 354 | 354,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்களுக்கு | 60/- | 9411 | 564,660/- |
| ஏதேனும் 1 இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 40/- | 4815 | 192,600/- |
| ஏதேனும் 1 இலக்கத்திற்கு | 20/- | 123771 | 2,475,420/- |
| ஆங்கில எழுத்திற்கு | 20/- | 17937 | 358,740/- |
| நான்கு இலக்கங்கள மற்றும் ஆங்கில எழுத்து பொருந்துவதன் மூலம் | 23,749,720/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 6,043,420/- |

எதிர்வரும் வெள்ளிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்தொகை ரூபா. **23,991,440/-**

2015.02.27ம் திகதி வெள்ளிகிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது நீல வர்ண டிக்கட்களாகும்

வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,
யூனியன் ப்லேஸ், கொழும்பு - 02.
தொ.பே: 011 2333546/47

web : www.dlb.lk

(C/3818)

### மழையினால் அறுவடை பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் கடந்த இரு தினங்களாக பெய்து வரும் மழை காரணமாக மனித வலுவினால் மேற்கொள்ளப்படும் காலபோக நெல் அறுவடை பாதிப்படைந்துள்ளதுடன், சூடடிக்கும் செயற்பாடும் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

### தொழில்நுட்ப ஆய்வுகூட திறப்புவிழா

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட தொழில்நுட்ப ஆய்வுகூடத்தின் திறப்பு விழா இன்று காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. கல்லூரியின் அதிபர் ந.சர்வேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

(11)

### DDTV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| நேரம் | வியாழக்கிழமை |
|---|---|
| Am 05.00 | ஆலய தரிசனம் (பக்திப் பாடல்கள்) |
| Am 07.00 | காலைக் கதிர் |
| Am 08.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00 | கொஞ்சம் கலாட்டா |
| Am 09.58 | காலை செய்திகள் |
| Am 10.00 | மக்கள் முகம் |
| Am 10.30 | சிரிக்க சிரிக்க |
| Am 11.30 | சிரிக்க சிரிக்க |
| PM 12.00 | அதிர்வுகள் |
| PM 12.30 | Hello DD |
| PM 01.20 | பாடல்கள் |
| PM 01.30 | திரைப்படம் |
| PM 03.58 | மாலை செய்திகள் |
| PM 04.00 | மழலைகள் |
| PM 05.00 | சிரிக்க சிரிக்க |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | அதிர்வுகள் |
| PM 08.00 | பிரதான செய்திகள் |
| PM 08.20 | பாடல்கள் |
| PM 08.30 | Hello DD |
| PM 09.00 | திரைப்படம் |
| PM 11.30 | நீங்காத நினைவுகள் |

## பாராட்டி வாழ்த்துகிறோம்





2014 ஆம் ஆண்டுக்குரிய பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தினூடாக நட்சத்திரப் பெண்கள் மகளிர் விவகாரக் குழுவிற்கு எமது தேவையினை அறிந்து வாழ்வாதாரத்தை முன்னேற்றும் வகையில் உழுந்து அரைக்கும் இயந்திரம், தையல் இயந்திரங்கள் மற்றும் சமையல் பாத்திரங்களை வழங்கியமைக்காக கௌரவ நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமான

**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களுக்கும்,

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்

**சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்)**

அவர்களுக்கும்,

வடமாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர்

**சி.தவராசா**

அவர்களுக்கும்,

நல்லூர் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவரும் ஈ.பி.டி.பி.யின் நல்லூர் பிரதேச அமைப்பாளருமான

**அம்பலம் இரவீந்திரதாசன்**

அவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதோடு இவர்கள் பணி தொடர எமது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.






**நட்சத்திரப் பெண்கள் மகளிர் விவகாரக் குழு,**

**கிராம மக்கள் (சங்கிலியன் தோப்பு, நல்லூர்)**

(C/3826)

# செல்வா நகர் மக்களின் கோரிக்கை நிவர்த்தி செய்யப்படாமை துரதிஷ்டமானது

## நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் தெரிவிப்பு



கிளிநொச்சி செல்வாநகர் பாடசாலை தரம் உயர்த்தப்படவேண்டும் எனும் செல்வாநகர் மக்களின் கோரிக்கை நியாயமானது. ஆனால் இந்த நியாயமான கோரிக்கை இதுவரை தீர்த்து வைக்கப்படாமை துரதிஷ்டவசமானது. என நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித்தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் செல்வாநகர் பாடசாலைக்கு தனது இரண்டு இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டிலிருந்து பல்லூடக தெறி கருவி (மல்ரி மீடியா), ஒலி பெருக்கி தொகுதிகள் என்பவற்றை மாணவர்க்ளிடம் வழங்கி வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்ட பெற்றோர்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

செல்வாநகர் கிராமத்திலிருந்து இடைநிலை கல்விக்காக 11 வயது பிள்ளையொன்று ஐந்து அல்லது ஆறு கிலோ மீற்றருக்கு அப்பால் சென்று கல்வி கற்கவேண்டிய நிலைமை காணப்படுகிறது. பொருளாதாரத்தில் நலிவுற்ற செல்வாநகர் பெற்றோர்களுக்கு இது ஒரு பெரும் சுமையே. அதுமட்டுன்றி இவ்வளவு தூரத்திற்குச் சென்று கல்வி கற்பதில் உள்ள இடர்கள், நெருக்கடிகள் காரணமாக பல மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லாமல் இடை விலகி வருவதும் ஒரு கவலைக்குரிய விடயமாகும். எனவேதான் இந்த பிரதேச மக்கள் தங்களின் பாடசாலையினை தரம் உயர்த்தி தருமாறு தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றனர்.

40 வருடகால கிராமத்தில் 25 வருடங்களாக இந்த பாடசாலை ஆரம்ப பாடசாலையாகவே இருப்பது என்பது கடந்த காலங்களில் இந்த கிராமம் எந்தளவுக்கு புறக்கணிப்புகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது என்பதற்கு ஒரு சிறந்த உதாரணமாகும் எனத்தெரிவித்த நடாளுமன்ற உறுப்பினர்,

ஆசிரியர் பற்றாக்குறையை ஒரு காரணமாக காட்டி செல்வாநகர் மக்களின் நியாயமான கோரிக்கையை புறந்தள்ளிவிட முடியாது. வடமாகாணத்தில் ஆசிரியர்களை நியாயமாக பங்கீடு செய்ய முடியாத நிர்வாக குறைபாட்டிற்கு மக்களின் நியாயமான கோரிக்கைகள் பழியாக்கப்பட முடியாது. எனவே செல்வாநகர் போன்ற கிராமங்களில் கல்விக்காக ஏங்கும் மாணவர்களினதும், பெற்றோர்களினதும் உணர்வுகளை புரிந்து கொண்டு செயற்படவேண்டும். மக்களும் தங்களின் நியாயமான கோரிக்கையில் உறுதியாக இருக்க வேண்டும் உழைக்கவும் வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

தொடர்ந்தும் கடந்த காலங்கள் போன்று பாடசாலையின் தேவைகளில் அக்கறையோடு செயற்படுவதோடு மாவட்ட கல்வி அபிவிருத்திக் குழுவின் ஊடாக தரம் ஐந்து மாணவர்களுக்கு நடத்தப்பட்ட வினாத்தாள் பயிற்சிகள் கருத்தரங்குகள் தொடர்ந்தும் நடத்தப்படும் எனவே மாணவர்கள் தங்களின் கல்விச் செயற்பாட்டில் சிறந்து விளங்கி கிராமங்களின் கல்வி வளர்ச்சியில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

பாடசாலை முதல்வர் பி. கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பச்சிலைப்பள்ளி பிரதேசசபை உறுப்பினர் அன்ரன் அன்பழகன், கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் மகேந்திரன், செயலாளர் யூலியன், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர், கமக்கார அமைப்பின் பிரதிநிதிகள், பெற்றோர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# மன்னாரில் திடீர் பரிசோதனை 16 வர்த்தகர்களுக்கு தண்டம்

வன்னி மாவட்ட நுகர்வோர் அலுவலக அதிகார சபை மன்னார் பகுதியில் வர்த்தக நிலையங்களில் மேற்கொண்ட திடீர் பரிசோதனைகளில் காலாவதியான மற்றும் விலைகள் காட்சிப்படுத்தாமல் கூடிய விலையில் பொருள்கள் விற்றமை தொடர்பாக 16 வர்த்தகர்களுக்கு நேற்று முன்தினம் மன்னார் மாவட்ட, நீதவான் நீதிமன்ற நீதிபதி அலெக்ஸ்ராஜா ஆசீர்வாதம் கிறேசியன் தலா 3 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதித்துள்ளார்.

விலைகளைக் காட்சிப்படுத்தாது அரிசி, சீனி விற்றமை, பனடோல் கூடிய விலைக்கு விற்றமை, காலாவதியான ஷம்போ போத்தல் காட்சிப்படுத்தியமை, கூடிய விலைக்கு மைலோ பானம் விற்றமை, விலை காட்சிப்படுத்தாது பாண் விற்றமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டே இந்த வர்த்தகர்கள் வன்னி மாவட்ட நுகர்வோர் அலுவலக அதிகார சபை அதிகாரிகளால் முற்படுத்தப்பட்டனர். இந்த வர்த்தகர்கள் நீதவான் முன்னிலையில் தங்கள் குற்றங்களை ஒப்புக் கொண்டதையடுத்து ஒவ்வொருவருக்கும் தலா 3 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

# கலாசாலை பெறுபேற்று பத்திரம் பெற்றுக்கொள்ள முடியும்

## கலாசாலை அதிபர் அறிவிப்பு

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் 2012 - 2014 கல்வியாண்டில் கற்கை நெறிகளை மேற்கொண்டு 2014 ஆம் ஆண்டு இறுதிப் பரீட்சைக்குத் தோற்றி அண்மையில் பரீட்சைத் திணைக்களம் வழங்கிய பெறுபேற்றுப் பத்திரத்தைப் பெற்றுக் கொண்டவர்களுக்கு மேலதிகமாக இன்னொரு பெறுபேற்றுப் பத்திரத்தை கலாசாலை நிர்வாகம் வழங்கி வருகின்றது. கற்கை நெறி விபரம் மற்றும் கற்கை நெறிச் சான்றிதழ், செல்லுபடியாகும் திகதி என்பவற்றை உள்ளடக்கியதாக இச்சான்றுப் பத்திரம் வழங்கப்படுகின்றது.

2014 ஆம் ஆண்டு பரீட்சைக்குத் தோற்றிச் சித்தியெய்திய ஆசிரியர்கள் அலுவலக நேரத்தில் இச்சான்றிதழைப் பெற்றுக் கொள்ளமுடியும் எனவும், நேரில் வரமுடியாதவர்கள் உரிய விபரங்க ளைக் கடிதம் மூலம் சமர்ப்பித்து வேறொருவர் மூலம் பெற்றுக்கொள்ளலாம் எனவும் கலாசாலை அதிபர் வீ.கருணலிங்கம் அறிவித்துள்ளார்.

# எமிரேட்ஸ்க்கு எதிரான ஆட்டத்தில் அயர்லாந்து 2 விக்கெட்டுக்களால் வெற்றி



உலகக்கிண்ணத் தொடரின் 16ஆவது லீக் ஆட்டத்தில் 'பி' பிரிவில் உள்ள அயர்லாந்தும், ஐக்கிய அரபு எமிரேட்ஸ"ம் நேற்று மோதின.

இதில் நாணய சுழற்சியில் வென்ற அயர்லாந்து களத்தடுப்பை தெரிவு செய்தது. இதையடுத்து எமிரேட்ஸ் அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக பெரெங்கரும், அம்ஜத் அலியும் களமிறங்கினர்.

இருவரும் நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். 12 ஆவது ஓவரின் போது ஸ்டெர்லிங் பந்தில் பெரெங்கர் அவுட்டானார். இதைத் தொடர்ந்து 14 ஆவது ஓவரில் கிருஷ்ண சந்திரன் டக் அவுட்டானார்.

தொடக்கத்திலிருந்து பொறுமையாக விளையாடி வந்த அம்ஜத் அலியும் 45 ஓட்டங்களில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

அடுத்து வந்த எஸ்.பி.பாட் டீல் 2 ஓட்டங்களில் ஆட்டமிழந்து வெளியேறினார். 32 ஆவது ஓவரின் போது குர்ரம் கான் 36 ஓட்டங்களில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

35 ஆவது ஓவரில் முஸ்தபா 2 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இதனால் 131 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளை இழந்து எமிரேட்ஸ் அணி சிக்கலான நிலையில் இருந்தது.

இந்நிலையில் அன்வருடன் ஜாவேத் ஜோடி சேர்ந்தார். சிறப்பாக விளையாடிய ஜாவேத் 47 ஆவது ஓவரில் 42 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

எனினும் தொடர்ந்து அதிரடியாக விளையாடிய அன்வர் 106 ஓட்டங்களை எடுத்து வெளியேறினார். கடைசி 10 ஓவரில் மட்டும் எமிரேட்ஸ் அணி 100 ஓட்டங்களை எடுத்தது. 50 ஓவர் முடிவில் அந்த அணி 9 விக்கெட் இழப்புக்கு 278 ஓட்டங்களை எடுத்தது.

தொடர்ந்து 279 ஓட்டங்கள் என்ற ஓட்ட இலக்குடன் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து 49.2 ஓவர் முடிவில் 8 விக்கெட்கள் இழப்பிற்கு 279 ஓட்டங்களைப் பெற்று 2 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

போட்டியானது இரு அணியினருக்கும் கடுமையான போட்டியாக விளங்கிய நிலையில் அயர்லாந்து மிகுந்த சிரமத்தின் மத்தியில் வெற்றி பெற்றது.

துடுப்பாட்டத்தில் அயர்லாந்து அணியின் சார்பில் வில்சன் 80 ஓட்டங்களையும் கெவின் ஓ பிரையன் 50 ஓட்டங்களையும் பெற்றுக் கொள்ள ஜோய்சே 37, பால்பிரினே 30 மற்றும் நியால் ஓ பிரையன் 17 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இதன்படி இரு போட்டிகளை எதிர் கொண்டு இரண்டிலும் வெற்றி பெற்று 4 புள்ளிகளுடன் அயர்லாந்து பிரிவு 'பி'யில் 3 ஆவது இடத்தில் உள்ளது.

# வலி.தென்மேற்கு வெதுப்பகங்கள் கிணற்று நீரைப் பயன்படுத்த வேண்டாம்

## சுகாதாரப் பகுதியினர் அறிவிப்பு

(மானிப்பாய்)

வலி.தென்மேற்குப் பகுதிகளில் இயங்கி வரும் வெதுப்பகங்கள் மற்றும் உணவ கங்களின் உற்பத்திகளுக்கு கிணற்று நீரைப் பயன்படுத்த வேண்டாம் என்று சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் ஒரு சில கிணறுகளில் காணப்பட்டு பரிசோதனை மூலம் உறுதிப்படுத்தப்பட்ட கழிவு ஒயில் தன்மை நாளுக்கு நாள் ஏனைய கிணறுகளுக்கும் பரவியுள்ளது. இந்த நிலையில் அப்பகுதிகளில் இயங்கி வரும் வெதுப்பகங்களையும், உணவகங்களையும் கிணற்று நீரைப் பயன்படுத்த வேண்டாம் என்று அறிவித்துள்ள சுகாதாரப் பகுதியினர் அப்பகுதியிலுள்ள பாடசாலைகளுக்கும் குடிதண்ணீர் வழங்குவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் சுதுமலை, மானிப்பாய், மாசியப்பிட்டி, சண்டிலிப்பாய் ஆகிய இடங்களிலுள்ள சில கிணறுகளில் கழிவு ஒயில் கலந்திருப்பதாக மக்கள் செய்த முறைப்பாட்டை அடுத்து ஒரு சில கிணறுகள் சுகாதாரப் பகுதியினரால் பரிசோத னைகுட்படுத்தப்பட்டபோது சுதுமலை வடக்கு, மாசியப்பிட்டி ஆகிய இடங்களிலுள்ள கிணறுகளில் கழிவு ஒயில் கலந்திருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தற்பொழுது மேற்படி இடங்களிலுள்ள 28 இற்கும் அதிகமான கிணறுகளில் ஒயில் கலந்திருப்பதாக முறைப்பாடு கிடைத்துள்ளது.

இதையடுத்து சுதுமலை வடக்கு, மாசியப்பிட்டி ஆகிய இடங்களில் நான்கு தண்ணீர்த் தாங்கிகள் வைத்து பிரதேச சபையினரால் குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் கழிவு ஒயிலினால் பாதிக்கப்பட்ட இடங்களில் இயங்கி வரும் வெதுப்பகங்களையும், உணவு கையாளும் நிலையங்களையும் கிணற்று நீரைப் பாவிக்க வேண்டாம் என்று அறிவித்துள்ள சுகாதாரப் பகுதியினர் இப்பகுதியிலுள்ள மூன்று பாடசாலைகளுக்கும் குடிதண்ணீர் வழங்குவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை கழிவு ஒயில் பீதியினால் பிரதேச சபையினால் தண்ணீர் வழங்கப்படாத இடங்களில் இருக்கும் பாதிக்கப்பட்ட மக்கள் தற்பொழுது போத்தலில் அடைக்கப்பட்ட குடிதண்ணீரைப் பாவித்து வருகின்றனர்.

# தேர்தல் பிரசாரம் நேற்றுடன் பூர்த்தி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபைகளுக்கான தேர்தல் பிரசாரப்பணிகள் நேற்று நள்ளிரவுடன் பூர்த்தியாகியுள்ளதாக பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம்.மொஹமட் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இப்பிரதேச சபையில் போட்டியிடும் அரசியல் கட்சிகள், சுயேட்சைக் குழுக்கள் தேர்தல்கள் சட்டங்களை கடைப்பிடிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ள தோடு சட்டங்களை மீறும் பட்சத்தில் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் எச்சரித்துள்ளார்.

இப்பிரதேச சபைகளில் நீதியானதும், சுதந்திரமானதுமான தேர்தல் நடைபெறுவதற்குரிய சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாகவும் தேர்தல் ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவித்துள்ளார்.

இரு பிரதேசசபைகளுக்கும் 20 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக ஆறு அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுவைச் சேர்ந்த 162 பேர் போட்டியிடுகின்றனர். கரைத்துறைப்பற்று பிரதேச சபைக்கு 11 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கு ஆறு அரசியல் கட்சிகள் சார்பில் 90 வேட்பாளர்களும், புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு 9 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கு ஐந்து அரசியல் கட்சி மற்றும் ஒரு சுயேட்சைக்குழு சார்பில் 72 வேட்பாளர்களும் களமிறங்கியுள்ளனர்.

# சம்பூர் மக்களின் காணிகளை மீளக் கையளிக்க தீர்மானம்

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டம் சம்பூர் பிரதேசத்தில் மீள்குடியேற்றம் தடைப்பட்டுள்ள தமிழ் மக்களின் காணிகளை அவர்களிடம் மீளக் கையளிப்பது தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான தேசிய நிறைவேற்றுக் குழு தீர்மானித்துள்ளது.

இந்தத் தகவலை தேசிய நிறைவேற்றுக் குழு உறுப்பினரும் ஜே.வி.பி. தலைவருமான அனுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்தத் தீர்மானம் தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அவர், சம்பூர் பிரதேசத்தில் பாரம்பரியமாக வாழ்ந்த தமிழ் மக்கள் அங்கிருந்து முன்னைய அரசாங்கத்தினால் வெளியேற்றப்பட்டு அவர்களது காணிகள் பல்தேசிய கம்பனிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. அங்கு வாழ்ந்த மக்கள் தமது சொந்த மண்ணில் மீள்குடியேற்றப்படாமல் இடம்பெயர்ந்தவர்களுக்கான அகதி முகாம்களில் வைகக்கப்பட்டுள்ளார்கள் என்றார்.

சம்பூர் பிரதேச மக்கள் 2005 ஆம் ஆண்டு போர் காலத்தில் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறியிருந்தார்கள்.

போர் முடிவடைந்திருந்தாலும் அவர்களது மீள்குடியேற்றம் தொடர்ந்தும் தடைப்பட்டுள்ள நிலையில் கடந்த 10 வருடங்களாக அகதி முகாம்களிலே அவர்கள் தொடர்ந்தும் தங்கியுள்ளார்கள்.

## ஜனாதிபதி திருமலை விஜயம்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் முதல் தடவையாக எதிர்வரும் மார்ச் மாதம் 03 ஆம் திகதி திருகோணமலைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

அன்றைய தினம் ஜனாதிபதி மாலை 2.00 மணிக்கு திருகோணமலை மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ள விசேட கூட்டம் ஒன்றிலும் கலந்து சிறப்பிக்கவுள்ளதுடன் விசேட உரையொன்றையும் நிகழ்த்தவுள்ளார்.

இவ்விசேட கூட்டத்தில் கிழக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் உட்பட அரசியல் பிரமுகர்களும் கிழக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசாங்க அதிபர்கள், திணைக்களத்தலைவர்கள் மற்றும் பிரதேச செயலர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

# அதிபர்களுக்கான மீளாய்வுக் கூட்டம்

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான கல்வி அபிவிருத்தி மீளாய்வுக் கூட்டம் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு சுன்னாகம் இராமநாதன் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

கல்வி அபிவிருத்தி தொடர்பான முன்னேற்ற அறிக்கைகளுடன், அதிபர்கள் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். அதிபர்களுக்குப் பதிலாக ஆசிரியர்களை அனுப்பி வைக்கும் நடவடிக்கையினை தவிர்க்குமாறு அதிபர்கள் கேட்கப்பட்டுள்ளனர். (06)

# மகிந்தவின் பாதுகாப்பு பிரிவுக்கு புதல்வர் யோஷித நியமனம்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்புப் பிரிவிற்கு அவரது புதல்வர் யோஷித ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 12 ஆம் திகதி அமுலுக்கு வரும் வகையில் இந்த மாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் பாதுகாப்புப் பிரிவிற்கு தம்மை மாற்றுமாறு கடற்படை அதிகாரி யோஷித, கடற்படைத் தளபதியிடம் கோரியிருந்தார்.

இந்தக் கோரிக்கைக்கமைய யோஷித ராஜபக்ஷ, ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவிற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

யோஷித தற்போது 3 மாத கால விடுமுறையில் இருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

யோஷித ராஜபக்ஷவிற்கு வழங்கப்பட்ட பதவி உயர்வு மற்றும் புலமைப்பரிசில் உரிய முறையில் வழங்கப்படவில்லை எனவும், தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டதாகவும் ஜே.வி.பி குற்றம் சுமத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இனப்படுகொலை....

முன்னைய அரசாங்கத்தினால் போர்க்குற்றங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பான சரியான செயற்பாடுகளைக் கையாளாகாததினாலேயே ஐ.நா.வினால் குழு அமைக்கப்பட்டது.

அதனடிப்படையில் அமைக்கப்பட்ட குறித்த குழுவினால் வெளியிடப்பட்ட விசாரணை அறிக்கையை தற்போதைய புதிய அரசாங்கத்தின் மீதுள்ள நம்பிக்கை காரணமாக பிற்போடுவதற்கு மனித உரிமைகள் சபை இணக்கம் தெரிவித்தது.

எனினும், உள்ளக விசார ணையை நடத்துவது குறித்து இன்னும் தீர்மானிக்கப்பட வில்லை. ஏற்கனவே அமைக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழு மற்றும் காணாமற் போனோர் தொடர்பான விசாரணைகளை முன்னெடுக்கும் ஜனாதிபதி ஆணைக்குழு ஆகியவற்றின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த எண்ணியுள்ளோம்.

வெலிக்கடை சிறையில் 182 தமிழ் அரசியல் கைதிகளே உள்ளனர். அவர்களை மன்னார் ஆயரும் நேரில் சென்று பார்வையிட்டார். இவர்களின் விபரங்களை சட்டமா அதிபரிடம் கேட்டிருக்கின்றோம். பாலேந்திரன் ஜெயக்குமாரி குறித்த விபரங்களையும் கேட்டிருக்கின்றேன்.

காணாமற் போனோர் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. திருகோணமலையில் கொலை செய்யப் பட்ட மாணவர்கள் குறித்த நடவடிக்கை எடுப்பதற்கான ஆலோசனையை நிபுணர் குழுவிடம் கேட்டிருக்கின்றோம். அதே போல கொலைசெய்யப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க தொடர்பான விசாரணைகளையும் விரைவுபடுத்துமாறு பணித்துள்ளோம் என்றார்.

## நிலத்தடி...

இரசாயனக் கூறுகள், மாசு பரவுவதைத் தடுக்கும் வழிமுறைகள் மற்றும் குடிதண்ணீரைத் தூய்மைப்படுத்தும் வழிமுறைகள் தொடர்பாக விரிவாக ஆராய்ந்து வருகின்றது இந்நிபுணர்குழு, ஆய்வின் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு வேறு துறைசார்ந்த நிபுணர்களின் ஆலோசனைகளை உடனுக்குடன் பெற்றுக்கொள்வதோடு தொழில்நுட்ப நிறுவ்னங்களிடம் இருந்தும் உதவிகளையும் பெற்று வருகிறது.

இதன் அடிப்படையில் தண்ணீரில் எண்ணெய் கலந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்ட இடங்களில் தண்ணீரின் மாதிரிகளைச் சேகரிப்பதற்காக ஏற்கனவே கொழும்பில் உள்ள கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் உதவியை நிபுணர்குழு நாடியிருந்தது. மத்திய அரசின் அங்கீகாரம் பெற்ற இந்நிறுவனம் வலிகாமத்தில் இருந்து நீர் மாதிரிகளைச் சேகரித்து கொழும்புக்குக் கொண்டுசென்று பகுப்பாய்வில் ஈடுபட்டுள்ளது.

நிலத்தடியில் எண் ணெய்க் கழிவு தேங்கியிருப்பின் அதன் சரியான அமைவிடத்தைக் கண்டறிவதற்கு தரையை ஊடுருவும் ரேடார் அவசியமானதாகும்.

இத்தகைய ரேடார் ஒன்றை நோர்வே அரசாங்கம் இலங்கை தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்துக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளதால், நிபுணர் குழு ரேடார் வசதியை ஏற்படுத்தித் தருமாறு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்திடம் விண்ணப்பித்திருந்தது.

இதன் அடிப்படையிலேயே கொழும்பில் இருந்து நோர்வே புவித் தொழில்நுட்ப நிறுவனத்தைச் சேர்ந்த ஆய்வாளர்கள் இலியாட் ரன்பிறிட்ஜ், ரஜீந்தர் குமார் பசின் ஆகியோரும் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த ஆய்வாளர்களான எச்.டி.எஸ்.பிறேமசிறி, தயான் முனசிங்க, சதுரங்கா குமாரசிறி, டி.எச்.வீஜே விக்கிரமா ஆகியோரும் வருகை தந்துள்ளனர்.

தரையை ஊடுருவும் ரேடாரைப் பயன்படுத்துவது தொடர்பான களநிலைகளை ஆராய்வதற்காக யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருக்கும் நோர்வே நிபுணர்கள் அடங்கிய குழுவினர் நேற்று வடக்கு அமைச்சர் பொ.ஐங்கரநேசனைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இச்சந்திப்பில் வடமாகாணசபை நியமித்த நிபுணர்குழுவைச் சேர்ந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பொறியியற் பீடத்தின் தலைவர் கலாநிதி அ.அற்புதராஜா, புவியியற்துறையைச் சேர்ந்த திட்டமிடலாளர் செ.ரவீந்திரன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தார்கள்.

இச்சந்திப்பின் பின்னர் நோர்வே நிபுணர்குழுவினர் வடமாகாண நிபுணர்குழுவினருடன் இணைந்து சுன்னாகம் மின் நிலையப் பகுதியையும் சென்று பார்வையிட்டுள்ளார்கள்.

## மனித உரிமை...

உள்ளன. ஆனால் அந்த சம்பவங்களோடு தொடர்புபட்ட அதிகாரக் குழுக்கள் மீது எந்தவிதமான, வலுவான நடவடிக்கைகள் எவையும் முன்னெடுக்கப்படவில்லை. மோதலின் போது இடம்பெற்றன என்று கூறப்படும் போர்க் குற்றங்கள் மற்றும் மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்களை விசாரிக்க ஐ.நா தலைமையிலான விசாரணை குழு நியமிக்கப்பட்டபோது பாதிக்கப்பட்ட மக்கள் தமக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையை கொண்டிருந்தனர்.

எனவே இலங்கையின் புதிய அரசாங்கம் ஐ.நா. விசாரணைக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டும். புதிய அரசின் நடவடிக்கைகள் சில திருப்தியளிக்கின்றன. குறிப்பாக நீதித்துறையின் சுதந்திரத்தை நிலைநாட்டுதல், கருத்துச் சுதந்திரத்தை ஏற்படுத்துதல் போன்ற நடவடிக்கைகள் நம்பிக்கைகளை ஏற்படுத்தியுள்ளன. எனவே இந்தப் புதிய அரசு மனித உரிமைகள் விடயத்திலும் பொறுப்புக்கூறும் என்று மன்னிப்புச்சபை நம்புகிறது. இலங்கையில் நீண்டகாலமாக இடம்பெற்ற போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

எனவே அங்கு இடம்பெற்ற மனித உரிமை மீறல்களை ஒரே இரவில் சீர்செய்துவிடமுடியாது. அதற்கான கால அவகாசம் தேவை. பல தசாப்தங்கள் நீடித்த போர் காரணமாகவே போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் குறித்த குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. இந்த குற்றச்சாட்டுக்களை தீர்க்க பல்வேறு நடவடிக்கைகள் தேவை. பரஸ்பர கலந்துரையாடல்களும் முக்கியமானவை. இலங்கையில் பெண்களுக்கெதிரான வன்முறைகளைத் தடுக்க, அதுகுறித்த கொள்கைளாக்கத்தில் சீர்திருத்தங்கள் தேவையாகவுள்ளன. சமீபத்தில் கூட சந்தேகத்திற்கிடமாக தடுத்துவைக்கப்பட்ட ஒருவர் சிறையில் மரணமானார் என்று ஓர் அறிக்கை கூறுகிறது.

காரணமே இன்றி கைது செய்யப்படுபவர்கள் வருடக்கணக்கில் சிறைகளில் அடைக்கப்படுவதால் அவர்கள் மன ரீதியாகப் பாதிக்கப்படுகின்றனர். எனவே இவ்வாறான பிரச்சினைகளைத் தீர்க்க அமைப்பு ரீதியான மீள் கட்டுமானங்களும், வெளிப்படைத்தன்மையுமே முக்கியமானவை. சிறந்த விவாதங்கள் மூலம் இலங்கையில் இருக்க்கூடிய பல பிரச்சினைகளுக்கத் தீர்வு காணமுடியும் என்று மன்னிப்புச்சபை தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

## அபிவிருத்திகளின்...

அவர் மேலும் தெரிவிக்கையில், நீடித்த ஆட்சியில்தான் எமது மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியுமென்பதுடன் யார் ஆட்சிக்கு வருகின்றார் களோ அவர்களுடன் பேசுவதன் ஊடாகவே பிரச்சினைகளுக்கு உரிய வகையில் தீர்வினைக் காணமுடியுமென்பதே எமது நிலைப்பாடாகும்.

எமது இந்த நிலைப்பாட்டுக்கு மாறாக கூட்டமைப்பினர் ஆட்சி மாற்றத்தின் ஊடாகவே பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியுமென்று கூறி வந்த நிலையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், முன்னைய அரசுடனான இணக்க அரசியல் ஊடாகவும், புரிந்துணர்வின் ஊடாகவும் பல்வேறுபட்ட அபிவிருத்திச் செயற்றிட்டங்களை எம்மால் முன்னெடுக்க முடிந்துள்ளது என்றும், எதிர்ப்பரசியலை முன்னெடுத்த கூட்டமைப்பினரால் கடந்த காலங்களில் எதையும் சாதிக்க முடியாமல் இருந்ததைப் போலவே இன்றும் அதேநிலையே தொடர்கிறது.

அத்துடன், கடந்த காலங்களில் மக்களுக்கு எதையும் பெற்றுக் கொடுக்காத கூட்டமைப்பினர் நிகழ் காலத்திலும், எதிர்காலங்களிலும் எதனையும் பெற்றுக் கொடுக்கப் போவதில்லையெனவும், இருக்கிறதை இல்லாமல் செய்யும் கைங்கரியங்களிலும், பலவீனப்படுத்தும் நடவடிக்கைகளிலுமே முனைப்புடன் ஈடுபட்டு வருவதாகவும் சுட்டிக்காட்டினார்.

இதனிடையே இனப்படு கொலை தொடர்பாக வட மாகாண சபையினால் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தின் சாதக, பாதகங்கள் மற்றும் கட்சியின் நிலைப்பாடு தொடர்பாக இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டு விரிவாக ஆராயப்பட்டது.

இந்நிலையில், மாற்றுத் தலைமை மற்றும் மாற்றுக் கட்சியென்ற வகையில் ஏற்படுத்தக் கூடியதும், வலுப்படுத்தக் கூடியதுமான மாற்றங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், வடக்கு மாகாண சபையின் ஆட்சி அதிகாரத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியதன் பின்னர் அவர்களால் கொண்டு வரப்பட்ட தீர்மானங்களில் இதுவரை நிறைவேற்றப்பட்டதும், நிறைவேற்றப்பட வேண்டியவை தொடர்பாகவும் கலந்துரை யாடப்பட்டது.

இந்நிலையில், இவ்வாறான கடந்த நிகழ்கால அனுபவங் களைக் கருத்தில் கொண்டு மக்களுக்கு உண்மையானதும், யதார்த்தமானதுமான கருத்துக்களை எடுத்துச் சொல்ல வேண்டியதும், மக்களுக்கான சேவைகளை அர்ப்பணிப்புட னும், நேர்மையுடனும் முன்னெடுப்பதற்கு பொறுப்புக்களை உணர்ந்து கொண்டு அனை வரும் ஒன்றிணைந்து உழைக்க் வேண்டுமெனவும் அவர் கேட்டுக் கொண்டார்.


## மரண அறிவித்தல்

### திருமதி சிறீபதி யோகேந்திரராணி
### (வீ.எம். வீதி, பருத்தித்துறை)



பருத்தித்துறை, வீ.எம்.வீதியைச் சேர்ந்த திருமதி சிறீபதி யோகேந்திரராணி நேற்று (25.02.2015) காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று பி.ப.4.00 மணிக்கு இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

தொடர்புக்கு
0772292758

(இ)

தகவல்:
கணவர் சிறீபதி


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 பெப்ரவரி 26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.